

# இறைத்தேன்

விபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைத்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எங்கே தூய ஆவியானவர் ஆழமாக வேருன்றி இருக்கின்றாரோ அங்கே முழுமையைப் பற்றிய தன்னுணர்வு மட்டும் அல்ல அதைப் பற்றிய செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகிறது. மானிடத்தின் அன்பையும், அழகையும், இரக்கத்தையும் அதன் உண்மை இயல்பையும் அறியும் வழியாக **இறைத்தேன்** அமைகின்றது.

ஆழ்ந்த உள்ளத் தெளிவில் வாழ வேண்டும் என்ற பேர் ஆர்வம் ஒரு சிலர் மத்தியில் மிகவும் தெளிவாக வெளிப்படுவதைக் இந்நாட்களில் கூர்மையாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

எங்கே தூய ஆவியானவர் ஆழமாக வேருன்றி இருக்கின் றாரோ அங்கே முழுமையைப் பற்றிய தன்னுணர்வு மட்டும் அல்ல அதைப் பற்றிய செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த செயற்பாடுகளிலே விழித்தெழு என்ற அறைகூவல் எம் எல்லோருக்கும் விடப்படுகின்றது. எதை நோக்கி விழித்தெழல் வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.

இந்த மானிடத்தின் இருப்பை, அதன் அன்பின் நிறைவை, அதன் அழகை, பணிவாழ்வின் தியாகத்தை நோக்கி விழித்தெழு என்ற அழைப்பு விடப்படுகின்றது. உன்னை மட்டும் பாதுகாக்கும் அந்த முயற்சியை விட, உன்னைவிடப் பரந்த விரிந்த வாழ்விற்காக உனை அர்ப்பணித்துவிடு என்ற அழைப்பு இந்த அறை கூவலில் உண்டு. தொடக்கமும் முடிவுமான கிறிஸ்துவின் நிறைந்த அன்பு எதையும் சாதிக்கக்கூடிய ஆற்றலாக, சக்தியாக, பலமாக உன்னுள் நிறைந்திருக்கின்றது. இதுவே எமது நம்பிக்கை!

அருட்பணி வின்சன் பற்றிக் அடிகளாரின் **இறைத்தேன்** எனும் நூலைப் படித்தபோது ஆழ்ந்த தன்னுணர்வை நோக்கி விழித்தெழு என்ற அறைகூவலை நோக்கியதாக இருப்பதை அறியமுடிந்தது. மானிடத்தின் அன்பையும், அழகையும், இரக்கத் தையும் அதன் உண்மை இயல்பையும் அறியும் வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைத்தேன் அமைகின்றது. நாளாந்த வாழ்க்கைக்கு வழிகாட்டும் பல நலமான கருத்துக்கள் இங்கே உள.

எல்லோரையும் இணைக்கின்ற பல தொடர்பாடல்களும் இளையோரின் இறைத்தேடல் அவசியமும் மன்னிப்பில் மலரும் மறுவாழ்வும் சீடத்துவத்தின் மேன்மையும் மாற்றத்தின் ஏற்றமும் இறைத்தேனில் நிறையவே உண்டு. இந்த இருபத்தோராம் நூற்றாண்டு, புதிய கண்ணோட்டத்துடன் எல்லோரையும் ஏற்று உள் அடக்கும். பற்றி எரிகின்ற ஒரு பரந்த மனதை எம்மிடத்தில் வேண்டி நிற்கின்றது. இது இந்த நவீன உலகில், இந்த நுகர்வுச் சமுதாயத்தில், கடவுளைப் புதிய வழியில், புதிய தோற்றத்தில், ஆழமாகப் பிரசன்னமாகி இருக்கின்றது.

இந்த இறைவனின் ஆழமான இருப்புத்தான் எம்மை உள்ளார்ந்தமாக இணைத்து இந்த இணைப்பை உருவாக்கும் சிந்தனைத் துளிகளாக வி.பி. இன் இறைத்தேன் அமைகின்றது. அவருடைய இறைத்தேன் எனும் நூலை யாவரும் பயனுள்ளதாகப் படித்து நலம் பெற, இதயபூர்வமாக வாழ்த்தி இறையாசிக்கின்றேன்.

*அருட்பணி ப.ஜெரோம் லம்பேட். அ.ம.தி.*
*முதல்வர்,*
*அமல உற்பவம்,*
*கொழும்புத்துறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எனக்குள் இருக்கும் என்னைக் கண்டுபிடித்து, பிறருக்குள், பிரபஞ்சத்துள், சுயவிருப்பத்தோடு கடந்து செல்வதே எமது வாழ்வின் இலக்காக அமைய வேண்டும். தற்சார்பற்ற நிலையில் நான் வாழ முனையும் பொழுது, 'நாம்' என்ற அன்புச் சமூகம் உதயமாகின்றது. தனிமனிதன் பிறரை அடக்கி ஆள எத்தனிக்கின்றான் எனின் தன்னையே தனக்கு அடிமையாக்கிவிட்டான் என்பதாகும்.

மனிதன் தன்னை, பிறரை, பிரபஞ்சத்தை அந்நியப்படுத்தி, சுயசிதைவை ஏற்படுத்தி வருகின்றான். அவன் உண்மையான அகப் பயணத்தை மேற்கொண்டு, தனக்குள் புதைந்திருக்கும் அற்புதங்களைக் கண்டுணர்ந்து, அக விடுதலையை எய்த முயற்சி எடுக்க வேண்டிய நிலையில் உள்ளான்.

'தொழில் நுட்பத்தில் மனிதன் நம்ப முடியாத அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளான். ஆயினும், பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் இருந்ததுபோலவே இன்னும் சண்டையிட்டுக் கொண்டு, பேராசையுடையவனாக, பொறாமையுடையவனாக, பெரும் துக்கத்தைச் சுமந்துகொண்டு வாழ்கின்றான்' என்று J. கிருஸ்ணமூர்த்தி 'வன்முறைக்கு அப்பால்' எனும் நூலில் எழுதினார்.

இந்நிலையை மாற்றி அமைப்பதற்கு நல்லுள்ளம் கொண்ட அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும். சிந்தனை மாற்றத்தைத் தோற்றுவித்து, பண்பாட்டுப் பரிணாமத்தைப் பதிவு செய்ய வேண்டும். புதுவாழ்வுப் பயணிகளாக வாழப் புத்தூண்டல் பெற்று. பிரிவினை வாதத்தை நீக்க வேண்டும். அகங்காரம், முரட்டுப் பிடிவாதம் போன்றவற்றை முறியடிக்க வேண்டும். உலக ஈர்ப்புக்களால் கவரப்பட்டு, நுகர்வுக் கலாசாரத்தால் மூழ்கடிக்கப்படும் அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

அன்பர்களையும் பகைவர்களையும் தர்மர்களையும் துரியோதனன்களையும் வள்ளல்களையும் கள்வர்களையும் வீரபாண்டியன்களையும் எட்டப்பர் கூட்டத்தினரையும் ஒருங்கே பார்க்கும் மனோபாங்கு மனமுதிர்ச்சியின் அடையாளமாகும். எல்லோருடனும் சமநிலையில் பழகும் பாங்கு மனப்பக்குவத்தையே எண்பிக்கின்றது. அன்பும் பண்பும் பணிவும் பரிவும் புரிந்துணர்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரை மதித்தலும் ஆழப்படுத்தப்பட்டு வாழப்படும் நிலையே மனித வாழ்வின் மேன்மையாகும்.

மனிதம் மலர்ந்திட, மனித மாண்பு மேம்பட, அனைவரும் சேர்ந்து உழைப்போம். சிறுவர்கள், இளையோர் போன்றோர் விழுமியக் கல்வியை ஒழுங்காகக் கற்று உயர்ந்திட வழிசமைப்போம். நல்ல எண்ணங்கள் நல்ல உணர்வுகளை உருவாக்கும் என்பதைப் புரிந்துகொண்டு மனத்தின் மாட்சியைத் தோற்றுவித்து மாற்றத்தில் ஏற்றத்தைக் காண்போம்.

இந்நூலை வாசித்து, என்னோடு பயணித்த உங்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளும் நல் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்!

அமைதியின் தூதுவராய் அவனியில் வாழ்ந்திடுங்கள்!
நெருப்பாக மாறித் தீயதை எதிர்த்திடுங்கள்!
இருளினைப் பழிக்காது வெளிச்சத்தை ஏற்றிடுங்கள்!
இதயத்தில் வெளிச்சமேற்றி இறுதிவரை எரியுங்கள்!
அலகையினை அழித்து, உலகின் ஒளியாகுங்கள்!

- வி.பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | புதிய ஆண்டிற்கான ஆசீர் | 09 |
| 02. | இறைவா, என்னை மாற்றியருளும்! | 11 |
| 03. | விருந்தோம்பலின் விழுதுகள் நீங்களே! | 13 |
| 04. | இதயபூர்வமான தொடர்பாடல் | 16 |
| 05. | கருணை மழை பொழிதல் | 18 |
| 06. | நம்பிக்கையே நல்வாழ்வின் ஊற்று | 20 |
| 07. | இளையோரே! இறைதேடலில் ஈடுபடுங்கள்! | 22 |
| 08. | இறை ஆட்சி மலரட்டும்! | 25 |
| 09. | அன்பில் மலரும் திருச்சபை | 28 |
| 10. | ஆவியில் எழுப்பப்படும் திருவாழ்வு | 29 |
| 11. | மன்னிப்பில் மலரும் மறுவாழ்வு! | 31 |
| 12. | புனர்வாழ்வு வழுங்கல்! | 34 |
| 13. | புனித கன்னிமரியாவின் விண்ணேற்பு | 36 |
| 14. | குடும்பம் ஒரு கோவில்! | 38 |
| 15. | இல்லற அப்போஸ்தலிக்கப் பணி | 40 |
| 16. | பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக... | 43 |
| 17. | சீடத்துவ நல்வாழ்வு | 46 |
| 18. | புதுப் பயணம் | 49 |
| 19. | இறைவனின் பேரன்பு | 56 |
| 20. | என்றுமே நன்மை செய்பவர் | 59 |
| 21. | நல்வாழ்வு நல்கும் நற்கருணை | 62 |
| 22. | மலைப்பொழிவு | 64 |
| 23. | நல்ல தலைவர்கள் | 69 |
| 24. | சாதனையாளர்கள் | 71 |
| 25. | மாற்றத்தில் ஏற்றம் | 74 |
| 26. | இறைவனில் நிறை உறவு | 77 |
| 27. | உண்மையாம் இயேசுக் கிறிஸ்து | 80 |
| 28. | நான் நானாகவேண்டும் | 83 |
| 29. | வாழ்க்கை வாழ்வதற்கே | 87 |
| 30. | இறைவனின் வளப்படுத்தும் வல்லமை | 94 |
| 31. | படைப்பு ஆசீர்வாதமாகட்டும் | 98 |
| 32. | தரணி தரும் தாழ்மையும் எளிமையும் | 101 |
| 33. | வெறுமையாக்கி நிறைவாதம் | 104 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இறைத்தேன் |
| ஆசிரியர் | : | கலாநிதி டேவிற் வின்சன் பற்றிக், அ.ம.தி. |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| பக்கங்கள் | : | 106 |
| பதிப்பு | : | ஆனி 2020 |
| வெளியீடு | : | யாழ். அமலமரித் தியாகிகள் சபை |
| அச்சகம் | : | புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம். |
| விலை | : | 250/- |
| பொருள் | : | ஆன்மீகம் - கிறிஸ்தவ அறநெறிக் கோட்பாடுகளை நடைமுறைரீதியாக வெளிக்காட்டி நிற்கின்றது இந்நூல். இயேசுக்கிறிஸ்து காட்டிய வாழ்க்கைத் தத்துவங்களை வாழ்வாக்கி, கிறிஸ்தவர்களை நல்ல கிறிஸ்தவர்களாக வாழ்விக்க 'இறைத்தேன்' தூண்டுவிக்கின்றது. |

| | | |
|---|---|---|
| **Title** | **:** | **Iraiththean** |
| Author | : | Dr. David Vincent Patrick, OMI |
| Copyright | : | Author |
| Publication | : | June 2020 |
| Pages | : | 106 |
| Publication | : | Jaffna Oblate Province |
| Press | : | St.Joseph's Catholic Press, Jaffna |
| Prize | : | 250/- |
| Content | : | Spirituality<br>This book explains the Christian ethics in practical terms. This book motivates the<br>Christians to lead a good life. Positive and wholistic life is promoted opening up the hearts of all to embrace life devotedly. |
| ISBN | : | ISBN 978-955-71434-2-2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. புத்தாண்டு ஆசீர்

இறைவனின் அன்னையாம் புனித மரியாவுக்கு விழா எடுத்து, புத்தாண்டின் ஆரம்பத்தில் இறைவனைச் சந்திக்க ஒன்று கூடியுள்ளோம். அன்னை கன்னி மரியா எம் எல்லோரதும் தாயாகத் திகழ்கின்றார்.

எண்ணாகமம் 6:22-27 மூவகை ஆசீர்வாதங்களை இறைவன் இஸ்ராயேல்மேல் பொழிவதாக விளக்குகின்றது.

1 வது, ஆண்டவர் உனக்கு ஆசிவழங்கி, உன்னைக் காப்பாராக.

2 வது, ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச் செய்து, உன்மீது அருள்பொழிவாராக.

3வது, ஆண்டவர் தம் திருமுகத்தை உன்பக்கம் திருப்பி, உனக்கு அமைதி அருள்வாராக.

இவ்வாறு, காத்தல், அருள்பொழிதல், அமைதி அருளல் ஆகிய மூன்று செயற்பாடுகளும் ஆசீரின் மூன்று அம்சங்களைக் குறிக்கின்றன. ஆசீர் வழங்கல், திருமுகத்தை ஒளிரச்செய்தல், திருமுகத்தைத் திருப்புதல் ஆகிய மூன்றும் ஒரே கருத்தைக் குறிக்கும் சொற்றொடர்களாகும். அன்று இஸ்ராயேல் மக்கள்மீது பொழியப்பட்ட இறைஆசீர் இன்று உலகமக்கள் அனைவர்மீதும் நிறைவாகப் பொழியப்படுகின்றது. "கடவுளே, எம்மீது இரங்கி எமக்கு ஆசி வழங்குவீராக! உமது திருமுக ஒளியை எம்மீது வீசுவீராக!"(திருப்பாடல் 67:1).

கலாத்தியருக்கு புனித பவுல் எழுதிய திருமுகம் 4:6 இன்படி ஆவியானவரின் வல்லமை எமக்குள் புகுத்தப்பட்டதால் இறைவனை 'அப்பா, தந்தாய்' எனக் கூவி அழைக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றோம். அடிமைத்துவநிலை நீங்கி ஆண்டவருக்கு உரித்தானவர்களாக, நிபந்தனையில்லா அன்பில் வாழ்பவர்களாக, மனித மாண்போடு சங்கமிக்கும் சுதந்திரப் பிரியர்களாக வாழும் பாக்கியத்தை உடமையாக்கிக் கொள்கின்றோம்.

ஒருமுறை உயர்தர மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றினை கொழும்பு மாநகரிலுள்ள பாடசாலை ஒன்றில் நடாத்திக்கொண்டிருந்தேன். அப்பொழுது, "உங்கள் உணர்வலைகளைக் குறிக்கும் ஓவியம் ஒன்று கீறித் தாருங்கள்" என்று பணித்தேன். அங்கு ஒரு மாணவி தான் கீறிய ஓவியத்தைக் காண்பித்து, "இது எனது வீடு. நான் அடிமையாகவே நாள்தோறும் வீட்டில் வாழ்ந்துவருகின்றேன். எனது அம்மா என்னோடு அன்பாகப் பேசுவதில்லை. வெறுப்புடன் என்னோடு நடந்துகொள்கின்றார். எனக்கு நிம்மதியே இல்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெருமூச்சு விட்டபடி நொந்துகொண்டார். இன்று வீடுகளிலும் வீதிகளிலும் மதுவிற்கு என்றும் போதைப் பாவனைக்கு என்றும் சூதாட்டத்திற்கு என்றும் ரிவி தொடர்நாடகத்திற்கு என்றும் கையடக்கத் தொலைபேசிக்கு என்றும் அடிமைப்பட்டு வீழ்ந்துகிடப்போருக்கு விடுதலை வழங்க விரைந்திடுவோம். சமுதாயத்து தீமைகளை வென்றிட வியூகம் அமைத்துப் போராடுவோம்.

புனித பேதுரு தனது முதற் திருமுகத்தில் (1பேதுரு 3:9-13) பின்வரும் ஆறு வேண்டுகொள்களை முன்வைக்கின்றார்:

1. நீங்கள் அனைவரும் ஒருமனப்பட்டிருங்கள்.
2. பிறரிடம் இரக்கமும் சகோதர அன்பும் பரிவுள்ளமும் மனத்தாழ்மையும் கொண்டிருங்கள்.
3. ஆசி கூறுங்கள்.
4. தீமையை விட்டு நன்மை செய்யுங்கள்.
5. ஆண்டவரைத் தூயவர் எனப் போற்றுங்கள்.
6. பணிவோடும் மரியாதையோடும் விடை பகிருங்கள்.

லூக்கா 2:16-21 பகுதியின்படி இடையர்கள் தீவனத் தொட்டியில் குழந்தை இயேசு கிடத்தியிருப்பதைக் கண்டார்கள். தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்ட குழந்தை இயேசு தான் உலகமக்கள் அனைவருக்கும் உணவாக வந்தவர் என்பதை வெளிப்படுத்துகின்றார். இடையர்கள் தாம் கண்டவை, கேட்டவை குறித்து, கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டே வீடு திரும்பினார்கள். குழந்தை இயேசுவை நேருக்கு நேர் தரிசித்த இடையர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினார்கள். நாமும் அன்றாட வாழ்வில் குழந்தை இயேசுவைச் சந்தித்தவர்களாய், சிந்தித்து புதுவாழ்வில் பயணிப்போம். 'இயேசு' எனும் நாமத்தை உச்சரித்து, பேரின்பத்தைச் சுவைத்து இன்புறுவோம்.

நல்லபடி வாழ நாம் ஒருவர் ஒருவருக்கு நல்வாழ்த்துக்கள் கூறி, இறை உறவில் நிறைவு காண, நாம் ஒருவரை ஒருவர் வாழ வைப்போம். இறைவனின் சாயலாக படைக்கப்பட்ட நாம் ஆண்டு தோறும் இறைவனுக்குரிய காரியங்களில் ஆர்வத்தோடு ஈடுபட்டு, மனிதத்தை மாண்புறச் செய்து, நாளாந்தம் நற்செய்தி சொல்லி மகிழ்வுறுவோம்.

இனிய நன்நாளாக எந்நாளும் அமைந்திடவே இறைதாழ் பணிந்து, அன்புருக வேண்டி இறைவனிடம் சரணடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இறைவா, என்னை மாற்றியருளும்!

"எல்லா மனிதர்களுக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது" (தீத்து 2:11) என்று புனித பவுல் கிறிஸ்துவின் உலகளாவிய நற்செய்தியினை உறுதிப்படுத்துகின்றார். கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்ற மறைபொருள் கிறிஸ்து இயேசுவில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது

திடீரென்று ஆண்டவரின் தூதர் அவர்கள் முன் வந்துநின்றபோது ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது (லூக்கா 2:9).

"குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத்தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" (லூக்கா 2:11) என்ற வானதூதரின் கூற்று இயேசுவின் புரட்சிகரமான பிறப்பின் உட்பொருளை வெளிக்காட்டி நிற்கின்றது.

நான் என்னை மாற்றவேண்டும் எனில் எங்கிருந்து ஆரம்பிப்பது? உலகில் பலர் வெளியரங்க மாற்றத்திலேயே கவனம் செலுத்துகின்றார்கள். வெளியரங்க மாற்றத்தைவிட உள்ளரங்க மாற்றம் மிகவும் கடினமானது. எனினும் உள்ளரங்க மாற்றத்தைத் தோற்றுவிப்பதுதான் அவசியமானது.

"இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது. எது உகந்தது. எது நிறைவானது என்றும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்"

(உரோ. 12:2) என்று புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடுகின்றார்.

அறிவு மட்டும் எம்மை இரட்சிக்காது. அறிவு மட்டும் எம்மை மாற்றாது. வருத்தம் இன்றித் திருத்தம் இல்லை. வருத்தத்தை அனுபவித்தே திருத்தத்தை எதிர்கொள்ளலாம். மனங்கள் புதுப்பிக்கப்படும்பொழுது மறுமாற்றம் அடைவது சாத்தியமாகின்றது. இது எப்படி நிகழ்கின்றது?

**1. உள்ளக ரீதியாக நான் மாற்றம் அடையவேண்டும்.**

ஒரு மயிர்கொட்டி வண்ணாத்திப் பூச்சியாக மாற்றும் அடைவதுபோல நானும் என்னில் ஒருங்கிணைந்து உள்ளக மாற்றத்தைத் தோற்றுவிக்க வேண்டும். "இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிக் கொண்டுபோனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்தச் சலவைக்காரரும் வெளுக்கமுடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளிவீசின" (மாற்கு 9:2-3). இயேசு இயேசுவாகவே மறுமாற்றத்தின்பொழுது காணப்பட்டார். இயேசு தனது மனிதநிலையை, அடிப்படை இயல்பை இழந்துவிடாமல் அவர் கடவுளாயும் மனிதனாயும் இருந்தார் என்ற நிலைபாட்டை உறுதிப்படுத்தினார்.

"என் அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். அவர் தோன்றும்பொழுது நாமும் அவரைப்போல இருப்போம். ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்" (1யோவான் 3:2).

"தம்மால் முன்னே தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கு ஏற்றவாறு இருக்கவேண்டும் எனக் கடவுள் முன்குறித்து வைத்தார்" (உரோ.8:29) என்று புனித பவுல் மீட்பின் திட்டத்தை தெளிவுபடுத்தினார். நான் நிறைவுபெற்ற முடிவுப் பொருள் அல்ல. மாறாகத் தொடர்ந்து மாற்றத்திற்கு, உருவாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டுவரும் இயேசுவின் உடனுழைப்பாளி. இந்த இலக்குநோக்கிய பயணத்தை நிறைவாக்க இறைவன் என்னில் செயற்படுகின்றார்.

எனது பலவீனங்களில் கவனம் செலுத்தினால் நம்பிக்கையை இழந்து விடுவேன். இறைவனின் பிரமாணிக்கமான தன்மையில் கவனம் செலுத்தினால் நம்பிக்கையின் நட்சத்திரமாய் பிரகாசிப்பேன். கடவுள் தாம் தொடங்கிய அலுவல்களை முடிப்பதற்கு ஆற்றலோடும் ஆர்வத்தோடும் உள்ளேனா? நான் ஒத்துழைப்பு நல்க தயார் நிலையில் உள்ளேனா?

**2. எனது மனத்தை மீள் ஒழுங்கு செய்யவேண்டும்.**

நானே எனது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் நிலையை மாற்றியமைக்க எனது ஆசையும் ஒழுங்குபடுத்தலும் ஒருங்கிணைய வேண்டும். எனது மனம் இயேசுவின் மனப்பான்மையோடு இசைவுறும் பொழுது நான் இயேசுவின் பிரதிபலிப்பாக உருமாற்றம் அடைகின்றேன்.

எனது ஆற்றல்களுக்கு, எனது வாழ்வியல் மதிப்பீடுகளுக்கு மீள் வடிவம் கொடுக்க வேண்டும். 'எனக்குள் இருக்கும் இயேசு, இயேசுக்குள் இருக்கும் நான்' என்ற ரீதியில் எனக்கும் இயேசுவுக்கும் இடையேயுள்ள பரஸ்பர உறவு பலப்படுத்தப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. விருந்தோம்பலின் விழுதுகள் நீங்களே!

அன்பு நெஞ்சங்களே!

அவனியில் சிறப்புற்று வாழ ஆண்டவர் பெயரால் வாழ்த்துக்கள்!

இருப்பதிலிருந்துதான் கொடுக்கமுடியும். இல்லாமையிலிருந்து எதையும் கொடுக்க இயலாது. இறைவன் ஏற்கனவே நிறை வளங்களைக் கொடுத்து விட்டார். எனவே, இறைவன் தந்ததிலிருந்து பிறருக்குக் கொடுக்கமுற்படுங்கள்.

"கெட்ட கனிதரும் நல்ல மரமுமில்லை. நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். நல்லவர் தன் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்" (லூக்கா 6:43-45).

**விருந்தோம்பலை வளர்ப்பதற்கான ஏழு வழிமுறைகள்:**

**1. இறைவனின் வலிமைமிகு விருந்தோம்பலையே எப்பொழுதும் மனதில் நினையுங்கள்.**

கிறிஸ்துவின் மூலமாக வெளிக்காட்டப்படும் இறைவனது கொடுத்தல் நீங்கள் நாளாந்தம் கொடுத்துவாழவேண்டியதன் அவசியத்தைத் தூண்டுவிக்கின்றது.

"உங்களிடமுள்ளது அனைத்தும் நீங்கள் பெற்றுக்கொண்டவைதானே! பெற்றுக் கொண்டும் பெற்றுக்கொள்ளாததுபோல் பெருமை பாராட்டுவது ஏன்?" (1கொரி. 4:7).

**2. உலக செல்வங்களை முதன்மைப்படுத்தாது இறைதேடலில் ஊக்கம் காட்டுங்கள்.**

"அனைத்திற்கும் மேலாக இறைவனது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவை அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்"(மத்தேயு 6:33). இறைவனது தாராளமான வள்ளல்தன்மையை, உலக மீட்பிற்காக இயேசு சிலுவையில் தன்னைத் தானே தாரைவார்த்துக் கொடுத்ததை, அர்ப்பணப் பூக்களாய் புனிதர்கள் இறைவனின் தோட்டத்தில் மலர்ந்து மணம் பரப்புவதை அடிக்கடி மனதில் பதியுங்கள்.

**3. இறைவனது நிபந்தனையில்லாக் கொடுத்தலை மாதிரியாக்குங்கள்.**

நிபந்தனையில்லாக் கொடுத்தல் இறைவனது இயல்பாகும். இறைவனது இந்த இயல்பான பண்பினை உங்களுடையதாக்கிக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது நிபந்தனையில்லாக் கொடுத்தல் இலகுவாகின்றது. உங்களது மனப் பான்மை இறைவனது மனப்பாங்கை ஒத்ததாகி வலுப்பெறுகின்றது.

**4. உலக செல்வங்களை அளவீடாகக் கொண்டு செயற்படாதீர்கள்.**
உலக செல்வங்களைச் சேர்ப்பதையே இலக்காகக் கொண்டு இயங்கு பவர்கள். ஈற்றில் தம்மையே இழந்து விடுவார்கள். "கடவுள் முன்னிலையில் செல்வம் இல்லாதவர்களாய் தமக்காகவே செல்வம் சேகரிப்போர் இத்தகை யோரே" (லூக்கா 12:21).

**5. இயல்பான விருந்தோம்பலில் ஆர்வம் காட்டுங்கள்.**
நலமான வாழ்விற்கு ஒரே ஒரு வழி கொடுத்தலும் கொடுத்துக் கொண்டே இருப்பதுமாகும். உங்களிடமுள்ளவற்றைத் தாராள மனப்பான்மை யோடு கொடுக்க முன்வருவது உங்களது ஆரோக்கியமான வளர்ச்சியையே வெளிப்படுத்துகின்றது.

**6. கொடுத்தலுக்கான அளவீடுகளை அதிகரியுங்கள்.**
இறைக்க இறைக்க ஊறும் கிணறுபோல கொடுப்பாரின் மனதில் மகிழ்ச்சி வெள்ளம் ஆறாய் பெருக்கெடுத்தோடும். உள்ளன்போடு கொடுத்தல், உவகையோடு கொடுத்தல், எதிர்பார்ப்பின்றிக் கொடுத்தல் போன்றவை கொடுத்தலின் சிறப்பான அளவீடுகளாகும். 'கொடுப்பாருக்குக் குறையில்லை' என்பது நல்வாழ்விற்கான ஊற்றாகும்.

**7. செயற்பாட்டுக்குச் சமனாக மனோபாங்கு முக்கியமானது எனக் கற்றுக்கொண்டு கற்பியுங்கள்.**
"கொடுப்பவர் ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக் கட்டும்! மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்கவேண்டாம். முக மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர். கடவுள் உங்களை எல்லா நலன்களாலும் நிரப்பவல்லவர். எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் உங்களுக்குத் தருவார். அனைத்து நற்செயல்களையும் செய்வதற்குத் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார்" (2கொரி 9:6-8).

"இவ்வுலகில் செல்வர்களாய் இருப்பவர்களுக்கு இவ்வாறு கட்டளை யிடு. அவர்கள் மேட்டிமையுணர்வு கொள்ளலாகாது. நிலையில்லாச் செல்வத்தில் நம்பிக்கை வைக்காமல் நம்முடைய இன்பத்திற்காகவே எல்லாவற்றையும் நிறைவாக அளிக்கும் கடவுளை மட்டுமே எதிர்நோக்கி இருக்கவேண்டும். அவர்கள் நல்லதைச் செய்து நற்செயல்கள் எனும் செல்வத்தைச் சேர்ப்பார்களாக. தங்களுக்குள்ளதைத் தாராள மனத்தோடு பகிர்ந்தளிப்பார்களாக" (1திமொத்தேயு 6:17-18). இவ்வாறு புனித பவுல் செல்வந்தர்கள் எத்தகைய மனப்பான்மையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்கவேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்து இயம்புகின்றார்.

எந்தவொரு நல்ல செயற்பாடும் நல்ல மனோபாங்கு உருவாக்கத்தின் பின்னணியில் அமையவேண்டும். கிறிஸ்துவின் மனப்பான்மையையே உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். அவரது மனப்பான்மையில் உங்களது மனப்பான்மையை வடிவமைத்துக் கொள்ளுங்கள். இயேசுக் கிறிஸ்து பரிவன்பில், பணிவில், பரோபகாரத்தில், பகிர்தலில், பாசத்திற்குரிய பணியாள் தன்மையில், இதயபூர்வமான தொடர்பாடலில் சிறந்து விளங்கினார்.

இயேசு ஏழைகளுக்கு உணவு அளிக்கவில்லை. மாறாக அவர் ஏழைகளைத் தனது மேசைக்கு அழைத்தார். இயேசு மற்றவர்களுக்குத் தண்டனை வழங்காமல், மற்றவர்களைக் கீழ்நோக்கிப் பாராமல், எல்லோரையும் வரவேற்று அருள் வழங்கி, ஆதரிப்பதிலே உன்னிப்பாகச் செயற்பட்டார். எல்லோருக்கும் எல்லாமாக இருந்து, இயேசு எம் நல்வாழ்வுக்கு விருந்தாகின்றார்.

*மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் ஒளிவிழா இடம்பெற்றது. ஈற்றில் கிறிஸ்மஸ் பப்பா மேடையில் தோன்றி ஆடிக்கொண்டிருந்தார். அப்பொழுது ரொபிகளை மக்கள் மீது அவர் அள்ளி வீசினார். அவ்வேளை பல ரொபிகள் மேடையில் தடக்குப்பட்டுக் கிடந்தன. ஒரு சிறுமி மேடையில் அமைதியாக ஏறி ஏழு, எட்டு ரொபிகளைப் எடுத்துக்கொண்டு கீழ் இறங்கிவந்து மற்றைய மாணவர்களுக்குப் பகிர்ந்தளித்தாள். அவள் தனக்கென்று எதையும் எடுக்கவில்லை.*

*விருந்தோம்பலின் விடிவெள்ளி வாழ்க!*

*இயேசு ஏழைகளுக்கு உணவு அளிக்கவில்லை. மாறாக அவர் ஏழைகளை மேசைக்கு அழைத்தார். எல்லோரையும் வரவேற்று, அருள் வழங்கி, ஆதரித்தார்.*

*எல்லோருக்கும் எல்லாமாக இருந்து, நல்வாழ்வின் விருந்தாகினார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இதயபூர்வமான தொடர்பாடல்

இதயத்திலிருந்து எழும் தொடர்பாடல் இதயபூர்வமான தொடர்பாடல் என அழைக்கப்படுகின்றது. டாக்டர் மார்சல் றொசன்பேர்க் தொடர்பாடலை வன்முறை யான தொடர்பாடல், வன்முறையற்ற தொடர்பாடல் (இதயபூர்வமான தொடர்பாடல்) என அழைக்கின்றார். வன்முறையான தொடர்பாடலை விளக்கும் அடையாள விலங்கு நரி எனவும் வன்முறையற்ற தொடர்பாடலை விளக்கும் அடையாள விலங்கு ஒட்டகச்சிவிங்கி எனவும் மார்சல் வர்ணிக்கின்றார். நரி கள்ளம், வஞ்சகம், நேர்மையீனம் போன்ற பண்புகளை வெளிப்படுத்துகின்றது. அது புலப்படுத்தும் உணர்வுகள் பயம், பதட்டம், கோபம், சோகம் போன்றவையாகும். ஒட்டகச்சிவிங்கி பரிவு, நேயம், தியாகம், விட்டுக்கொடுத்தல், விளங்கிக்கொள்ளல் போன்ற பண்புகளைக் குறிப்பிடுகின்றது. வன்முறையற்ற தொடர்பாடலை வெளிக்காட்டும் உணர்வுகள் இரக்கம், விருந்தோம்பல், மகிழ்ச்சி, நன்னயம், நாணயம் போன்றவையாகும். இனிமையான, இதமான, கனிவான பேச்சு சுவையான உணர்வுகளையே தரும்.

1. "வாயின் சொற்கள் உமக்கு ஏற்றவையாய் இருக்கட்டும்! என் உள்ளத்தின் எண்ணங்கள் உமக்கு உகந்தவையாய் இருக்கட்டும்!"

(திருப்பாடல்19:14).

2. "பொல்லாரின் சொற்படி நடவாதவர் பாவிகளின் தீயவழி நில்லாதவர், இகழ்வோரின் சூழலில் அமராதவர், அவரே பேறுபெற்றோர். அவர் நீரோடை நடப்பட்ட மரம்போலிருப்பார்"

(திருப்பாடல் 1:1-3).

3. "ஆண்டவரை மகிழ்ச்சியுடன் வழிபடுங்கள்! ஆண்டவரே கடவுள் என்று உணருங்கள்! நன்றியோடு அவர் திருவாயில்களில் நுழையுங்கள்! நம்பத்தகுந்த கடவுளுக்கு நன்றி செலுத்தி அவரது பெயரைப் போற்றுங்கள்! ஏனெனில் ஆண்டவர் நல்லவர்! என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு!"

(திருப்பாடல் 100:2-5).

4. "கடவுளே உமது பேரன்பிற்கேற்ப எனக்கு இரங்கும். உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றத்தைத் துடைத்தருளும். தூயதோர் உள்ளத்தை என்னுள் படைத்தருளும். உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்"

(திருப்பாடல் 51:1,10).

இவ்வாறு தாவீது அரசன் மனம்மாறிய பின்னர் ஆன்மாவின் எழுச்சிக் கீதத்தைப் பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. "இஸ்ராயேல் வீட்டாரே, யூதா வீட்டாரே, புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்கின்றேன் என்கின்றார் ஆண்டவர். அவர்களுடைய மூதாதையரை நான் எகிப்தினின்று விடுவிப்பதற்காக அவர்களை நான் கைபிடித்து வழிநடத்திவந்தபோது அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கை போன்று இது இராது. அந்நாட்களுக்குப் பிறகு நான் இஸ்ராயேல் வீட்டாரோடு செய்துகொள்ளப்போகும் உடன்படிக்கை இதுவே. என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன். நான் அவர்கள் கடவுளாய் இருப்பேன். அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள் என்கின்றார் ஆண்டவர்"(எரேமியா 31:31).

6. "நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருளுவேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலினின்று கல்லான இதயத்தை எடுத்துவிட்டு சதையிலான இதயத்தைப் பொருத்துவேன்" (எசெக்கியேல் 36:26).

7. புனித அந்தோனியார் நிமினி தேசத்தில் போதித்தபோது பேசிய வார்த்தைகள்: "இயேசு நற்கருணைப் பேழையில் உங்களுக்காகக் காத்திருக்கின்றார். உங்களுக்குத் தனது அன்பைத் தரவிரும்புகின்றார். நீங்கள் அன்பைப் பதிலாகக் கொடுங்கள். அவரை அக்கடி சந்தியுங்கள். அவர் உங்களை ஏமாற்றமாட்டார்." நற்கருணைமீது ஆழ்ந்த பற்றுக்கொண்ட புனித அந்தோனியார் இயேசுவோடு இரண்டறக் கலந்தவராய், எல்லோருடனும் இதயபூர்வமான மொழி பேசினார்.

கடும் காய்ச்சலின் காரணமாக மொறொக்கோ தேசத்திலிருந்து புனித அந்தோனியார் கப்பல் ஏறுகையில் மொழிந்த வார்த்தைகள்: "இயேசுவே, என் எசமானே! என்னை, என் மனதை, என் இதயத்தை, என் விருப்பத்தை உமக்கே கொடுக்கிறேன். உமது நற்செய்தி வெளிச்சத்தைப் பரப்பிட என்னைப் பயன்படுத்தும். சிறிதும் குறையாமல் என்னிடமுள்ள எல்லாவற்றையும் உமக்கே கையளிக்கிறேன்." இன்று இதயபூர்வமான தொடர்பாடல் எல்லா மட்டங்களிலும் முன்னெடுக்கப்படவேண்டும். எல்லா வாய்களும் இன்மொழியே பேசி, தூய்மையாய் வாழவேண்டும்.

*எவரையும் மட்டம் தட்டாது, எல்லோருடனும் சமநிலையில் உறவுகொள்ள சந்தோசமாக உறவுப் பரிமாற்றத்தை மேற்கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. கருணை மழை பொழிதல்

கனிந்த உள்ளத்தோடு நீங்கள் கருணை மழை பொழிய ஆரம்பித்ததும் கடவுளுடன் இணைந்து களிப்புறுவீர்கள். நீங்கள் காண்பது, கேட்பது, பேசுவது, உணர்வது எல்லாம் உங்களது நல்உள்ள வெளிப்பாடாக அமைவதை அனுபவித்து அறிந்துகொள்வீர்கள். புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகம் 6:1-10 பகுதியில் பின்வருமாறு விளக்குகின்றார்.

**1. கனிந்த உள்ளத்தோடு தவறு செய்தோரைத் திருத்துங்கள்.**

தண்டிப்பது வேறு. திருத்துவது வேறு. தண்டிப்பதன் ஆதாரம் கோபம். திருத்துவதன் ஆதாரம் அன்பு. திருத்தந்தை 2ம் யோண் பவுல் 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 13ம் திகதி முகமது அலி அக்க என்பவரால் சுடப்பட்டார். ஆறு மணித்தியால அறுவைச் சிகிச்சையின் பின்னர் ஓரளவு நலமடைந்ததும் திருத்தந்தை சிறைச்சாலையில் கடும்காவலில் வைக்கப்பட்ட கைதியைக் காணச் சென்றார். தன்னைக் கொல்வதற்காகத் துப்பாக்கி ஏந்திய கைகளை அன்புடன் தாங்கிக்கொண்டு திருத்தந்தை திருவாய் மொழிந்தார்:
"முகமது அலி அக்க! நீ என் அன்புச் சகோதரன்.
உன்னை என் இதயத்தின் அடியிலிருந்து மன்னித்துவிட்டேன்."

**2. சோதனைக்கு உள்ளாகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.**

வாழ்வில் சோதனைகள் வருவது சகயம். எனினும், சோதனையை வென்று சாதனை படைத்திடவே முயற்சி எடுங்கள். சோதனையைத் தவிர்ப்பதற்கு முன்கட்டமாக தவறான நண்பர்கள், தவறான சந்தர்ப்ப சூழ்நிலைகள், தவறான பழக்க வழக்கங்கள் போன்றவற்றை முற்றுமுழுதாகப் புறநீங்கல் செய்யுங்கள்.

**3. மற்றவர்களது சுமைகளைத் தாங்கிக்கொள்ளுங்கள்.**

சுமை சுமத்துபவர்களாக அல்ல சுமைதாங்கிகளாகவே உங்களை ஆக்கிக்கொள்ளுங்கள். "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்"

(மத்தேயு 11:28-29).

**4. பெருமைப்படாதீர்கள்.**

"நான் பெருமையடையலாம் என்று கடவுளிடம் பலத்தைக் கேட்டேன். ஆனால் கீழ்ப்படியத் தாழ்மையைக் கற்கும்படி பலவீனமாக்கப்பட்டேன். நான் மனிதரின் புகழைப் பெறுவதற்காகக் கடவுளிடம் சக்தியைக் கேட்டேன். ஆனால் கடவுளின் தேவையை உணர எனக்குப் பலவீனத்தைத் தந்தார்" என்று மொழிந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதாஞ்சலி புகழ் இரவீந்திரநாத் தாகூர். உண்மையும் தாழ்மை யுமே உயர்வுக்கான ஏணிப்படிகள்.

**5. உங்களது செயல்களை ஆய்ந்துபாருங்கள்.**

உங்களை நீங்கள் ஆய்வுசெய்வது. உங்களது செயல்களை ஆய்வு செய்வது நீங்கள் பக்தியோடு முன்னெடுக்கும் அகப்பயணமாகும். உங்களது பலங்களையும் பலவீனங்களையும் சீர்தூக்கிப் பார்ப்பது உங்களது உள்ளகச் சக்தியை விழிப்படையச் செய்வதாகும்.

**6. தீமை விதைப்போர் தீயதையே அறுவடைசெய்வர்.**

நீங்கள் எதை விதைக்கின்றீர்களோ அதையே அறுவடை செய்வீர்கள். நஞ்சு விதையை விதைத்துவிட்டு எவ்விதம் நல்ல மரத்தை எதிர்பார்க்கமுடியும்?

**7. நன்மை விதைப்போர் நன்மையையே அறுவடைசெய்வர்.**

"கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை. நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். நல்லவர் தன் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்" (லூக்கா 6:43-45).

நீங்கள் நல்லவர் என்று சொல்லும் அளவிற்கு உங்களது நன்மைத் தனம் உங்களை வளப்படுத்தட்டும்!

நீங்கள் நல்லவராக வாழும்பொழுது பல நல்ல உள்ளங்கள் ஆர்வத்தோடு உங்களைத் தேடி வருவார்கள்.

*நீங்கள் உங்களிடம் இயல்பாயுள்ள நன்மைத்தனத்தை வெளிக்காட்டி, மகிழ்வுடன் வாழுங்கள்.*

*நீங்கள் கருணைமழை பொழியும் கடவுளின் பிரதிநிதிகளாக நாளாந்தம் வாழுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. நம்பிக்கையே நல்வாழ்வின் ஊற்று

தன்னில், தன்னகத்தேயுள்ள சக்திகளில், தனது ஆற்றல்களில், சதா சந்தேகம் கொள்பவன் தன்னையே நம்பமாட்டான். தனது சொந்த ஆற்றல்களில் அவநம்பிக்கை கொண்டு வாழ்பவன் வாழ்வின் பிடிப்பைக் குறைத்துக் கொள்கின்றான். இவ்வாறு தன்னம்பிக்கையின்றி வாழ்பவன், ஈற்றில் பிறரை நம்பாது, இறைவனை நம்பாது, நடுக்கடலில் தத்தளிக்கும் நீந்தத் தெரியாதவனுக்கு ஒப்பாவான்.

எனவே, நீங்கள் உங்களை நம்புங்கள். உங்களது ஆற்றல்களை நம்புங்கள். ஏனையவரை நம்புங்கள். இறைவனை நம்புங்கள். நம்பிக்கை தொடர் பரிமாற்றமாக இருக்கட்டும்! பல மலர்கள் நாரினால் இணைக்கப்பட்டு மாலையாவது போன்று உங்களது வாழ்வின் அசைவுகள் எல்லாம் நம்பிக்கை வளையங்களாகத் தொடுக்கப்பட்டு நல் வாழ்க்கை தொடரட்டும்!

பஸ்வண்டியில் ஏறியதும் பஸ் சாரதியை நம்புகின்றீர்கள். பலசரக்குக் கடைக்குள் நுழைந்ததும் கடைக்காரன் நச்சுப் பொருளுக்குப் பதிலாக நல்ல பொருளைத் தருவான் என நம்புகின்றீர்கள். இவ்வாறு அன்றாடம் நிகழ்வுறும் சாதாரண நிகழ்வுகளில் நம்பிக்கை கொள்வதால்தான் நீங்கள் நலமுடன் வாழ்கின்றீர்கள்.

ஆனால் எதிர்பாராவிதமாக இழப்புக்கள், வருத்தங்கள், வந்ததும் காலாதிகாலமாக நம்பிவந்த கடவுளையே நம்ப மறுக்கின்றீர்கள். மாயம், மந்திரம், பில்லி, சூனியம் என்று பித்தலாட்டம் ஆடுகின்றீர்கள். நம்பிக்கையீனம் நல்வாழ்க்கையையே ஆட்டம் காணவைக்கும் என்பதை மறந்துவிட்டீர்களா? நம்பிக்கை செயல்வடிவம் பெறவேண்டியதன் அவசியத்தைப் புனித யாக்கோபு பின்வருமாறு விளக்குகின்றார்:

"என் சகோதர சகோதரிகளே, தன்னிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது அவர்களது உடலுக்குத் தேவையானது எதுவும் கொடாது, உங்களுள் ஒருவர் அவரைப் பார்த்து, 'நலமே சென்று வாருங்கள்; குளிர் காய்ந்துகொள்ளுங்கள் பசியாற்றிக் கொள்ளுங்கள்;' என்பார் எனின் அதனால் பயன் என்ன? அதைப்போலவே நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாகிவிடும். உயிரில்லாத உடல்போல செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே" (யாக்கோபு 2:14-17, 26).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு மார்த்தாவிடம், "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும்போது என்னில் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார். இதை நம்புகிறாயா?" என்று கேட்டார். மார்த்தா இயேசுவிடம், 'ஆம் ஆண்டவரே, நீரே மெசியா! நீரே இறைமகன்! நீரே உலகிற்கு வரவிருந்தவர் என நம்புகிறேன்' (யோவான் 11:25-27). இவ்வாறு மார்த்தா இயேசுவின் மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையை வெளிக்காட்டி, நல்ல சீடத்தியாக வாழ்ந்து சான்று பகர்ந்தார்.

ஒருமுறை துரியோதனது தேவியும் கர்ணனும் விளையாடிக் கொண்டிருக்கையில், தேவி கணவனின் வரவறிந்து எழுந்தோட, கர்ணன் அவளது வஸ்திரம் பற்றி இழுக்க, மேலாபரணம் அறுந்து மணிகள் சிதறின. பெரும் பிழை செய்ததாக எண்ணி, அம்மணிகளைப் பொறுக்கிக் கோர்க்கலானான். பின்புறமாக வந்த துரியோதனன் முன்னே வந்து, "எடுக்கவா அல்லது கோர்க்கவா?" என்று கூறி மணிகளை எடுத்துக் கோர்த்து, மாலை கட்டுவதற்குப் பொறுமையோடும் பரிவோடும் உதவினான். இவ்வாறு துரியோதனன் தான் பொறுப்புள்ள கணவன் என்பதையும் நம்பிக்கைக்குரிய நண்பன் என்பதையும் ஒருங்கே நிரூபித்தான்.

நல் வாழ்விற்கான வழி நம்பிக்கையே!
இல் வாழ்க்கையில் இனியதும் அதுவே.
நல்வாழ்வின் ஊற்றாக நம்பிக்கையே சுரக்கின்றது
நம்பிக்கை செயல்வடிவம் பெறும்பொழுது
இல்வாழ்வு இனிதாகின்றது.

*பல மரங்கள் சேர்ந்து பூங்கா மலர்கின்றது.*

*பல மலர்கள் இணைக்கப்பட்டு மாலையாகின்றது.*

*பல நெற்கள் விதைக்கப்பட்டு வயலாகின்றது.*

*பல உதிரிகள் சேர்க்கப்பட்டு வாகனமாகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. இளையோரே! இறைதேடலில் ஈடுபடுங்கள்!

அன்பு இளம் நெஞ்சங்களே!
அவனியில் சிறப்புற்று வாழ ஆண்டவர் பெயரால் வாழ்த்துக்கள்!

அவசரமான உலகினிலே இறைவனைத் தேடும் காலம் அண்மித்துவிட்டது. உலக போக்கிலே. உலக செல்வங்களில் மட்டுமே கவனம் செலுத்தி உங்களை இழந்துபோகும் நிலைக்கு உள்ளாகவேண்டாம். அனைத்திற்கும் மேலாக, இறை செல்வத்தைத் தேடுவதில் உன்னிப்பாக ஈடுபடுங்கள்.

ஆறு வேண்டுகோள்களை புனித யாக்கோபு (5:7-10) தனது திருமுகத்தில் முன்வைக்கின்றார்:

1. **இறைவனுக்குப் பணிந்து வாழுங்கள்.**
2. **அலகையை எதிர்த்து நில்லுங்கள்.**
3. **இறைவனை அணுகிச் செல்லுங்கள்.**
4. **உங்கள் கைகளையும் உள்ளங்களையும் தூய்மையாக்குங்கள்.**
5. **ஆண்டவர்முன் உங்களைத் தாழ்த்துங்கள்.**
6. **ஆண்டவரின் வருகைக்காகப் பொறுமையோடிருங்கள்.**

இன்றைய உலகில் உள்ள உறவை இறைவனோடுள்ள உறவுக்கு ஒப்பிட முடியாது. உங்கள் ஒவ்வொருவரின் நன்மைக்காக உலகோடு பேரம் பேசிக் கலந்துரையாட வேண்டிய நிலையில் உள்ளீர்கள். உங்களது எல்லாக் காரியங்களிலும் நித்தியமானதையே தேடவேண்டியநிலையில் நிகழ்காலத்தை யும் எதிர்காலத்தையும் இணைத்து வாழவேண்டியவர்களாய் உள்ளீர்கள். எனவே, இறை இராட்சிய வருகைக்காகவும் இயேசு மகிமையோடு வரு வதற்காகவும் விழித்திருந்து செபியுங்கள்.

"நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் ஆண்டவரின் மகிமைக்காகவே செய்யுங்கள். நான் அனைத்திலும் அனைவருக்கும் உகந்தவனாய் இருக்கிறேன். நான் எனக்குப் பயன்படுவதை நாடாமல், பலரும் மீட்பு அடையும்படி அவர்களுக்குப் பயன்படுவதையே நாடுகிறேன்"(1கொரி. 10:31,33) என்று புனித பவுல் தனது மனமாற்றத்தின் பின்னர் கிடைத்த செய்தியைப் பகிர்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது ஒருவர் இயேசுவிடம் வந்து, "போதகரே, நிலைவாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். இயேசு அவரிடம், "நன்மையைப் பற்றி என்னை ஏன் கேட்கிறீர்? நல்லவர் ஒருவரே. நீர் வாழ்வடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடியும்" என்றார். அவர் "எவற்றை?" என்று கேட்டார். இயேசு, "கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சான்று சொல்லாதே, தாய் தந்தையை மதித்து நட. மேலும் உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக" என்று கூறினார். அந்த இளைஞர் அவரிடம், "இவை அனைத்தையும் நான் கடைப்படித்து வந்துள்ளேன். இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம்முடைய உடைமைகளையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்றார் (மத்தேயு 19:16-21).

நவீன கால அலகைகளாக மது, போதைவஸ்து, கையடக்கத் தொலைபேசி, இந்திய சினிமாப் படங்கள், நீலப் படங்கள் போன்றன காணப்படுகின்றன. அவை நாளும் பொழுதும் எல்லை தாண்டி, இளைஞர்களைப் பாதிப்பிற்கு உள்ளாக்கி வருகின்றன என்றால் அது மிகையாகாது. எனவே, இளையோரே, வரும் முன் காப்போராய் எச்சரிக்கையாய் நடந்து கொள்ளுங்கள். நல்வாழ்க்கை தொடர்பான தீர்மானம் எடுத்தல் உங்கள் கைகளிலேதான் தங்கியுள்ளது. உங்களுக்கு நீங்களே சாவுக்குழி தோண்டுவதா? வேண்டவே வேண்டாம் அன்பு நெஞ்சங்களே! அவதானமாய் இருந்துகொள்ளங்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரின் பின்னரான ஆறு வருடங்களில் மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் தொழில் துறைகள் முழுமையாக மேம்பாட்டை அடையாதநிலையில் மது பாவனை மட்டும் உச்ச நிலையில் இருக்கின்றது. மேலும், போதைப்பாவனை, போதைப்பாக்கு, புகைத்தல் போன்றனவும் உச்சத்தைத் தொட்டுவிட்டன என்றே கூறலாம். இவை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் மௌனமாக இருப்பதுடன் சமய, சமூக அமைப்புக்களும் மகளிர் அமைப்புக்களும் தொடர் மௌனத்தையே அனுஸ்டித்துவருகின்றன. ஆசிரியர்கள், பெற்றோர், சமயத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் போன்றோர் அக்கறையற்று இருப்பது மாணவர்கள் தடம்புரளச் செய்வதன் காரணமாகும். இளையோரே, நீங்கள் ஒன்றிணைந்து கோஸ்டிமோதல்கள், வாள்வெட்டுச் சண்டைகள், கலாச்சாரச் சீர்கேடுகள் போன்றவற்றை முறியடிக்க அணிசேருங்கள். சமுதாய மறுமலர்ச்சிச் செம்மல்களாய் உருவெடுத்து, அவனியில் சாதனையாளர்களாய் திகழுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக ஓர் உண்மைச் சம்பவம். இருவர் ஒரு கிராமத்திலுள்ள சாராயக் கடையிலிருந்து வெளியேறுகையில்.

ஒருவர்: "நீங்க எங்க போறீங்க?"

மற்றவர்: "நான் வீட்ட போறன்."

ஒருவர்: "நானும் வீட்டதான் போறன். உங்கட வீட்டிற்கான பாதை?"

மற்றவர்: "நேர போய், வலதால திரும்பி இடக்கையால திரும்பினா 3வது வீடு."

ஒருவர்: "அட என்ர வீடும் அதே பாதையிலதான் இருக்கு."

இருவரும் பேசியவாறே நடந்தார்கள். சிறிது நேரத்தின்பின்னர், ஒரு வீட்டுக் கதவில் இருவரும் தட்டினார்கள். அவ்வீட்டு அம்மா வந்து கதவைத் திறந்துகொண்டே,

"தகப்பனும் மகனும் வழமைபோல நல்லாக் குடிச்சிற்று வந்து நிற்கிறீங்க. எப்பதான் திருந்தப் போறீங்களோ?" என்று கதறினாள்.

**இளையோரே வாருங்கள்!**
**இறைவனைத் தேடுங்கள்!**
**அவர் புது வாழ்வு தருவார்.**
**உலக போக்கில் உங்களை இழந்து விடாது**
**இறை வழிகாட்டலில் ஒளி கொடுங்கள்.**

*வேசங்களை நாடி விட்டில் பூச்சிபோல்*

*நாசவலையில் சிக்கிடாது வாழ முயலுங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. இறை ஆட்சி மலரட்டும்!

இயேசு மலைப்பொழிவில் எட்டு நியமங்களை இறை இராட்சியம் புகுவதற்காக முன்வைக்கின்றார். அவையாவன:

1. "எளிய உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது"(மத்தேயு 5:3). தனது கையேலாத் தன்மையைக் கண்டுணர்ந்து இறைவனில் நம்பிக்கை கொள்வதே பேறுபெற்ற நிலையாகும்.
"இந்த ஏழை கூவி அழைத்தான். ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார். அவர் எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்துக் காத்தார்" (தி.பா.34:6).

2."துன்புறுவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்" (மத்தேயு 5:4).
"கடவுளுக்கு ஏற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே. கடவுளே, நீர் நொறுங்கிய. குற்றமுணர்ந்த உளத்தை நீர் அவமதிப்பதில்லை" (திருப்பாடல் 51:17).

3. "கனிவுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்" (மத்தேயு 5:5).
சரியான நேரத்தில் கோபம் கொள்வதும் பிழையான நேரத்தில் கோபம் கொள்ளா திருப்பதும் கனிவுடைமையாகும். தன்னுடைய இயலாமையை ஏற்றுக் கொள்வதே கனிவுடைமையாகும்.

4. "நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவுபெறுவர்" (மத்தேயு 5:6).
"இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவருக்குக் கோவில் கட்டவேண்டும் என்ற எண்ணம் என் தந்தை தாவீதின் உள்ளத்தில் இருந்தது. ஆயினும் ஆண்டவர் என் தந்தை தாவீதை நோக்கி, "என் பெயருக்குக் கோவில் கட்டவேண்டும் என்ற எண்ணம் உன் உள்ளத்தில் இருக்கிறது. அது நல்லதுதான். ஆயினும் நீ அக்கோவிலைக் கட்டப் போவதில்லை. உனக்குப் பிறக்கும் மகனே அதைக் கட்டுவார்" (1 அரசர் 8:17-18) என்றார்.

5. "இரக்கம் உடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர் (மத்தேயு 5:7).
"உங்கள் இறைத் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்க முள்ளவர்களாய் இருங்கள்" (லூக்கா 6:36).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6."தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத்தேயு 5:8).
கள்ளம், கபடம் இல்லா வெள்ளையுள்ளம் கொண்டோர் தூய்மையுள்தோராவர். அவர்கள் குழந்தையுள்ளம் கொண்டோராய் எல்லோரும் நலமுடன் வாழ் வதையே விரும்புவர்.

7. "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்" (மத்தேயு 5:9).
அமைதி எபிரேயத்தில் 'சலோம்' என அழைக்கப்படுகிறது. நன்மைத்தனத்தில் மகிழ்வுறுவதையே அது குறிக்கிறது. "அமைதியுடன் வாழுங்கள். அப்பொழுது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார்"
(2கொரி.13:11).
"அமைதி அருளும் கடவுள் உங்களை முற்றிலும் தூய்மையாக்குவாராக"
(1தெச. 5:23).

8. "நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது"
(மத்தேயு 5:10).
கிறிஸ்துவிற்காக நீங்கள் எல்லா துன்பங்களையும் முன்கொள்ளத் தயாரா குங்கள். கிறிஸ்துவிற்காக எல்லாத் தீமைகளையும் எதிர்த்து வென்றிட அவரே உங்களுக்குத் தைரியத்தைத் தருவார்.

இறை இராட்சியத்தைச் சுவீகரித்துக்கொள்வதற்கு அனுசரிக்க வேண்டியவை பின்வருமாறு: நம்பிக்கை, நற்பண்பு, அறிவு, தன்னடக்கம், மனஉறுதி, இறைப்பற்று, சகோதரத்துவம், அன்பு ஆகியவையாகும். இவை உங்களில் விளங்குமாறு முழு ஆர்வத்துடன் முயற்சி செய்யுங்கள் (2பேதுரு 1 : 11). அப்பொழுது இயேசுக் கிறிஸ்துவில் என்றும் நிலைக்கும் ஆட்சியில் பங்கேற்கும் உரிமை உங்களுக்கு நிறைவாக அருளப்படும். பேரின்பம் உங்களதாகும்.

இவ்வாறு மலைப்பொழிவில் முன்வைக்கப்படும் 8 பெறுபேறுகள் கிறிஸ்தவ முதிர்ச்சிக்கு வித்திடுகின்றன. நல் கிறிஸ்தவரால் வாழ்வதற்கான நியதிகள் முன்மொழியப்படுகின்றன.

*கள்ளம், கபடமில்லா வெள்ளையுள்ளம் கொண்டோராய்*

*உள்ளத்தை இறைவனுக்கே சொந்தமாக்குங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. அன்பில் மலரும் திருச்சபை

"அன்பு பொறாமைப்படாது. தற்புகழ்ச்சி கொள்ளாது.
இறுமாப்பு அடையாது. இழிவானதைச் செய்யாது.
தன்னலம் நாடாது. எரிச்சலுக்கு இடம்கொடாது.
தீங்கு நினையாது. அது தீவினையில் மகிழ்வுறாது.
மாறாக அது உண்மையில் மகிழும்.
அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்.
அனைத்தையும் நம்பும். அனைத்தையும் எதிர்நோக்கியிருக்கும்.
அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும்"

(1கொரி. 13).

"என் தந்தை என்மீது அன்பு கூர்ந்தது போல் நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள். நான் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே எனது கட்டளை" (யோவான் 15:10,12). அன்பே கடவுள். அன்பே கிறிஸ்து. அன்பின் வடிவில் பயணிப்பதே திருச்சபையாகும்.

"நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல. மாறாக, அவர் நம்மீது அன்புகொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை புரிகின்றது"

(1யோவான் 5:10).

அன்பில் மலரும் திருச்சபை அனைவருக்கும் வேண்டிய ஒன்றாகவே விளங்குகின்றது. திருச்சபை ஏகம், புனிதம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் ஆகிய நாற்பண்புகளைக் கொண்டது. அதாவது, திருச்சபை தன்னுள் பிளவு படாமல் ஒன்றாக இருக்கின்றது. திருச்சபை தூய்மையில் பங்கெடுக்கின்றது. அனைவரையும் அரவணைத்து பாரபட்சமில்லாமல் அன்பு செய்வதால் திருச்சபை கத்தோலிக்கம் என அழைக்கப்படுகின்றது. அப்போஸ்தலர்கள் எவ்வாறு கிறிஸ்துவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இயேசு இன்பத்தைப் பெற்று, மற்றவர்களுக்குக் கொடுக்க அனுப்பப்பட்டார்களோ அவ்வாறே திருச்சபையும் இன்றைய காலகட்டத்தில் இயேசு அன்பை அனுபவித்து, அறிவிக்க அனுப்பப் பட்டு, அப்போஸ்தலத்தில் நிறைவுபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானியலில் பாரிய புரட்சி ஏற்பட்டது. எவ்வாறெனில் தொலமியின் புவி மையக்கொள்கை நிராகரிக்கப்பட கொப்பர்நிக்கசின் சூரியமையக் கொள்கை ஏற்கப்பட்டது. இவ்வாறே 2ம் வத்திக்கான் சங்கம் திருச்சபையில் பாரிய மாற்றத்தைத் தோற்றுவித்தது. திருத்தந்தை, ஆயர்கள் போன்றோரை மையப்படுத்தி இயங்கிய திருச்சபை கிறிஸ்துவை மையப் புள்ளியாகக் கொண்டு புதிய முறையில் இயங்க ஆரம்பித்தது.

திருச்சபையும் 2ம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர், கிறிஸ்துவை மையப் புள்ளியாகக் கொண்டு, புதிய ஒழுக்கில் இயங்க ஆரம்பித்தது. நாம் அனைவரும் சகோதர, சகோதரிகளாக, புதிய உடன்படிக்கையின் பங்காளராகப் பங்கெடுப்பது சாத்தியமானது. இறைவார்த்தைக்கு மீள்வடிவம் கொடுத்து, ஆண்டவரின் ஆவியினால் இயக்கப்படும் இறைமக்களாக திருச்சபை உருவாக்கம் பெற்றுவருகின்றது.

"உண்மையான திராட்சைக்கொடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர். நான் உங்களோடு இணைந்திருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருங்கள். கிளைகள் திராட்சைக்கொடியோடு இணைந்திருந் தாலன்றித் தானாகக் கனி தர இயலாது. அதுபோல, நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனி தர இயலாது. நானே திராட்சைக்கொடி. நீங்கள் அதன் கிளைகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்" (யோவான் 15: 1, 4-5). இவ்வாறு நாம் இயேசுவோடும் இறைத்தந்தையோடும் இணைந்து, இறைவனுக்கு மகிமை தரும் விதமாய் எமது வாழ்க்கையை மாற்றியமைக்க முன்வருவோம்.

*அன்பை ஊடகமாக்கி அனைவரையும் இயங்கவையுங்கள்.*

*கனிகொடுக்கும் மக்களாக இனிதே வாழுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. ஆவியில் எழுப்பப்படும் திருவாழ்வு

தூய ஆவியாரின் கனிகள் ஒன்பது. அவை வருமாறு:

1. அன்பு
2. மகிழ்ச்சி
3. அமைதி
4. பொறுமை
5. பரிவு
6. நன்னயம்
7. நம்பிக்கை
8. கனிவு
9. தன்னடக்கம்

(கலாத்தியர் 5:22-26).

"ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது. அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார். எளியோருக்கு நற்செய்தி அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலைசெய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்"

(லூக்கா 4:18-19).

சுயநலச் சிறைகளை, பிழையான மனோபாங்குகளைத் தனது வல்லமையால் தூய ஆவியார் தகர்த்தெறிகின்றார். அடிமைத்துவ விலங்குகளை அவர் உடைத்தெறிகின்றார். அவரது தூய பிரசன்னம் தீய சக்திகளை நிர்மூலமாக்கி நிறைவான சூழலை உருவாக்குகின்றது.

மன்னர் ஒருவர் ஒரு வீட்டின் கீழ்ப்பகுதியை முல்லாவிற்கும் மேற்பகுதியைப் படைத் தளபதிக்கும் கொடுத்தார். தளபதியின் மனைவி மேல்மாடியில் இருந்துகொண்டு அடிக்கடி உரலில் மாவு இடிப்பார். வீடு அதிரும். மனைவியை மாற்று நடவடிக்கை எடுக்குமாறு முல்லா தளபதியிடம் ஆலோசனை கூறினார். அப்போது தளபதி, 'இது என் வீடு. என் மனைவி தான் விரும்பியபடி மாவு இடிப்பதற்கு உரிமை உண்டு. அதைக் கேட்க நீ யார்?" என்று தளபதி முல்லாவை அதிகாரத் தொனியில் எச்சரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் முல்லா தன் வீட்டுப் பகுதியை ஓர் அலவாங்கால் இடித்துக் கொண்டிருந்தார். "கீழே என்ன செய்கிறாய்?" என்று தளபதி அதட்டினார். அப்பொழுது முல்லா, "நான் என் வீட்டை உடைத்துப் புதுவீடு கட்டத் தீர்மானித்துவிட்டேன். என்ர வீட்டில் நான் எதையும் செய்யலாம். அதைக் கேட்க நீ யார்?"என்று கூறிவிட்டு முல்லா தொடர்ந்து வீட்டை உடைத்தார். தளபதி பதட்டம் அடைந்தவராய் கீழ் இறங்கி வந்து, "நாம் அனுசரித்துப் போவதுதான் நல்லது. நாம் இனி நண்பர்களாயிருப்போம்" என்று சமரசம் பேசினார்.

"நான் எப்போதுமே எல்லோருக்கும் நண்பன்தான்" என்று ஆர்வத்தோடு சொல்லி முல்லா சிரித்தார்.

எப்போதும் தூய ஆவியார் தீமைகளை நீக்கி நன்மைகளைச் செய்திடத் தூண்டுவிக்கின்றார். பொய்மையினைப் போக்கி உண்மையினை நிலை நாட்டுகின்றார். பகைமையினை உடைத்து உறவுப் பாலத்தினைக் கட்டுகின்றார். போலிகளைக் காலியாக்கி, உண்மையினை உறுதிப்படுத்துகின்றார்.

**திருவாழ்வின் தூதுவர்களாகத் திகழ முன்வாருங்கள்!**
**நீங்கள் எடுக்கும் நல்ல தீர்மானங்களே**
**திருச்சபையின் உயர் வளர்ச்சிக்கான வித்துக்களாகும்!**

*"கடவுள் நாசரேத்து இயேசுவின் மேல்*

*தூயஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார்.*

*கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின்*

*கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும்*

*அவர் விடுவித்து, எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார்"*

*(திப 10:38).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. மன்னிப்பில் மலரும் மறுவாழ்வு!

ஒப்புரவு அருட்சாதனம் பெறுவதற்கான படிமுறைகள் ஐந்து. அவையாவன:

1. பாவங்களை நினைவுகூரல்
2. பாவங்களுக்காக மனம் வருந்துதல்
3. பாவங்களைத் தவிர்க்க உறுதிஎடுத்தல்
4. பாவங்களைக் குருவிடம் அறிக்கையிடல்
5. பாவப் பரிகாரக் கடமையை நிறைவேற்றல்

1. பாவங்களை நினைவுகூரல்

பாவம் என்பது கடவுளுடைய கட்டளைகளை மீறுவதாகும். இது இரு வழிகளில் இடம்பெறலாம். அதாவது. செய்யக்கூடாததைச் செய்வதும் செய்ய வேண்டியதைச் செய்யாமலிருப்பதுமாகும்.

இணைச்சட்ட நூலில் பத்துக் கட்டளைகள்:

1. ஒரே கடவுளை ஆராதிப்பாயாக (இணைச்சட்ட நூல் 5:7).
2. அவரது பெயரை வீணாகச் சொல்லாதிருப்பாயாக (இணை. 5:11).
3. அவரது திருப்பெயரைப் பரிசுத்தமாய் அனுசரிப்பாயாக (இணை. 5:12).
4. தாய். தந்தையைப் பேணி மதி (இணை. 5:16).
5. கொலை செய்யாதே (இணை. 5:17).
6. விபச்சாரம் செய்யாதே (இணை. 5:18).
7. களவு செய்யாதே (இணை. 5: 19).
8. பொய்ச்சாட்சி சொல்லாதே (இணை. 5:20).
9. பிறர் தாரத்தை விரும்பாதே (இணை. 5:21).
10. பிறர் உடமையை விரும்பாதே (இணை.5:22).

**திருச்சபையின் ஆறு கட்டளைகள்:**

1. ஞாயிறு தினங்களிலும் கடன் திருநாட்களிலும் முழுப் பூசையில் பங்கு பற்றுவாயாக.
2. வருடத்தில் ஒருமுறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வாயாக.
3. பாஸ்கா காலத்தில் நற்கருணை உட்கொள்வாயாக.
4. நோன்பு நாட்களில் நோன்பும் மாமிசத் தவிர்ப்பு நாட்களில் மாமிசத் தவிர்ப்பும் அனுசரிப்பாயாக.
5. குறைந்த வயதிலும் நெருங்கிய உறவினரோடும் திருமணம் செய்யாதிருப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. திருச்சபையின் மேய்ப்புப் பணிக்கு இயன்றளவு உதவி வழங்குவாயாக.

இவ்வாறு 10 கட்டளைகளை, திருஅவையின் கட்டளைகளை மீறுதல் பாவமாகும்.

## 2. பாவங்களுக்காக மனம் வருந்துதல்

1. இயேசு சொன்ன காணாமற்போன மகன் உவமையில் (லூக்கா 1517-21) தந்தையை விட்டுப் பிரிந்த இளையமகன் தெளிவடைந்தவராய், தந்தையிடம் திரும்பிச் சென்று, "கடவுளுக்கும் உமக்கும் எதிராகப் பாவம் செய்தேன்" என அறிக்கையிடத் தீர்மானம் எடுத்து, அதன்படி செய்கின்றார். அவன் தன்னுணர்வு பெற்றவனாய், தனது பாவநிலையை ஏற்று, மனம் வருந்தினான்.

2. இயேசுவை மும்முறை மறுதலித்த பேதுரு அப்போஸ்தலர் சேவல் கூவியதைக் கேட்டு, "இன்று சேவல் கூவுமுன் என்னை நீ மும்முறை மறுதலிப்பாய்" (லூக்கா 12:12) என்று இயேசு கூறியதை நினைவுகூர்ந்து, மனம் நொந்து அழுதார். பேதுரு தனது இயலாமையை ஏற்று, மனம் நொந்து, இயேசுவிடம் மன்னிப்புக் கேட்டார்.

## 3. பாவங்களைத் தவிர்க்க உறுதி எடுத்தல்

நினிவே நகர் மன்னனும் மக்களும் இறைவாக்கினர் யோனாவின் தவச் செய்தி கேட்டு, தீய வழிகளை விட்டுவிடவேண்டும், நோன்பிருந்து மன்றாடவேண்டும் என்ற உறுதிப்பாட்டை மேற்கொண்டனர். பாவவாழ்க்கை முறைகளைக் கைவிட்டு பரிசுத்தமான வழிமுறைகளில் வாழத் தீர்மானம் எடுத்தல் தூய நல் வாழ்விற்கு அவசியமாகும். பாவங்களைத் தவிர்க்க மனவுறுதி எடுத்தல் பக்குவப்பட்ட மனோபாங்கைத் தோற்றுவிக்கின்றது.

## 4. பாவங்களைக் குருவிடம் அறிக்கையிடல்

சாலமோன் அரசர் இஸ்ராயேலின் பாவங்களை மன்னிக்கும்படியாக இறைவனிடம் பரிந்துபேசினார். "உம் மக்களாகிய இஸ்ராயேலர் உமக்கு எதிராகப் பாவம் செய்தால், எதிரியிடம் தோற்றுப் பின் உம்மிடம் திரும்பி வந்து, உம் திருப் பெயரை ஏற்றுக் கொண்டு, இக்கோவிலில் உம்மை நோக்கி வேண்டுதலையும் விண்ணப்பத்தையும் செய்தால், விண்ணிலிருந்து நீ அவர்களுக்குச் செவிசாய்த்து, உம் மக்களாகிய இஸ்ராயேலரை மன்னித்து, அவர்களின் மூதாதையருக்கு என நீர் வாக்களித்த நாட்டுக்கு அவர்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிவரச் செய்வீராக (1 அர. 8:30-36).

இறைவாக்கினர் நாத்தானின் சொல்லைக் கேட்ட தாவீது அரசன் மனம் வருந்தி. "நான் கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டேன்" என்று தனது பாவத்தைக் கடவுளின் பிரதிநிதியான நாத்தானிடம் அறிக்கையிட்டார்.

"கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்" (லூக்கா 8:12).

5. பாவப் பரிகாரக் கடமையை நிறைவேற்றல்

"ஆண்டவரே என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி, எதையாவது கவர்ந்திருந்தால் அதை நான்கு மடங்கு கொடுக்கிறேன்" (லூக்கா 19:8) என்று சக்கேயு தனது மனமாற்றத்தை வெளிப்படுத்தித் தனது பாவ வாழ்விற்குப் பரிகாரம் தேடினான்.

"பாவிகளில் முதன்மையான பாவி நான். ஆயினும் கடவுள் எனக்கு இரங்கினார் (1 திமொ. 1:15) என்று புனித பவுல் தாழ்மையுடன் தனது நன்றியுணர்வை வெளிப்படுத்தினார். எனவே, நீங்களும் உங்களது உயர்ந்த நிலையை உணர்ந்து, ஒப்புரவு அருட்சாதனத்தை நல்ல முறையில் நிறைவேற்றி, கடவுளுடனும் மக்களுடனும் நல்லுறவை மேம்படுத்துவீர்களாக. மன்னித்து, மன்னிப்பை உள்வாங்கும் மனோபாங்கில் வளர்வீர்களாக.

உங்களோடு நேரடியாக ஒப்புரவு செய்துகொள்ளுங்கள்.

இறைவனோடு நேரடியாக ஒப்புரவு செய்துகொள்ளுங்கள்.

இயற்கையோடு நேரடியாக ஒப்புரவு செய்துகொள்ளுங்கள்.

ஏழையோரோடு நேரடியாக ஒப்புரவு செய்துகொள்ளுங்கள்.

இறைவன் உங்களில் வாழுவதை அனுபவித்து உணருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. புனர்வாழ்வு வழங்கல்

எலியா பாகால் தெய்வத்தின் குருக்கள் பலரைக் கொன்றுகுவித்த செய்தியைக் கேள்விப்பட்ட அரசி ஈசபேல் எலியாவின் உயிரை எடுக்கப்போவதாக மிரட்டினாள். எனவே, எலியா அச்சமுற்று தனது உயிரைக் காத்துக்கொள் வதற்காகத் தப்பி ஓடினார். அவர் ஒருநாள் முழுவதும் பாலைநிலத்தில் பயணம் செய்த பின்னர், ஒரு சூரைச் செடியின் அடியில் அமர்ந்துகொண்டு தான் சாகவேண்டும் என வேண்டுதல் செய்தார். எலியா என்றால் "ஆண்டவரே என் கடவுள்" என்று பொருள்படும். அத்தகைய அர்த்தத்தைத் தனது பெயராகக் கொண்ட எலியா மனச் சோர்வுற்றுக் காணப்பட்டார். அங்கு படுத்துறங்கினார். அப்போது வானதூதர் தட்டி எழுப்பி, "எழுந்து சாப்பிடு. ஏனெனில் நீ நீண்ட பயணம்செய்ய வேண்டும்" என்றார். எலியா எழுந்து உண்டு பருகினார். அவ்வுணவினால் வலிமையடைந்த அவர் 40 பகலும் 40 இரவும் நடந்து ஓரேபு மலையை அடைந்தார்.

அன்று எலியா எவ்வாறு அப்பத் துண்டுகளை உண்டு, வலிமை பெற்று பாலைநிலத்துப் பயணத்தைத் தொடர்ந்தாரோ, அதேபோல நீங்களும் நற்கருணையிலிருந்து வலிமை பெற்று, உங்களது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர அழைக்கப்படுகின்றீர்கள். "வாழ்வுதரும் உணவு நானே" (யோவான் 6:48) என்று இயேசு கூறி, உங்களது சோர்வினை நீக்கி, அச்சத்தைப் போக்கி, உங்களுக்குச் சக்தியையும் வல்லமையையும் ஆறுதலையும் அமைதியையும் இயேசு அருளுகின்றார். எனவே, புதுப் பயணத்தைத் தொடர்வதற்கு, அர்த்தமுள்ளரோராக வாழ்வதற்கு, புனித பவுல் கூறுகின்ற வார்த்தைகளைக் கவனியுங்கள்.

1. மனக்கசப்பு, சீற்றம், சினம், கூச்சல், பழிச்சொல் எல்லாவற்றையும் தீமை அனைத்தையும் உங்களை விட்டு நீக்குங்கள்.
2. ஒருவருக் கொருவர் நன்மை செய்து பரிவு காட்டுங்கள்.
3. ஒருவர் ஒருவரை மன்னியுங்கள்.
4. கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப் போல் ஆகுங்கள்.
5. கிறிஸ்து உங்கள் மேல் அன்புகூர்ந்ததுபோல் நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள் (எபே. 4: 31-5:2).

இத்தகைய அன்பு வாழ்க்கையை, குழும வாழ்க்கையை, நற்சமூக உருவாக்கலை முன்னெடுத்துச் செயற்படவே அழைக்கப்பட்டுள்ளீர்கள். ஆனால் இன்று உங்களது சமுதாயம் எங்கே போய்க்கொண்டிருக்கின்றது? உங்களது சமூகத்தின் இன்றைய நிலைப்பாடு என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 பங்குனி 1 தினக்குரல் செய்தியின்படி 2009ம் ஆண்டின் பின்னர் புகைத்தல், மதுபாவனை, போதைப்பொருள் பாவனை போன்றவை அதிகரித்தநிலையில் பெருமளவு இளைஞர்கள் அடிமைகளாகி வருகின்றனர். அத்தோடு சமூகப் பிறழ்வு நடத்தைகளில் ஈடுபட்டுவருகின்றனர். வடமாகாண மதுவரிப் பிரதிஆணையாளர் விடுக்கும் தகவல்:

யாழ் மாவட்டத்தில் 2009ம் ஆண்டு 7 லட்சம் லீற்றர் பியரும்
2013ம் ஆண்டு 40 லட்சம் லீற். பியரும்
2009ல் 5லட்சம் 60 ஆயிரம் லீற் சாராயமும் 2013ல் 20 லட்சம் லீற். சாராயமும்
2009ல் 30 லட்சம் லீற் கள்ளும்
2013ல் 56லட்சம் லீற்றர் கள்ளும் அருந்தப்பட்டது.

போரின் பின்னரான ஐந்து வருடங்களில் மக்களின் வாழ்க்கைத்தரம், தொழில்துறைகள் போன்றன முழுமையான மேம்பாட்டை அடையாத நிலையில் மதுபாவனை, புகைத்தல், போதைப்பொருள் பாவனை, போதைப் பாக்குப் பாவனை போன்றவை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. இது தொடர்பாக சமயத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், மகளிர் அமைப்புக்கள், பெற்றோர், ஆசிரியர் போன்றோர் மௌனிகளாய் இருப்பது வன்முறைக் கலாச்சாரம் வளர்வதற்கு வித்திடுவதாய் அமைகின்றது.

எனவே, சற்றுக் கவனியுங்கள்:

1. செப வாழ்வில் இணைந்தவர்களாய் உங்களைப் பலப்படுத்துங்கள்.
2. நற்செய்தி விழுமியங்களால் உங்களது வாழ்வை வளப் படுத்துங்கள்.
3. சமூகச் சீர்கேடுகளுக்கு எதிராகக் குரல்கொடுத்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.
4. மதுபாவனை, போதைப்பொருள்பாவனை, கலாச்சாரச் சீர்கேடுகள் போன்றவற்றால் பாதிப்படைந்தோருக்குப் புனர் வாழ்வு வழங்குங்கள்.
5. நேர்நோக்கில் வாழ்விற்கான விழுமியங்களை உள்வாங்கி, உயர்ந்தோராய் திகழுங்கள்.
6. வளமான வாழ்வு நல்கிட வறுமையை வெறுமையாக்குங்கள்.
7. விருந்தோம்பலை வளர்த்து, விளங்கிக்கொள்ளும் மனப்பான்மையை அதிகரியுங்கள்.

*நேர்வாழ்விற்கான விழுமியங்களை உள்வாங்கி,*

*உயர்ந்தோராய் வெளிச்சம் கொடுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. புனித கன்னிமரியாவின் விண்ணேற்பு

கி.பி. 5ம் நூற்றாண்டில் யெருசலேமில் ஆவணி 15ம் நாள் தூய அன்னை மரியாவின் நினைவு கொண்டாடப்பட்டது. கி.பி. 6ம் நூற்றாண்டில் இப்பெரு விழா தூய மரியா ஆண்டவரிடம் இளைப்பாறிய பெருவிழாவாக கீழ்த்திசை நாடெங்கும் பரவியது. இவ்விழா கி.பி. 7ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உரோமைப் பட்டியலில் இடம்பெற்றது. இறுதியாக 8ம் நூற்றாண்டில் தூய கன்னிமரியாவின் விண்ணேற்புவிழா எனக் கொண்டாடல் ஆரம்பமாகியது.

"வானில் பெரியதொரு அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவரது காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார். அவர் கருவுற்றிருந்தார். அரக்கப்பாம்பு பிறக்கும் குழந்தையை விழுங்குமாறு காத்திருந் தது. ஆனால் ஆண்பிள்ளை பிறந்தது. கடவுளது அரியணைக்குப் பறித்துச் செல்லப்பட்டது. அப்பெண் பாலை வனத்திற்கு ஓடிப்போனார்" (திருவெளிப்பாடு 19:19-20:1-6).

இறை ஆட்சி சாத்தானின் கட்டுப்பாட்டை வென்று மேலோங்கிருக்கும் உண்மையையே இக்காட்சி வலியுறுத்துகின்றது. இறுதிநாளில் இயேசு மாட்சிமையுடன் வருவது நிட்சயமாக நிகழும். சாத்தானால் உலகினை ஏமாற்றமுடியாமல் போய்விடுகின்றது.

இயேசுவோடு இணைந்திருந்து திருச்சபை உலகினை வெல்கின்றது. இறைவன் உலக மக்களோடு கொண்ட உடன்படிக்கை உறவு இயேசு திருச்சபையில் ஆட்சிசெய்வதன் மூலமாகப் புதுப்பிக்கப்படுகின்றது.

லூக்கா நற்செய்தி 2: 47-56 பகுதியில் வரும் மரியாவின் பாடல் பின்வரும் சிறப்பம்சங்களை வெளிப்படுத்துகின்றது. அவையாவன:

1. இப்பாடல் கடவுளின் அருளுக்கு மரியா நன்றியுணர்வோடு விடுத்த பதிலோடு ஆரம்பமாகின்றது. இறை அழைத்தலின் விளைவே மரியாவின் ஆசீர்வதிக்கப்பட்ட தன்மையாகும்.
2. மரியாவின் புகழ்பாடல் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்களுக்கான இறைத் திட்டத்தைப் பிரதிபலிப்பதாய் கடவுளின் அருளை விசாலப்படுத்துகின்றது.
3. எலிசபேத்தின் புகழ்பாடல் மரியாவிற்கு ஊக்குவிப்பாய் இருந்தது.
4. மரியாவின் புகழ்பாடல் தான் பெறவிருக்கும் மகனை மையப்படுத்தாமல் மெசியாவை அனுப்பிய தந்தையையே மையப்படுத்தியதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இயேசுவின் முதற் பிறப்பைவிட இயேசுவின் 2ம் வருகையையே மரியா முதன்மைப்படுத்தினார்.

மரியாவின் மகத்துவத்தை விளக்கும் 7 படிகள்:

1. மரியா இறைவார்த்தையில் கொண்டுள்ள விசுவாசத்தாலும் இறைசித்தத் திற்குக் கட்டுப்படும் கீழ்ப்படிதலாலும் சீடத்துவத்தின் மாதிரியாகத் திகழ்கின்றார்.
2. இறைவார்த்தையோடு இயைபுற்றுப்போகும் ஆழமான தன்மையினால் மரியா சீடத்துவத்தின் மாதிரியாகத் திகழ்கின்றார்.
3. இறையருளை உள்வாங்கியதோடு இறையருளைப் பெற்றதிற்குப் பொருத்த மான நன்றியுணர்வை வெளிப்படுத்தி மரியா சீடத்துவத்தின் சிறப்பான பங்கினை உறுதிப்படுத்துகின்றார்.
4. நற்செய்தியின் சமூகப் பிரதிபலிப்பை உள்வாங்கியதன் மூலமாக மரியா சீடர்களுக்கு முன்மாதிரியாகின்றார்.
5. கடவுளுடைய திட்டங்களையும் உறுதிமொழிகளையும் உள்வாங்கியதன் மூலமாக மரியா சீடத்துவத்தின் மாதிரியாகத் திகழ்கின்றார்.
6. கடவுளுக்குரியவற்றைப் புலப்படுத்தும் பிரதிபலிப்பாலும் தியானத்தாலும் மரியா சீடத்துவத்தின் மாதிரியாகத் திகழ்கின்றார்.
7. மரியாவின் புகழ்பாடல் இறைவனுக்கு ஏற்ற ஆராதனையாகவும் எலிசபேத்தைத் தூண்டுவிக்கும் நற்செயலாகவும் இருந்ததால் மரியா சீடத்துவத்தின் சிறப்பிடமாகத் திகழ்கின்றார்.

எனவே, அன்பு நெஞ்சங்களே, திருப் பயணிகளாய் திருச்சபையில் பயணிக்க ஆர்வத்தோடு ஆயத்தமாகுங்கள். இது தொடர்பாகச் செய்ய வேண்டியவை:

1. இறை காருண்யத்தை, இறைவனின் தாராள மனப்பான்மையை அடிக்கடி உங்கள் மனக் கண்முன் வையுங்கள்.
2. உலக செல்வத்திற்கும் மேலாக இயேசு எனும் அளப்பரிய அன்புத் தெய்வத்தின் பார்வையில் கவனத்தைச் செலுத்துங்கள்.
3. பகிர்ந்து வாழும் மனப்பக்குவநிலைக்கு முதலிடம் கொடுங்கள்.
4. ஏழையரின் ஏற்றத்திற்காகச் செலவிடும் பழக்கத்தை அதிகரியுங்கள்.
5. மண் ஈர்ப்பிலிருந்து விடுபட்டு விண்ணீர்ப்பு சார்ந்து செயற்பட, புன்னகை பூத்த முகத்தோடு பயணியுங்கள்.
6. இளையோர், சிறியோர் சார்பாக சிறப்பான முறையில் அக்கறை எடுத்து செயற்படுங்கள்.
7. முதியோரை மதித்து, அவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. குடும்பம் ஒரு கோவில்

'குடும்பம் ஒரு கோவில்', 'குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை', 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்' என்றெல்லாம் சொல்லி குடும்பத்தின் மேன் மையை எடுத்தியம்புவார்கள். நல்ல குடும்பங்களே நற் குழந்தைகளை, நல் இளைஞர்களை உருவாக்கும் பாசறைகளாக விளங்குகின்றன.

"என் உள்ளம் ஞானத்தைத் தேடி அலைந்தது. இதனால் நான் நல்லதொரு சொத்தைப் பெற்றுக்கொண்டேன். ஆண்டவர் எனக்கு நாவைப் பரிசாகக் கொடுத்தார். அதைக் கொண்டு அவரை நான் புகழ்வேன். நற்பயிற்சி பெறாதோரே, என் அருகே வாருங்கள். நற்பயிற்சியின் இல்லத்தில் தங்குங்கள். ஞானத்தின் நுகத்தை தலைதாழ்த்தி ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் கழுத்துக் களை வளைந்துகொடுங்கள். உங்கள் உள்ளம் நற்பயிற்சி பெறுவதாக. மிகுந்த பொருள் கொடுத்து நற்பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுங்கள். அதனால் பெருஞ் செல்வத்தை அடைந்து கொள்வீர்கள்"(சீராக்கின் ஞானம் 51:21-23, 26, 28).

"படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். இதனால் கணவன் தன் தாய், தந்தையை விட்டுத் தனது மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரேயுடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல். எனவே, இறைவன் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்!" (மாற்கு 10:6:9). இவ்வாறு இயேசு, ஒருமை, கட்டவிழாமை ஆகிய பண்புகளை கத்தோலிக்க திருமணத்தின் இன்றியமை யாப் பண்புகளாக வலியுறுத்துகின்றார். மேலும், கணவன், மனைவி ஆகிய இருவரும் ஒருவர் ஒருவரை அன்பு செய்தல், அன்பின் விளைவாகப் பிறக்கும் பிள்ளைகளை பொறுப்புணர்வோடு வளர்த்தெடுத்தல் ஆகிய கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பாடு உடையவர்களாகின்றார்கள்.

ஏகம், தூய்மை, கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் ஆகிய நாற்பண்புகளைக் கொண்டு திருச்சபை காணப்படுவதுபோல, குடும்பமும் மேற்படி நாற் பண்பு களை தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குகின்றது. பிள்ளைகளுக்கு இலவசமாய் நற்பயிற்சி வழங்கும் இல்லமாய் குடும்பம் துலங்கவேண்டும். பெற்றோர் எதைக் கொடுக்கின்றார்களோ அதையே பிள்ளைகள் பெற்றுக் கொள்கின்றார்கள்.

**'முப்பத்தொரு நாட்களில் முரட்டுத்தனமான குழந்தையைக் குணப் படுத்துவது எப்படி?'**
என்ற ஆங்கில நூலிலிருந்து:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இளம் தாய்க்கு இரு குழந்தைகள். சிறுவனுக்கு ஐந்து வயது. சிறுமிக்கு இரண்டு வயது. சிறுவனின் துடியாட்டத்தைத் தாங்கமுடியாத தாய் ஒரு சீர்மியரை நாடினார். உடனே. சீர்மியர் சிறுவனை விளையாட அனுப்பிவிட்டு, பெண்ணோடு பேச ஆரம்பித்தார். அவர் தனது உள்ளக்கிடக்கைகளை ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்தி, தனது மகனின் குறும்புத்தனத்தைப் பொறுக்க முடியாதிருப்பதை ஒப்புக்கொண்டார். சீர்மியர் சில புதிய அணுகு முறைகளை முன்வைத்தார். அதாவது,

1. பிள்ளையின் நடவடிக்கைகளை நேர்முறையில் அவதானித்தல்.
2. அவை பற்றிய விபரணங்களைத் துல்லியமாகக் குறிப்பேட்டில் எழுதுதல்.
3. மாலை ஆறு மணிக்கு நாள் தோறும் குறிப்பேட்டின் உதவியோடு தாயும் மகனும் தனித்திருந்து சல்லாபித்தல்.
4. நல்ல செயற்பாடுகளை மட்டுமே எடுத்தியம்பி, பாராட்டி, பரிசளித்தல்.

இவ்வாறு நாள்தோறும் செயற்பட்டு வந்தபொழுது, தாயினது கத்திக் குழறுதல், கோபத்தோடு தகாத வார்த்தைகளை வெளிப்படுத்தல், வன்முறையான தொடர்பாடல் போன்றவை அருகிப்போக, மகனும் சாதாரணமான முறையில் நேரிய செயற்பாடுகளுக்கு இயைபாக்கம் பெற்றநிலையில் தேர்ச்சிபெற்றவனாய் காணப்பட்டான்.

'நல்ல பிள்ளை' என எல்லோராலும் பாராட்டுதல் பெற்றான். மூன்று வாரங்களின் பின்னர் நடந்த நிகழ்வு. மதிய சாப்பாட்டை இரு பிள்ளைகளுக்கும் வழங்கிய பின்னர் தொலைபேசி மணி அடிக்கத் தாய் எழுந்துபோய் தொலைபேசியோடு தொடர்புகொண்டார். அவ்வேளை சிறுமி சாப்பிடாது அழத் தொடங்கினாள். உடனே சிறுவன் தனது சாப்பாட்டை மூடிவைத்துவிட்டு, சிறுமிக்கு சோறு ஊட்டினான். "அச்சாப் பிள்ளை, தங்கா சாப்பிடுங்க" என்று செல்லமாகச் சொல்லி, சோறு உண்ண வைத்தான். இதனை அவதானித்த தாய், தனது மகனின் விரைவான வளர்ச்சியை முன்னிட்டு புளகாங்கிதம் அடைந்தார்.

நல்ல குடும்ப உருவாக்கம் நல்ல பிள்ளைகள் உருவாக்கத்திற்கு, நல்ல இளையோர் உருவாக்கத்திற்கு, நல்ல சமூக உருவாக்கத்திற்கு இட்டுச் செல்கின்றது. நம்பிக்கையோடும் நல் எண்ணத்தோடும், பேருவகையோடும், பொறுப்புணர்வோடும் பிள்ளைகளின் உருவாக்கத்தில் ஈடுபடுவது நட்சமூக உருவாக்கத்தையே உறுதிப்படுத்துகிறது.

***பேருவகையோடும் பொறுப்புணர்வோடும்***
***பிள்ளைகளின் உருவாக்கத்தில் பங்கெடுங்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. இல்லற அப்போஸ்தலிக்கப் பணி

"அன்பர் பணி செய்ய ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலைதானே வந்தெய்தும் பராபரமே"

என்று தாயுமானவர் சுவாமிகள் மொழிந்தார்.

இறைவனின் பெயரால் நற்பணியாற்றிட நல்ல குடும்பங்கள் உருவாக்கப்படுவது இன்றைய காலத்தின் தேவையாகும். உலக ஈர்ப்புக்களால் கவரப்பட்டு மனுக்குலம் அழிவைநோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இறைஈர்ப்புக் கலங்களாகக் குடும்பங்கள் இயங்கவேண்டும். எனினும். இன்று விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கணணியும் கைத்தொழிலும் வளர்ந்து வரும் சூழமைவில் பல குடும்பங்கள் பல்வேறுபட்ட காரணிகளால் சிதைவுற்றுச் சீரழிவது கண்கூடு.

குடும்பச் சிதைவிற்கான காரணிகள் பின்வருமாறு:

### பரஸ்பர நம்பிக்கையீனம்

பரஸ்பர நம்பிக்கையீனம் குடும்ப உறவை நலிவுறச்செய்கின்றது. 'சந்தேகக் கோடு அது சந்தோசக்கேடு' என்று ஒரு கவிஞன் பாடியுள்ளான். ஒருவர் ஒருவரில் சந்தேகம் கொண்டு ஒருவர் மற்றவரது அந்தரங்க செயற்பாடுகளை அறிந்துகொள்ள மூன்றாவது நபரின் உதவியை நாடுவது குடும்ப உறவைப் பலவீனப்படுத்துகின்றது.

### போலியான அன்பு

தாயை. தந்தையை. சகோதரனை. சகோதரியை. பிள்ளையை. அல்லது நண்பரைக் கூடுதலாக அன்புசெய்வது கணவன் மனைவிக்கு அல்லது மனைவி கணவனுக்கு செய்யும் துரோகமாகும். ஒருவர் ஒருவரை அன்புசெய்வதுபோலப் பாசாங்குசெய்வது போலி அன்பாகும்.

### பிறரது அனாவசியத் தலையீடு

அடிக்கடி மூன்றாவது நபர் குறுக்கிட்டு. குடும்பப் பிரத்தியேகத்தைப் பகிரங்கமாக்கல். இருவரும் இணைந்து தீர்மானம் எடுக்க இயலாமை. உணர்வுகளைப் பகிரமுடியாத சூழமைவு போன்றவை குடும்ப உறவில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

### பாலுறவு பற்றிய பிழையான விளக்கம்

ஆண் இயல்பு. பெண் இயல்பு. உணர்வு வெளிப்பாட்டில் வித்தியாசம் போன்றவற்றை அலட்சியப்படுத்தல். தாம்பத்திய உறவு தவறானது எனக் கருதி குற்ற உணர்வுடன் பாலுறவில் ஈடுபடல் அல்லது பின்வாங்குதல். ஒருவரது மனநிலையை அல்லது உடல்நிலையைப் பற்றிக் கனிக்காது பாலுறவிற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயப்படுத்தல் போன்றவை நல்லுறவைப் பாதிக்கும் காரணிகளாகும்.

### 5. பணம், தொழில் போன்றவை மிகைப்படுத்தப்படல்

துணைவரிலும் மேலாக, பணம் அல்லது தொழில் சார்பாகக் கூடுதலான கவனம் செலுத்தல், ஓய்வின்றி இயந்திரம்போல் செயற்படல் போன்றவை நல்லுறவிற்குக் குந்தகம் விளைவிக்கின்றன..

### 6. மது பாவனை, போதைப்பொருள் பாவனை போன்றவைக்கு அடிமையாதல்,

தற்காலிக கவலை, கடன் தொல்லை, வருத்தம் போன்றவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ள மதுவை அல்லது போதைவஸ்தை நாடும் ஒருவர் காலப் போக்கில் தன்னையே நிரந்திரமாக இழந்துவிடும் அபாயநிலைக்கு, அடிமைநிலைக்குத் தள்ளப்படுகின்றார்.

### 7. தொடர்நச்சரிப்பு

எதிர்மறையான நோக்கில் தொடர்பாடலை முன்னெடுத்தல், அளவுக்கதிகமாகப் பேசி வன்முறையான வார்த்தைகளால் திட்டுதல், தண்டனை வழங்கல் போன்றவை கணவன் - மனைவி உறவைத் துண்டாடுகின்றன. "வசைமொழி பேசிப் பழக்கப்பட்டோர் தம் வாழ்நாள் முழுவதும் நற்பயிற்சி பெறப்போவதில்லை" (சீராக் 23:15).

### 8. சுயாதீனப் போக்கு

கணவன், மனைவி இருவரில் ஒருவர் தன்னை மட்டுமே மையப்படுத்தி, சுயநலச் சிறைக்குள் சிக்குண்டு கிடப்பார் எனின் குடும்பம் ஒரு நரகமாகத் தோற்றம் அளிக்கும். இருவரும் தத்தம் சொந்த விருப்பத்தையே முதன்மைப் படுத்தி வாழும் பொழுது திருமணத்தின் திருத்தன்மை சிதைந்துவிடும்.

இல்லற வாழ்க்கையில் இன்புற, நல்வாழ்க்கையில் வளம்பெற, "இப்பொழுது சிறு விடயங்களைச் செய்: நாளடைவில் பெரிய விடயங்கள் உன்னை நிறைவேற்றி வைக்கும்படி கேட்கும்" என்று பாரசீக பழமொழி கூறுகின்றது. சிறு விடயம்தானே என்று அலட்சியப்படுத்தாது சிறு விடயங்களையும் சிறப்பாகச் செய்வதன் மூலம் பெரிய காரியமாகிய அன்புக் குடும்ப உருவாக்கலை அல்லது நல்ல சமூக உருவாக்கத்தை நிறைவாக்கலாம்.

இல்வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகளை, ஏற்றத் தாழ்வுகளை எவ்வாறு ஏற்றுக்கொள்கிறீர்கள்? "வாழ்க்கையில் வெயிலில் கொஞ்சம் காய்ந்தும் மழையில் நனைந்தும் வந்ததால் எனக்கு நன்மையே ஏற்பட்டிருக்கிறது" என்கிறார் லாங் பெல்லோ. ஏமாற்றங்கள், பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றிலிருந்து தப்பி ஓடாது, எதிர்நீச்சல் போடுவதே ஆரோக்கியமானது. பிறர் அன்பு, இரக்கசிந்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தோம்பல், கனிவு, கரிசனை போன்றவை குடும்பத்தில் வெளிப்படும்போது குடும்பம் குதுகலிக்கும்; சமூகம் சந்தோசம் கொண்டாடும்.

"எதிர்காலத்தில் நம்பிக்கை, வளைந்து கொடுக்கும் இயல்பு, புன்னகை பூக்கும் முகம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து வாழ்வில் முன்னேறுங்கள்" என்று கருத்துரைக்கிறார் அன்ரு கார்ணிஜி. பொருத்தமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுதல், வெற்றியில் வெறிகொள்ளாமலும் தோல்வியில் சோர்ந்துவிழாமலும் வாழுதல், திறன்களை விருத்தி செய்தல், பிறரது திறன்களைப் பாராட்டிப் பரிசளித்தல் போன்றவை பெரும் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் விழுதுகளாகும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுமேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" எனத் தாயுமானவர் சுவாமிகள் கூறி பிறரது மகிழ்ச்சியில் பங்கெடுப்பதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். ஒரு நாளில் இருபத்துநான்கு மணித்தியாலங்கள் கணவன், மனைவி ஆகிய இருவரும் தமக்காக, தமது பிள்ளைகளுக்காக மட்டும் வாழ்பவர்கள் எனின் சுயநலமே எஞ்சிநிற்கும். மேலும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தமது நல்வாழ்வாலும் நற்படிப்பினைகளாலும் இயேசுவை அறிவிப்பதில் ஈடுபாடுடையவர்வர்களாய் இருத்தல்வேண்டும். கிறிஸ்துவ முதிர்ச்சியை நோக்கிய பயணத்தில் தாமும் ஆர்வத்தோடு பங்கெடுப்பதோடு தமது பிள்ளைகளையும் கடவுள் வழியில் இட்டுச் செல்ல முனையவேண்டும்.

"நீங்கள் ஒருவரோடு ஒருவர் அன்புகொண்டிருந்தால்தான் நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிந்துகொள்வர்கள்"(யோவான் 13:35) என்று கிறிஸ்து கூறி, குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் தூய அன்பில் வாழவும் அதே அன்பை இறைவனோடும் பிறரோடும் பகிரவும் அழைக்கின்றார். அன்புள்ள கணவனாக, அன்புள்ள மனைவியாக, அன்புள்ள தந்தையாக, அன்புள்ள தாயாக அன்புள்ள பிள்ளையாக, அன்புள்ள சகோதரனாக, அன்புள்ள சகோதரியாக ஒவ்வொரு குடும்ப அங்கத்தவரும் வாழக் கற்றுக்கொள்ளும் பொழுது கிறிஸ்தவ குடும்பங்கள் ஒவ்வொன்றும் உயிர்த்தெழுந்த இயேசுவின் உயிருள்ள அடையாளமாக அவனியில் பிரகாசிக்கும்.

*அங்கு பணிவன்பும் புத்துணர்வும், அரவணைப்பும், அர்ப்பணமும் ஆறாய் பெருக்கெடுத்தோடும், பேரின்ப நல் இல்ல வழிகாட்டல் வழியாகட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக...

பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக உருவாக்கப்படுவதே இன்றைய காலத்தின் தேவையாகும். நல்ல குடும்பம், நல்ல சமூகம், நல்ல சூழல் நல்ல பிள்ளை களையே தோற்றுவிக்கும் என்பது வெளிப்படை. அன்புள்ள கணவனும் அன்புள்ள மனைவியுமாக வாழ்பவர்கள் பொறுப்புள்ள பெற்றோராகத் திகழ்வார்கள். பெற்றோர் பிள்ளைகளுக்கு ஆற்றக்கூடிய பெரிய தொண்டு அவர்கள் அன்புள்ள கணவனும் அன்புள்ள மனைவியுமாக வாழ்வதேயாகும்.

"இன்றைய காலப் பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதோ, திருத்துவதோ பெரும் கஸ்டமாக உள்ளது. அந்தக் காலத்திலென்றால் அம்மா கீறிய கோட்டைத் தாண்டவே மாட்டோம். இன்றோ பிள்ளைகளைப் பார்த்து, 'இதைச் செய்' என்றால் அதைச் செய்வார்கள். 'அங்கு போகாதீர்கள்' என்றால், 'அது உங்களுக்கு விளங்காது, வீணாகக் குழப்பாதீர்கள்' என்று பிள்ளைகளை அலட்சியப் படுத்துவார்கள். எந்தக் காலத்திலும் பிள்ளைகள் பெற்றோருக்குப் பணிந்து வாழவேண்டும். அதேவேளை பிள்ளைகளின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றப் பின்வாங்கக்கூடாது.

பிள்ளைகளைத் திருத்தும்பொழுது பெற்றோர் கவனிக்கவேண்டியவை:

- பிள்ளைகள் தவறு செய்யும்பொழுது, 'நீ எப்போதும் இப்படித்தான். நீ ஓர் உதவாக்கரை' என்று எரிந்துவிழாதீர்கள்.
- பிள்ளைகள் ஐந்து வயதுக்குக் குறைவாயுள்ளபொழுது அவர்களை அடித்து, வெருட்டி, பயமுறுத்திக் கண்டிக்காதீர்கள்.
- பிள்ளைகள் முன்னால் நேர்மையாகவும் நாணயமாகவும் நடந்துகொள்ளுங்கள்.
- பிள்ளைகள் சிறப்பாகச் செயற்படும்பொழுது பாராட்டி உற்சாகப்படுத்துங்கள்.
- பிள்ளைகள் வயதான பின்னர் அவர்கள் சுயமாகச் சிந்தித்துத் தீர்மானம் எடுக்க வாய்ப்பு வழங்குங்கள்.
- பிள்ளைகள் கேள்வி கேட்கும்பொழுது அலட்சியப்படுத்தாது, அவர்களது கண்களை உற்றுநோக்கிய வண்ணம் பதில் அளியுங்கள்.
- பிள்ளைகளைத் திருத்தும்பொழுது கரிசனையோடு நடந்துகொள்ளுங்கள்.
- பிள்ளைகள் தமது நியாயமான தேவைகளை நிறைவுசெய்ய வாய்ப்பளியுங்கள்.
- பிள்ளைகள் சிறுசிறு காரியங்களிற்கூட விசுவாசமுள்ளவர்களாய் நடந்துகொள்வதற்கு ஊக்கமளியுங்கள்.
- பிள்ளைகள் இயல்பாகவே நல்லவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வோடு செயற்படுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பிள்ளைகளின் ஆளுமை உருவாக்கம் அவர்கள் வாழும் சூழலிலேயே பெரிதும் தங்கியுள்ளது. பின்வரும் கூற்றுக்களைக் கவனியுங்கள்:

1. குற்றம் கண்டுபிடிக்கும் சூழலில் வாழ்பவர் குறைகூறக் கற்றுக்கொள்வார்.
2. கோழைகள் மத்தியில் வாழ்பவர் சவாலை ஏற்றுக்கொள்ளத் தயங்குவார்.
3. அங்கலாய்ப்பான சூழலில் வாழ்பவர் அடிக்கடி தளம்பலுறுவார்.
4. அதிக பாதுகாப்பில் வாழ்பவர் பயத்தின் மறுவடிவமாவார்.
5. அடிக்கடி நகைப்பிற்குள்ளாக்கப்படுபவர் வெட்கத்திற்கு ஆளாவார்.
6. அவனை அவனாக, அவளை அவளாக ஏற்றுக்கொள்ளும் சமூகத்தில் வாழ்பவர் அன்பில் வளருவார்.
7. உற்சாகமூட்டும் சூழலில் வாழ்பவர் நம்பிக்கையின் சுடராய் பிரகாசிப்பார்.
8. சகிப்புத்தன்மை கொண்ட கூட்டத்தில் வாழ்பவர் பொறுமையின் இலக்கணமாகத் திகழ்வார்.
9. சமத்துவ சமூக அமைப்பில் சஞ்சரிப்பவர் சமூக நீதியின் உறைவிடமாகத் திகழ்வார்.

இருபத்தெட்டு வயது வாலிபனும் இருபத்திநான்கு வயது யுவதியும் காதல் வாழ்வின் நான்காண்டு இறுதியில் பெற்றோரினால் பலவந்தமாகப் பிரிவுக்கு ஆளானார்கள். நான்கு வருடங்களாக இரகசியமான முறையில் காதலை அனுமதித்த பெற்றோர் பெரும் பணத்தோடு பலர் பெண் கேட்க வந்ததும் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்கின்றார்கள். உயிருக்கு உயிராக அன்பு செய்துவந்த தாய் மிரட்டுகின்றார்.

"நீ உன் காதலியைக் கைவிட்டுவிடு. கை நிறையப் பணத்துடனும் கழுத்து நிறைய நகையுடனும் வந்துபோகும் பெண்களில் ஒருத்தியைத் தேர்ந்தெடு. நீ வசதியோடு வாழ்வதையே நான் விரும்புகின்றேன். இல்லையேல் என்னை நீ பிணமாகப் பார்ப்பாய்."

இன்று எத்தனையோ இளசுகள் தாம் விரும்பியபடி தாம் விரும்பிய வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் பல்வேறு உபாதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே ஒரு வழித் தொடர்பு இருப்பின் அதனை மாற்றியமைப்பதே அவசியமானது. இருசாராரும் ஒவ்வொரு பிரச்சனைக்கும் இரு பக்கங்கள் உள என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். கட்டாயப்படுத்தல்களும் கருணையில்லா மிரட்டல்களும் காட்டுமிராண்டித்தனமான வெளிக்காட்டல்களேயாகும். சுதந்திரமான சூழலில், ஜனநாயக முறையில் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, சுமூகமான தீர்வினை எய்துதல் ஆளை ஆள் நம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வூட்டம் பெறும் நிலையிலேயே சாத்தியமாகும்.

எனவே, பெற்றோரே கவனியுங்கள்:

- உங்கள் குழந்தைகளுடன் அன்புடன் பேசுங்கள். உங்கள் கண்கள் அவர்களை நோக்கியே இருக்கட்டும்.
- உங்கள் குழந்தைகள் அமைதியாகவும் பரபரபில்லாமலும் இருக்கப் பயிற்றுவியுங்கள்.
- உங்கள் குழந்தைளோடு நாள்தோறும் கணிசமான நேரத்தைச் செலவிடுங்கள்.
- உங்கள் குழந்தைகளிடமிருந்து அளவுக்கு அதிகமாக எதிர்பாராதீர்கள்.
- உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பாரபட்சபோக்கினைக் கை விட்டு விடுங்கள்.
- உங்கள் குழந்தைகள் கேட்பதெல்லாம் கொடுக்கவேண்டும் என்று எண்ணி அளவுக்கதிகமாக செலவக்காதீர்கள்.
- உங்கள் குழந்தைகளின் உணர்வலைகளை மதித்து நடவுங்கள்.
- உங்கள் குழந்தைகளுக்கு நேர்மையை வெளிக்காட்டுங்கள்

அதேவேளை பிள்ளைகள் தமது பெற்றோர் சார்பாக அன்பையும் மரியாதை யையும் வெளிக்காட்டவேண்டும்.

கூரையில் ஏறியபின்னர் ஏணியை உதைத்துவிடும் மனோநிலையை வயோதிபப் பெற்றோர் வருத்துமுற்றதும் அவர்களைக் கவனிக்காது உதாசீப்படுத்துவது வெளிக்காட்டுகின்றது. அவர்களை வேலைக்காரராக, அடிமைகளாக நடாத்துவது ஈனமான செயலேயாகும். மேலும், பிள்ளைகள் தம் மத்தியில் சகோதரத்துவ அன்பை அன்பை வளர்த்துக் கொள்ளவேண்டும். ஏனைய சகபாடிகளோடும் அன்பாக நடந்துகொள்ள வேண்டும். பரஸ்பர அன்புறவு பரவலாக்கப்படவேண்டும்.

*அன்றாடம் பரஸ்பரப் புரிந்துணர்வை வளர்த்து,*
*சூழலோடு இசைவாக்கம் செய்துகொள்ளுங்கள்.*
*நல்ல பெயரை வாங்கி வாழும் நல்ல*
*பிள்ளைகளாக நாளாந்தம் வாழுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. சீடத்துவ நல்வாழ்வு

சீடன் என்பவன் ஒரு மாணவன், கற்பவன், கற்பதற்காக வருபவன். அவன் இயேசுவை அடைவதையே இலக்காக முன்வைத்தவனாய் ஒரு குறிப்பிட்ட பாணியில் கிறிஸ்துவை மையப்படுத்திய சூழலில் வாழ முன்வருபவனே கிறிஸ்துவின்வழி வாழும் சீடனாவான். இயேசு அவர்களை நோக்கி, "படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்"(மாற்கு 16:15) என்று இயேசு தமது சீடர்களைப் பணித்தார்.

**சீடனுக்கான சிறப்பியல்புகள் பின்வருமாறு:**

1. அனைத்திற்கும் மேலாக, அனைவருக்கும் மேலாக இறைவனை அன்புசெய்தல்
2. இயேசுவின் இறப்பிலும் உயிர்ப்பிலும் தனது இரட்சணியம் தங்கியுள்ளது என்பதை உணர்ந்துவாழுதல்
3. தூயஆவியின் வலிமையிலும் முழுமையிலும் வாழுதல்
4. இறைவன், அயலவர், பகைவர்கள் சார்பாக நிபந்தனையில்லா அன்பை வெளிக்காட்டி வாழுதல்
5. இறைவார்த்தையை உள்வாங்கி, உள்வைத்து, வாழ்வாக்கி, வலுப்பெறுதல்
6. இறைத்தொடர்பை, செபவாழ்வை ஆழப்படுத்தி வாழுதல்
7. இயேசுக்கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் வாழ்வியல் வடிவத்தைத் தனதாக்கிக் கொண்டு, கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழுதல்
8. இறைவனையே நம்பி, விசுவாசத்தை வாழ்வாக்கி வாழுதல்
9. இறையருளைப் புரிந்துணர்வோடு ஏற்று வாழுதல்
10. இயேசுக்கிறிஸ்துவின் நற்சாட்சியாக இயங்குதல்.

இயேசு தம்மை நம்பிய சீடர்களை நோக்கி, "என் வார்த்தையை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்துவந்தால் உண்மையில் என் சீடராய் இருப்பீர்கள். உண்மையை அறிந்தவர்களாய் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32) என்று கூறினார்.

இயேசுவின் சீடன் அனைத்திற்கும் அனைவருக்கும் மேலாக இயேசுவை அன்புசெய்வதில் வல்லவனாக விளங்குவான். அவன் விசுவாசத்திலும் அன்புப் பயிற்சியிலும் கிறிஸ்துவாக உருமாற்றம் பெற்று, திருவாழ்வுப் பயணியாய் அன்றாடம் முழுப்பொலிவோடு இயங்குவான்.
இயேசுவை அன்பு செய்து வாழும் சீடன் பிறரை அன்பு செய்வதில் ஆற்றல்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாசிப்பான். "ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்துகொள்வர்" என்று இயேசு மொழிந்து உண்மையான அன்பின் சிறப்பியல்பை வெளிப்படுத்தினார் (யோவான் 13:34-35).

**இயேசுவின் சீடனுக்கான அடையாளங்கள்:**

1. இறைவனை அன்பு செய்வதையே மேலானதாகக் கொண்டு வாழுதல். ஆபிரகாம் தனது ஒரே மகன் ஈசாக்கை இறைவனுக்குப் பலியாக்க முன்வந்தார் (தொடக்கநூல் 22:10).

2. உறவுகள், தனது சொந்த உயிருக்கும் மேலாக இயேசுவை அன்புசெய்யும் நோக்கோடு தன்னையே மறுத்து, சிலுவையைச் சுமத்தல். "என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள் ஆகியோரையும், ஏன், தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது. தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராயிருக்கமுடியாது" (லூக்கா 14:26-27).

3. உங்களிடமுள்ள உள்ளவற்றை மற்றவர்களோடு பாரபட்சமின்றிப் பகிர்ந்து கொள்ளல். "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடமைகளை எல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராயிருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" (மத்தேயு 19:21) என்று இயேசு சொன்னதும் அந்த இளைஞர் வருத்தத்தோடு சென்றுவிட்டார்.

4. சீடத்துவத்தின் விலையை அளவிடல். "உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்ட விரும்பினால், முதலில் உட்கார்ந்து, அதைக் கட்டி முடிக்க ஆகும் செலவைக் கணித்து, அதற்கான பொருள் வசதி தம்மிடம் இருக்கிறதா எனப் பார்க்கமாட்டாரா? (லூக்கா 14:28).

**இயேசுவின் சீடத்துவத்திற்கான அனுகூலங்கள்:**

1. இறைவன் விரும்புவதையே தேர்ந்தெடுத்து வாழுதல்
2. இறைவனை முற்றுமுழுதாக அனுபவித்து வாழுதல்
3. ஒவ்வொரு நாளும் இறைவனோடு வாழுவதற்கான சந்தர்ப்பங்களைப் புதுப்பித்து, வையத்து வாழ்வாங்கு வாழுதல்
4. இலக்குநோக்கிய பயணத்தை இசைபடுத்தி, நெறிப்படுத்தி வாழுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுத்தல்:

- தனக்காக வாழுதல் அல்லது தன்னை மறுதலித்து வாழுதல்
- சிலுவையைப் புறக்கணித்தல் அல்லது சிலுவையை ஏற்று வாழுதல்
- தனது வாழ்வைக் காப்பாற்ற முனைந்து ஈற்றில் இழந்து நிற்றல் அல்லது தியாக நோக்கோடு வாழ்ந்து ஈற்றில் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளல்
- உலக ஈர்ப்புக்களால் கவரப்பட்டு உலகை இறுக்கப்பிடித்தல் அல்லது உலக பிடிகளிலிருந்து விடுபட்டு இறைவனோடு இரண்டற இணைதல். எனவே, சரியான இலக்கைத் தேர்ந்தெடுத்து, இனிதே வாழ முன்வாருங்கள்.
- இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்டதை ஒழுங்காகப் பயன் படுத்தி, பிறர் வாழ உதவுங்கள்.
- எங்கும் என்றும் எல்லோருக்கும் நன்மைசெய்து சென்ற இயேசுவையே முன்னுதாரணமாகக் கொண்டு வாழுங்கள்.
- இறைவனையே முதன்மைப்படுத்தி அகப்பயணத்தை அன்றாடம் மேற்கொள்ளுங்கள்.
- உலகுக்கு நற்செய்தியை முனைப்போடு அறிவியுங்கள்.
- எல்லோருக்கும் நல்வாழ்வு நல்கிட புதுவாழ்வுப்பயணிகளாய் இணைந்து செயற்படுங்கள்.

*" வாழ்வது ஒரு முறை வாழ்த்தட்டும் தலைமுறை"
என்ற புனித அன்னை தெரேசாவின் வார்த்தைகளை
வாழ்வாக்கி மகிழுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. புதுப் பயணம்

எந்த ஒரு மனிதனையும் திருத்த முடியாதவன் என்றோ எந்த ஒரு சூழலையும் திருத்தி அமைக்க முடியாது என்றோ நாம் ஒதுங்குவது தவறு. ஒவ்வொரு மனிதனும் பல்வேறுபட்ட பிரச்சனைகளை, பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அனுபவித்துக் கொண்டிருப்பான். ஏக்கம், எதிர்பார்ப்பு, ஏமாற்றம், தாகம், தன்னலம், தவிப்பு, தடுமாறல், இயலாமை, தீமைசார் வேட்கை, இறுமாப்பு போன்ற உணர்தாக்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பான். எனினும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் சில அடிப்படைக் கூறுகள் பொதுவாய் இருப்பதைக் காணலாம். அவற்றை இனம் கண்டு அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளை உய்த்தறிதல் அவசியம்.

இயேசுவின் வழியில் இறைவார்த்தையின் ஒளியில், தூய ஆவியின் துணையோடு, இறைசார்புடையவனாய், இதய அன்புடையவனாய், நல்லவை செய்வதில் வல்லவனாய், நான் என்னை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். தவறான பாதையில் செல்லுகின்ற பயணத்தை மாற்றியமைக்க நான் தீவிரமாகச் செயற்படவேண்டும். மகிழ்ச்சியான வாழ்வுக்குத் தடையாய் இருப்பனவற்றை நான் முறியடிக்க வேண்டும்.

"யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும்:
என்னில் விசுவாசம் கொள்பவன் குடிக்கட்டும்:
அவனுடைய உள்ளத்திலிருந்து உயிருள்ள நீர் ஆறாய் பெருக்கெடுத்தோடும்"
என்கிறார் ஆண்டவர் யேசுக்கிறிஸ்து (யோவான்: 7:37-39).

புதுவாழ்விற்கான படிமுறைகள்

1. எனக்கு உதவி கடவுளிடமிருந்து வருகின்றது என்பதை உணர்தல்.
2. என்னை இறைவனுக்கு அர்ப்பணமாக்குதல்.
3. என் வாழ்வை நான் உற்று நோக்குதல்.
4. எனது வாழ்வு மாற்றியமைக்கப்படல்.

**1. எனக்கு உதவி கடவுளிடமிருந்து வருகிறது என்பதை உணருதல்**

எனது பாவச்சார்புகள், துன்பங்கள், கவலைகள், பிரச்சனைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு எனக்கு உதவி தேவைப்படுகின்றது. நாளாந்த சாதாரண செயற்பாடுகளில்கூட பிறரின் உதவி அடிக்கடி தேவைப்படுகிறது என்பதை உணர்கிறேன். பயணம் செய்யும்பொழுது சாரதி வாகனம் ஓட்டத் தெரிந்தவ ராகவும் குடிவெறி போதைக்கு உள்ளாகாதவராகவும் இருக்கவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையை உணர்கின்றார். தவறுதலாக கிணற்றுக்குள் விழுந்ததும் 'காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என்று ஓலமிடுவது இல்லையா? விழுந்து கிடக்கும்பொழுது தூக்கி விடப்படுவதற்கு பிறரது உதவியை நாடுவதில்லையா? பாவத்திலிருந்தும் பல்வேறுபட்ட பாவநாட்டத்திலிருந்தும் நான் விடுதலையடைவதற்கு இறைவனின் உதவி மிகவும் தேவையானது என்பதை உணர்கின்றேன்.

ஜெரிக்கோ வழியோரத்தில் உட்கார்ந்திருந்த குருடர் இருவர் யேசுவிடம் உதவி கேட்டுக் கூவினர். கூட்டம் அவர்களையும் பேசாதிருக்கும்படி அதட்டியபொழுது அவர்கள் அதிகமாகக் கூவினர்: "ஆண்டவரே! தாவீதின் மகனே, எம்மேல் இரக்கம் வையும்" (மத்தேயு 20:30).

அவர்கள் தாம் பார்வை பெறுவதற்கு இயேசுவின் உதவி தேவை என்பதை உணர்ந்ததால்தான் அவர்கள் பேசாதிருக்கும்படி அதட்டப்பட்டபொழுதும் அதிகமாகக் கூவினார். நான் சாதாரண குருடரைப் போல அடிக்கடி காணப்படுகின்றேன். எனது பாவப் பழக்கங்களிலிருந்து விடுபடமுடியாமல் அவதிப்படுகின்றேன். எனது அகக்கண்கள் இன்னும் குருடாக இருப்பதை உணர்கின்றேன். எனது சொந்த சக்தியினால், பலத்தினால் பார்வை பெறமுடியாது என்பதை உணர்கின்றேன். எனது இந்த நிலை மாற்றியமைக்கப்படுவதற்கு எனது மனோபாங்கு மாற்றப்படவேண்டும். எனக்கு உதவி கடவுளிடமிருந்தே வருகிறது என்பதை உணர்ந்து, கடவுளால் நான் தொடப்பட வேண்டும்.

'நானோ துயர்மிக்கவன். ஏழை எனக்குத் துணை செய்யும்.
எனக்குத் துணைசெய்பவரும் விடுதலையளிப்பவரும் நீரே.
ஆண்டவரே, தாமதியாதேயும்' (திருப்பாடல் 69:5).

## 2. என்னை இறைவனுக்கு அர்ப்பணமாக்குதல்

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களும் இறைவனில் மகிழ்ந்திருக்க நான் மட்டும் ஏன் அவரில் இன்பம் காணமுடியாதவனாய் இருக்கின்றேன்? அனைத்துப் படைப்புக்களிலும் மேலானநிலையில் படைக்கப்பட்ட நான் இறைவனுக்குச் சொந்தம் என்பதை உணர ஆரம்பிக்கின்றேன். அவரது தொடர்ச்சியான கரிசனையை எண்ணி என்னை இறைவனுக்கு அர்ப்பணமாக்குகிறேன். மாறாக இறைவனை விட்டு விலகி ஓடும்போதெல்லாம் நான் துன்பம், வேதனை, வருத்தம் போன்றவற்றையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனதாக்கிக்கொள்கிறேன் என்பதைப் புரிகின்றேன்.
நினிவே நாட்டு மக்களுக்கு மனமாற்றத்தின் நற்செய்தியை அறிவிக்க அழைக்கப்பட்ட இறைவாக்கினர் இறை அழைப்பை இதை ஏற்க மறுத்து தப்பி ஓட முனைகின்றார்.

"யோனாவோ ஆண்டவரிடமிருந்து தப்பியோட எண்ணி தர்சீசுக்குப் புறப்பட்டார். கப்பலிலேறினார்"(யோனா 1:2-3).

கப்பற் பயணம் இடையிலே குழப்பப்படுகிறது: கப்பலிலிருந்து தூக்கி எறியப்படுகிறார். திமிங்கலம் ஒன்று அவரை விழுங்குகின்றது. அதன் வயிற்றுக்குள்ளிருந்து கொண்டு யோனா ஓலமிடுகிறார். இறைவனிடம் தன்னை ஒப்படைக்கிறார். மூன்று நாட்களின் பின் திமிங்கலம் அவரை கரையில் கக்குகின்றது. இறை அழைப்பை ஏற்று நினிவே நகரத்து மக்களுக்கு இறைவார்த்தையை அறிவிக்கின்றார்.

இதிலிருந்து இறைவன் எனக்கும் உங்களுக்கும் நல்லதொரு பாடத்தைக் கற்பிக்கின்றார். இறைவன் திருமுன்னிலிருந்து எப்பொழுதெல்லாம் விலகி ஓடுகின்றோமோ அப்பொழுதெல்லாம் எமது வாழ்விலும் அலை மோதும். புயல் அடிக்கும். தூக்கி எறியப்படுவோம். அழுது புலம்பி ஆண்டவரிடம் எம்மை ஒப்படைத்து விடும்பொழுது தூயவெண்பனி போல் அவர் எம்மை தூய்மையாக்கிவிடுவார்.

தொங்கிக்கொண்டு துயரத்தின் உச்சக்கட்டத்தை அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில் கூட "தந்தையே உமது கையில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன்" என்று இறைவனிடம் தன்னை ஒப்படைத்தார்.

## 3. என் வாழ்வை நான் உற்று நோக்கல்

என் வாழ்வை நான் உற்று நோக்கின்,
நான் யார்?
நான் உண்மையில் நல்லவனா?
எனது பார்வை, எனது பேச்சு எனது வாழ்க்கைமுறை, எனது செயற்பாடு இவை யாவும் நான் இயேசுவில் தங்கிவாழுகின்றேன் என்பதை வெளிப்படுத்துகின்றனவா? ஒழிப்பு, மறைப்பு, நடிப்பு என்று முகமூடிபோட்டு வாழும்நிலை என்றுதான் மாறும்? அன்புத்தந்தையாக, அன்புத்தாயாக, அன்புக்கணவராக, அன்புச் சகோதரனாக, அன்புச்சகோதரியாக, அன்பு நண்பனாக நான் ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் வாழவில்லை? உண்மை அன்புக்கும், தூய நட்புக்கும் துரோகம் செய்யும் களங்கமுள்ள உள்ளமாக நான் காணப்படுகின்றேனா?
யாக்கோப்பின் கிணற்றருகே இயேசுவைச் சந்தித்த சமாரியப்பெண் இயேசுவின் முன்னால் திறந்த ஒரு புத்தகமாகத் தான் கிடப்பதை உணர்ந்தாள். தனது வாழ்வின் உணர்வுக்கீறல்களை, உறவு விரிசல்களை உற்றுநோக்கினாள். அப்பெண் இயேசுவின் இரக்கத்தினால் இரட்சிக்கப்பட வேண்டியவள் என்பதை அறிக்கையிட்டாள்.

"நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள். அவர் மெசியாவாக இருப்பாரோ?" என்று உருக்கமாகச் சொல்லி இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்தாள். இயேசுவைச் சந்தித்த பின்னர், இயேசுவோடு சும்மா இருப்பது என்பது சாத்தியமல்ல. அன்பியம், அன்பியம் என்று எங்களை சும்மா இருக்க விடுறீங்க இல்லையே! அன்பில்லாத அன்பியத்தில் எங்களுக்கு பங்கு வேண்டாம். உங்கட தொடர்பும் வேண்டாம். தொந்தரவும் வேண்டாம். நானும் என் குடும்பமும் என்று இருந்தால் போதும் என்று மனம் சோர்ந்து ஒதுங்கிப்போகும் நிலைவேண்டாம். என்னை இயேசுவிற்காகச் சாவும் அளவுக்குச் சாட்சியம் பகருமாறு அழைப்பவர் இயேசுக்கிறிஸ்து ஆவார்.

பாவத்திற்கு அடிமையான ஒருவனாக நான் தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதை உணர்கின்றேன். தாவீது அரசன் தவறு செய்தார். ஊரியாசின் மனைவியைத் தன் மனைவியாக்கிக் கொண்டதோடு அவனையும் கொலையுறச் செய்தார். எனினும் அவர் தனது தவறை ஏற்று மனம் வருந்தி அழுது புலம்பி மன்னிப்புக் கேட்டார். "இறைவா, உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும். உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும்" என்று தாவீது அரசர் அழுதழுது பாடினார் (தி.பா 51).

"எனக்குச் சத்தியமாக அவரைத் தெரியாது" என்று மூன்று முறை மறுதலித்த பேதுரு தனது தவறை உணர்ந்து மனம் வெதும்பி அழுதார். அதே பேதுருவை மன்னித்து " என் ஆடுகளை மேய்" என்று யேசு கூறி அவரைத் திருச்சபையின் முதற்தலைவராக உயர்த்தினார். மனப்பாரங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும்பொழுது பாதியாகக் குறைகின்றது. மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும்பொழுது இரட்டிப்பாகிறது. இதனை இயேசு நிறுவிய ஒப்புரவு அருட்சாதனம் இலகுவாக்குகின்றது. இயேசுவின் கருவியாக இயங்கும் குருவானவரிடம் நான் எனது பாவங்கள் எல்லாவற்றையும் மனம் வருந்தி அறிக்கையிட்டு மன்னிப்பும் மகிழ்வும் பெறுவது சாத்தியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை ஒரு குறிப்பிட்ட பாவி தான் அதே பாவத்தை திரும்பவும் திரும்பவும் செய்து வந்ததை ஒரு குருவானவரிடம் அறிக்கையிட்டான். அப்பொழுது அக்குருவானவர், " நீ எப்பொழுதும், நான் அப்பாவத்தைத் திரும்பவும் செய்ய மாட்டேன் என்று சொல்லிப்போட்டு அதே பாவத்தை மீண்டும் செய்துவிட்டு வருகின்றாய். இம்முறையும் நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய். எனவே எழுந்து போ. உனக்கு மன்னிப்பு தரமாட்டேன்" என்று அதட்டினார்.

அம்மனிதர், "பாதர், இந்த முறை மன்னிச்சிடுங்க. நான் நிட்சயமாக இனிமேல் அந்தப் பாவத்தை செய்யமாட்டேன். இரக்கம் காட்டுங்கள் சுவாமி" என்று அழுதழுது சொன்னான். ஆனால், 'குருவானவரோ, இல்லை என்றால் இல்லை, உனக்கு பாவமன்னிப்பு இல்லை' என்று கோபத்தோடு சொல்லி அவனைத் துரத்தினார்.

அன்று இரவு சிலுவையில் தொங்கிய இயேசு குருவானவரோடு பேசினார்: "உலக மக்களை மீட்பதற்காக பாடுகள்பட்டு இரத்தம் சிந்தி சிலுவையில் மரணித்தது நீயா? நானா? அழுதழுது அந்தப்பாவி உன்னிடம் மன்னிப்புக் கேட்க மன்னிக்க மாட்டேன் என்று நீ கடுமையாக நடந்து கொண்டது நியாயமா?"

நானும் இவ்வாறு பலதடவைகள் எனது வாழ்வில் பிறர் சார்பாக மிகவும் கடுமையாக நடந்துள்ளேன்.

"நான் உன்னை ஒருபோதும் மன்னிக்கமாட்டேன். செத்தாலும் என் பிரேதத்தில் நீ முழிக்கக் கூடாது" என்று நான் கடுமையான வசனங்களால் பேசி பிறரைப் புண்படுத்தி வருவதை உணர்கின்றேன். எனினும், இறைவன் என்னை மன்னிக்க ஆவலோடு காத்திருக்கின்றார். "மனம் திரும்பி என்னிடம் வா மகனே, வா மகளே" என்று இரு கரம் நீட்டி இதயத்தைத் திறந்தவராய் இருக்கிறார். அரவணைத்து அன்பு செய்ய அழைக்கின்றார்.

## 4. எனது வாழ்வு மாற்றியமைக்கப்படுதல்

பார்வை பெறவேண்டும் நான் பார்வை பெற வேண்டும்

என் உள்ளம் உன் ஒளி பெறவேண்டும்,

நான் பார்வை பெறவேண்டும்,

புதுப்பார்வை பெறவேண்டும்,

நான் பார்வை பெறவேண்டும்,

வாழ்வின் தடைகளை தாண்டியெழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப் பார்வை பெறவேண்டும்,
நாளும் பிறக்கும் உந்தன் வழியைக் காணும்
பார்வை பெற வேண்டும்.
உன்னாலே எல்லாமுமே ஆகும் நிலை வேண்டும்
நான் பார்வை பெற வேண்டும்.
எனது வாழ்வு மாற்றியமைக்கப்படுவதற்கு
எனது பார்வையில்,
எனது பேச்சில்,
எனது சிந்தனையில்,
எனது செயலில்,
மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பழையனவற்றைக் களைந்து விட்டுப் புதியனவற்றை எனதாக்கிக் கொள்ள வேண்டும்.

"நீங்கள் பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்து விட்டு புதிய மனித இயல்பை அணிந்திருக்கின்றீர்கள். அவ்வியல்பு தன்னை உண்டாக்கியவரின் சாயலுக்கேற்பப் புதுப்பிக்கப்படுகிறது"

(கொலோசையர் 3:9-10)

சிலர் நெஞ்சினிலே நெருஞ்சிக்கு நீர் ஊற்றுகின்றார்கள். நாவினிலே நந்தவனத்தை உருவாக்குகின்றார்கள். சிலர் புறத்திலே தேன், அகத்திலே தேள்.

ஒரு முறை இருவர் உரையாடிக்கொண்டிருந்தார்கள்:
1 வது ஆள் : உங்களுக்கு கடவுளைக் காணவேண்டும் என்ற ஆசை உண்டா?
2 வது ஆள் : நிச்சயமாக.
1 வது ஆள் : அப்படியானால் உங்களது சேட்டைக்கழற்றி என்னிடம் தந்துவிட்டு கண்களை மூடியவண்ணம் ஐந்து நிமிடங்கள் மெதுவாக நடவுங்கள். அப்பொழுது நீங்கள் கடவுளைக் காணுவீர்கள்.

அப்பொழுது 2வது ஆள் சேட்டைக் கழற்றி 1வது ஆளிடம் கொடுத்துவிட்டு, கண்களை மூடியவண்ணம் நடந்தார்.

2 வது ஆள்: ஆகா கடவுள் எவ்வளவு நல்லவராய் இருக்கிறார். அவரைக் காணக்காண எவ்வளவு சந்தோசமாய் இருக்கு.
(கடவுளைக் காணும் போது உண்டாகும் பேரானந்தத்தை அனுபவித்து சொல்லிக் கொண்டே சென்றார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இவ்விருவரும் நடந்து கொண்டதையும் பேசிக் கொண்டதையும் ஒரு செல்வந்தர் அவதானித்துக் கொண்டு நின்றார். அவர் தானாகவே முன் வந்து, "நானும் கடவுளைக் காண விரும்புகிறேன்" என்று கூறியவண்ணம் தனது புது சேட்டைக் கழற்றிக் கொடுத்துவிட்டு, கண்களை மூடிய வண்ணம் மெதுவாக நடந்தார். ஐந்து நிமிடங்கள் ஆகியும் அவர் கடவுளைக் காணவில்லை, வேதனையோடு திரும்பிப் பார்த்தார். இருவரையும் காணவில்லை. கடைசியில் சேட்டைப் பறி கொடுத்ததுதான் மிச்சம்.

வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு முதலில் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும். தூய, தியாகச் சிந்தனைகளினால் மனம் நிரப்பப்பட வேண்டும். இன்று செய்யக் கூடியவற்றை இன்றே நன்றாகச் செய்யும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இறைத்தந்தையின் மொழியில்,
இயேசுவின் வழியில்,
இறைவார்த்தையின் ஒளியில்,
தூய ஆவியின் துணையோடு
வாழ்க்கைப் பயணத்தை நாம் தொடரும்பொழுது,
அது இனிதானதாக, இதமானதாக அமையும் என்பதே உண்மை.
இதய தாகமுள்ள தேவன் எம்மைத் தொடுவாராக!

*பழையன கழியட்டும்! புதியன மலரட்டும்!*

*பார்வையில் மாற்றம் ஏற்றத்தைத் தரட்டும்!*

*சிந்தனை மாற்றம் சிறப்பாய் அமையட்டும்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. இறைவனின் பேரன்பு

“இறைவன் இரக்கமும் அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர். அவர் தமக்கு அஞ்சுவோருக்குக் காட்டும் பேரன்பு மண்ணினின்று விண்ணளவு போன்று உயர்ந்தது” (திருப்பாடல் 103:8,11).

இறைவனின் அன்பை மனித வார்த்தைகளால் முற்றுமுழுதாக விளங்கிக் கொள்ளல் கடினம். எனினும் இறைவனின் பேரன்பை அனுபவித்துக்கொண்டிருப்போர் இதனை இலகுவாகப் புரிந்துகொள்வர்.

ஒருமுறை ஒரு பேச்சாளன் மேடையில் ஏறி முழங்கினான்:

'கடவுள் இருக்கிறார் என யாராவது வாதாட விரும்பினால் அல்லது கேள்வி கேட்க விரும்பினால் மேடைக்கு வரலாம்' என்று சவால் விட்டான். அவ்வூரில் குடிகாரன் ஒருவன் குடிவெறியில் இருந்து குணப்பட்டு நல்ல கிறிஸ்தவனாக மாறியிருந்தான். அவன் மேடைமீது ஏறினான். ஒரு தோடம்பழத்தை எடுத்து தோலை உரித்து மெதுவாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

'கேள்வி கேட்காமல் தின்று கொண்டு நிற்கின்றாயே!' என்று ஆத்திரமடைந்தான் பேச்சாளன். பழத்தை தின்று முடித்துவிட்டுக் கேள்வி கேட்கின்றேன்' என்று சொல்லியவாறு அவன் சுளை சுளையாக சுவைத்து உண்டான். பின்னர் பேச்சாளனைப் பார்த்து பழம் நன்றாய் இருந்ததா? என்று கேட்டான்? பேச்சாளனோ, 'பைத்தியக்காரா, பழத்தை நான் தின்று பார்க்காமல் அதன் சுவையை எப்படிச் சொல்லமுடியும்?' என்றான். 'கடவுள் நல்லவர் என்பதை நீ சுவைத்துப் பார்த்தால்தானே தெரியும். பின் ஏன் கடவுள் இல்லை என உளறுகிறாய்?' என்றான். ஒரே கைதட்டல், ஒரே ஆரவாரம். நாத்திகன் நாணிப் போனான். 'கடவுள் நல்லவர் என்பதைச் சுவைத்துப் பாருங்கள்' (திருப்பாடல் 34,8) என்று திருப்பாடல் ஆசிரியர் சிறப்புறச் சொன்னார்.

இறைவனின் பேரன்பின் இயல்புகளைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. குணமாக்கும் இயல்பு
2. மன்னிக்கும் இயல்பு
3. நிறைவாக்கும் இயல்பு
4. மகிழ்விக்கும் இயல்பு
5. வாழ்விக்கும் இயல்பு
6. தாரைவார்க்கும் இயல்பு
7. பிறரை அன்பு செய்யும் இயல்பு
8. நிபந்தனையில்லாமல், எதிர்பார்ப்பில்லாமல் அன்பை முன்கூட்டியே வெளிப்படுத்தும் இயல்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எப்ராயிமுக்கு நடை பயிற்றுவித்தது நானே: அவர்களைக் கையிலேந்தியதும் நானே. ஆயினும் அவர்களைக் குணமாக்கியது நானே என்பதை அவர்கள் உணராமல் போனார்கள். பரிவு என்னும் கட்டுக்களால் அவர்களைப் பிணைத்து அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன். அவர்கள் கழுத்தில் மேல் இருந்த நுகத்தை அகற்றினேன். அவர்கள் பக்கம் சாய்ந்து உணவூட்டினேன்.
எப்பிராயிமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்?
இஸ்ராயேலே, உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்?
என் இரக்கம் பொங்கி வழிகின்றது' (ஓசாயா 11:3,4,8).

"உனக்கு நான் முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன். எனவே பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன். எப்ராயிம் என் அருமை மகன் அல்லவா? நீ என் அன்புக் குழந்தையல்லவா? உனக்கு எதிராக நான் அடிக்கடி பேசிய போதிலும் உன்னை நான் இன்னும் நினைவில் கொண்டுள்ளேன். உனக்காக என் இதயம் ஏங்கித்தவிக்கின்றது. திண்ணமாய் உனக்கு நான் இரக்கம் காட்டுவேன்" என்கிறார் ஆண்டவர் (எரேமியா 31:3,20).

இறைவன் இஸ்ராயேலரோடு நிரந்தரமான புதியதொரு உடன்படிக்கையைச் செய்துக்கொள்கிறார். இஸ்ராயேலர் அடிக்கடி தளம்பலுற்று இறைவனுக்கு எதிராகச் செயற்பட்டு வருவதைப் பெரிது படுத்தாமல் தாராளமான முறையில் தனது பேரன்பை வெளிப்படுத்துகின்றார். அந் நாட்களுக்குப் பிறகு இஸ்ராயேல் வீட்டாரோடு நான் செய்யவிருக்கும் உடன்படிக்கை இதுவே.

"என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன். இதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன். நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன். அவர்கள் எனது மக்களாய் இருப்பார்கள்" என்கிறார் ஆண்டவர். (எரேமியா 31:33)

இந்த உண்மையை இறைவன் மீளவும் இறைவாக்கினர் எசேக்கியாவின் மூலம் உறுதிப்படுத்துகின்றார். "நான் உங்களுக்கு புதிய இதயத்தை அருளு வேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலில் இருந்து கல்லான இதயத்தை எடுத்துவிட்டு சதையாலான இதயத்தைப் பொருத்துவேன். அப்பொழுது நீங்கள் என் மக்களாயிருப்பீர்கள். நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்" (எசேக்கியல் 36:26-28).

ஒரு தாய்க்கும் சேய்க்கும் இடையே நிலவும் இயல்பான உறவினை உருவகப்படுத்தி இறைவனின் பேரன்பின் கனிவினை, கரிசனையினை இறைவாக்கினர் எசாயா வர்ணிக்கிறார். "பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன். இதோ என் உள்ளங்கையில் உன்னை நான் பொறித்துள்ளேன்" (எசாயா 49:15).

"எனக்குச் செவி கொடுங்கள்: என்னிடம் வாருங்கள்: கேளுங்கள் அப்பொழுது நீங்கள் வாழ்வடைவீர்கள். நான் உங்களுடன் என்றுமுள்ள உடன்படிக்கை யைச் செய்து கொள்வேன். தாவீதுக்கு நான் காட்டிய பேரன்பை உங்களுக்கும் காட்டுவேன்" (எசாயா 55:03).

தூய அன்பின் தன்மையை இறைவனின் அன்பிலிருந்தே அறிந்து கொள்ள முடியும் என்ற உண்மையை அப்போஸ்தலரான யோவான் விளக்குகின்றார்.

"அன்பு கடவுளிடமிருந்து வருகின்றது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிட மிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல: மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில் தான் அன்பின் தன்மை விளங்குகின்றது" (1யோவான் 4:7-10).

இறைவனின் பேரன்பை அனுபவிப்போர் பிறரோடு அன்பாகப் பழகுவர். பிறரது உள்ளத்தில் அன்புச் சகோதரனாக, அன்புச் சகோதரியாக இடம் பெறுபவர். கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதர சகோதரியை வெறுப்போர் பொய்யர். கண்முன்னேயுள்ள சகோதர சகோதரியிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்த வேண்டும் (1யோவான் 4:20-21).

ஈற்றில், புனித பவுல் கொரிந்திய மக்களுக்கு எழுதிய முதற் திருமுகத்தில் தூய அன்பின் சிறப்பியல்பை விளக்குவதை அவதானிக்கலாம். நான் மானிடரின் மொழிகளிலும் வான தூதரின் மொழிகளிலும் பேசினாலும் அன்பு எனக்கில்லை யேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமுமாவேன். இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கிருப்பினும் மறைபொருள் அனைத்தையும் அறிந்த வனாய் இருப்பினும் அறிவெல்லாம் பெற்றிருப்பினும் மலைகளை இடம்பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பில்லையேல் நான் ஒன்றுமில்லை. என் உடைமையையே நான் வாரிவழங்கி னும் என் உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை (1 கொரிந்தியர் 13:1-3).

இவ்வாறு புனித பவுல் அன்பில்லாமையின் வெறுமையினை வர்ணிக்கின்றார்.

*அன்புடைமையே மனித வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 என்றுமே நன்மை செய்பவர்

"அன்பருக் கன்பனான மெய்யன் ஐய்யன்
ஆனந்த மோனன் அருட்குரு நாதன்"

*-தாயுமானவர்.*

என்றுமே நன்மை செய்பவராய், எல்லோரையும் அன்பு செய்பவராய் இருப்பவரே நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து- "நன்னயம் செய்வோருக்கு மட்டுமன்றி இன்னா செய்வோருக்கும் நல்லவராய் இயங்குபவரே இவர்."

ஏழை ஒருவர் மிகவும் பசியுற்ற நிலையில் அரண்மனை மாதோட்டத்துள் புகுந்து, மாமரம் ஒன்றிற்கு கல்லால் எறிந்தான். இரண்டு மாங்கனிகள் அவனுக்குக் கிடைத்தன. அதேவேளை தற்செயலாக அங்கு நின்ற அரசனின் தலையை அவன் எறிந்த கல் காயப்படுத்திற்று. காவலர்கள் அவனைப்பிடித்து அரசனிடம் கையளித்து தக்க தண்டனை கொடுக்குமாறு கோரிக்கை விடுத்தார்கள். அரசனோ புன் சிரிப்புடன், தன்மேல் கல்லெறிந்த அவனுக்கு மாமரம் இரண்டு மாங்கனிகள் கொடுத்துவிட்டது. இம்மாமரத்தையும்விட மிகவும் மேலான வனாகிய நான் என் தகுதிக்கு ஏற்றவாறு பரிசு கொடுக்கவேண்டாமா? என்று கூறி கல்லால் எறிந்து தன்னைக் காயப்படுத்திய அந்த ஏழைக்கு நிறையப்பரிசுகள் கொடுத்து அனுப்பினார். ஏழை மனிதன் மிகவும் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினார்.

இந்த அரசனையும்விட மிகவும் மேலான முறையிலே இயேசு எம்மேல் அன்பு கொண்டவராக, பரிவு காட்டுபவராக இருக்கிறார்.

ஒருமுறை இயேசு பரிசேயர் சீமோனது வீட்டிற்கு விருந்தாளியாகச் சென்றார். அவ்வேளை பாவிப் பெண்ணொருத்தி, இயேசு அங்கிருப்பதை அறிந்தவளாய் செல்கின்றாள். இயேசுவிற்குப் பின்னால் காலமாட்டில் வந்து அவள் அழுது கொண்டே நின்றாள். அவரது காலடிகளைத் தன் கண்ணீரால் நனைத்து, தன் கூந்தலால் துடைத்து தொடர்ந்து முத்தமிட்டு அவரது காலடிகளில் நறுமணத் தைலம் பூசினாள்.

இதைக்கண்ணுற்று, சீமோனோ இயேசுவைத் தவறாகப் புரிந்து கொண்டார். இயேசு அவரைப் பார்த்து "சீமோனே, நான் உமக்கு ஒன்று சொல்ல வேண்டும்" என்றார். அதற்கு சீமோன், "போதகரே சொல்லும்" என்றார்.

அப்பொழுது இயேசு, "கடன் கொடுப்பவர் ஒருவரிடம் ஐந்நூறு தெனாரியமும் மற்றவர் ஐம்பது தெனாரியமுமாக இருவர் கடன்பட்டிருந்தனார். கடனைத் தீர்க்க அவர்களால் முடியாமல் போகவே இருவர் கடனையும் அவர் தள்ளுபடி செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். இவர்களுள் யார் அவரிடம் மிகுந்த அன்பு செலுத்துகிறார்?" என்று கேட்டார்.

சீமோன் மறுமொழியாக, "அதிக கடனை யாருக்கு தள்ளுபடி செய்தாரோ அவரே என நினைக்கின்றேன்" என்றார். இயேசு அவரிடம் "சொன்னது சரியே" என்றார். அவர் பின்பு அப்பெண்பக்கம் திரும்பி சீமோனிடம், "இவரைப் பார்த்தீரா? நான் உம்முடைய வீட்டிற்கு வந்தபொழுது நீர் என் காலடிகளை கழுவ தண்ணீர் தரவில்லை. இவரோ தம் கண்ணீரால் என் காலடிகளை நனைத்து அவற்றைத் தமது கூந்தலால் துடைத்தாள். நீர் எனக்கு முத்தம் கொடுக்கவில்லை. இவரோ நான் உள்ளே வந்ததும் முதல் என் கால்களை ஓயாமல் முத்தமிட்டுக் கொண்டே இருக்கிறார். நீர் எனது தலையில் எண்ணெய் பூசவில்லை. இவரோ என் காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார். ஆகவே நான் உமக்குச் சொல் கின்றேன். இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார்" (லூக் 7:36-47).

இயேசு சென்ற இடமெல்லாம் நன்மை செய்துகொண்டே சென்றார். மனிதனுக்கு நலம் கொடுப்பதிலேயே அவரது பேச்சும் மூச்சும் இருந்தது. அவரது சிந்தனை சொல், செயல், அவரது வாழ்க்கை முறை அனைத்தும் மனித நலத்தை, மனித இரட்சிப்பை மையப்படுத்தியதாய் இருப்பதை நாம் அவதானிக்கலாம். அவர்கள் மறுகரைக்குச் சென்று கெனசேரத்து பகுதியை அடைந்து படகைக் கட்டி நிறுத்தினார்கள். அவர்கள் படகைவிட்டு இறங்கிய உடனே மக்கள் இயேசுவை இன்னார் என்று கண்டுணர்ந்து அச்சுற்றுப்பகுதி எங்கும் ஓடிச்சென்று அவர் இருப்பதாகக் கேள்விப்பட்ட இடங்களில் எல்லாம் நோயாளர்களை படுக்கையில் கொண்டு வரத்தொடங்கினார்கள். மேலும் அவர் சென்ற ஊர்கள், நகர்கள், பட்டினங்கள் அனைத்திலும் உடல் நலம் குன்றியோரை பொது இடங்களில் கிடத்தி அவருடைய மேலுடையின் ஓரத்தையாவது அவர்கள் தொட அனுமதிக்கு மாறு அவரை வேண்டினார்கள். அவரைத் தொட்ட அனைவரும் நல மடைந்தார்கள் (மாற்கு 6:35).

கடவுள் நாசேரத்து இயேசுவின் மேல் தூயஆவியாரின் வல்லமையை பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார் (திருப் பணி 10:38).

ஆள்பாராமல், நாள்பாராமல் இயேசு என்றும் நன்மை செய்து கொண்டு எல்லோருக்கும் நற்செய்தியாக சென்றார். பதினெட்டு ஆண்டுகளாக பேயினால் நோயுற்றிருந்த கூனிப்பெண்ணை ஓய்வு நாளில் குணமாக்கினார். ஆனால் ஓய்வு நாளில் குணப்படுத்தியதைக் கண்ணுற்ற தொழுகைக் கூட தலைவரோ கோபவெறிகொண்டு மக்கள் கூட்டத்தைப் பார்த்து "வேலை செய்ய ஆறு நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. அந்நாட்களில் வந்து குணம் பெற்றுக்கொள்ளுங்கள்: ஓய்வு நாளில் வேண்டாம்" என்றார்.

ஆண்டவரோ "வெளிவேடக்காரரே நீங்கள் ஒவ்வொருவரும் ஓய்வு நாளில் தம் ஆட்டையோ. கழுதையையோ தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டு போய் தண்ணீர் காட்டுவதில்லையா? பாருங்கள் ஆபிரகாமின் மகளாகிய இவரை பதினெட்டு ஆண்டுளாக சாத்தான் கட்டி வைத்திருந்தான். இந்தக் கட்டிலிருந்து அவரை ஓய்வு நாளில் விடுவிப்பது முறையில்லையா?" என்று கேட்டார் (லூக்கா 13:14-17).

சொல்லளவில் நல்லவர்கள் என பெயர் பெற்றுக்கொண்டு செயலளவில் பிறருக்குத் தீங்கு செய்வதில் வல்லவர்களாக திகழ்ந்தார்கள் பரிசேயர்கள். பரிசேயர்கள் பற்றிய கதை ஒன்று|

இந்த உலகில் பத்து நல்லவர்கள் இருக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளு வோம். அவர்களுள் நானும் எனது மகனும் நிச்சயமாக இடம்பெறுவோம். அதேவேளை இந்த உலகத்தில் இரு நல்லவர்கள் உள்ளார்கள் என வைத்துக் கொள்ளுவோம், அப்படியானால் அந்த இரு நல்லவர்கள் நானும் எனது மகனுமாகத்தான் இருக்க முடியும். மேலும் இந்த உலகில் நல்லவர் ஒருவர் தான் உள்ளார் எனில் நிச்சயமாக அந்நல்லவர் நானாகத்தான் இருக்கமுடியும் என்று பரிசேயன் பெருமையாகப் பேசிக்கொள்வான். பரிசேய மனப்பான்மையும் பரிசேய செயற்பாடுகளும் இயேசுவிற்கு புறம்பானவையே.

ஓய்வு நாள் அன்று இயேசு பரிசேயர் தலைவர் ஒருவடைய வீட்டிற்கு உணவு அருந்த சென்றிருந்தார். அங்கிருந்தோர் அவரைக் கூர்ந்து கவனித்தனர். அங்கே நீர்கோவை நோயுற்ற ஒருவர் அவர் முன் இருந்தார். இயேசு திருச்சட்ட அறிஞர்களைப் பார்த்து "ஓய்வு நாளில் குணப்படுத்துவது முறையா? இல்லையா?" என்று கேட்டார்.

அவர்கள் அமைதியாக இருந்தனர். இயேசு அவரது கையைப்பிடித்து அவரை நலமாக்கி அனுப்பி விட்டார். பிறகு அவர்களை நோக்கி "உங்களுள் ஒருவர் தம் பிள்ளையோ மாடோ கிணற்றுள் விழுந்தால் ஓய்வு நாள் என்றாலும் அதனை உடனே தூக்கிவிடமாட்டாரா?" என்று கேட்டார். அதற்கு பதில் சொல்ல அவர்களால் இயலவில்லை (லூக்கா 14:1-6).

*உள்ளத்தால், உணர்வுகளால் பிறரது நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்வில் இன்பம் கண்டார் இயேசு. மகிழ்வித்து மகிழும் நல்லுள்ளமாக, அனைவரையும் வாழ்வித்து வாழும் உலக மீட்பராக விளங்கினார் இயேசு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 நல்வாழ்வு நல்கும் நற்கருணை

இயேசு நற்கருணையில் தன்னைப் பலியாகவும் விருந்தாகவும் வெளிப்படுத்துகின்றார். இங்கே மூன்று உண்மைகள் புலப்படுகின்றன. அவையாவன:

1. இயேசு பரிவன்பில் பரிணமிக்கும் புதிய உறவின் இணைப்பாளராகின்றார்.
2. இப்புதிய உறவு இயேசுவின் சுய பலியால் கட்டி எழுப்பப்படுகின்றது.
3. இப்புதிய உறவின் பயனாக எமது பாவங்கள் போக்கப்படுகின்றன.

**1. இயேசு பரிவன்பில் பரிணமிக்கும் புதிய உறவின் இணைப்பாளராகின்றார்.**

பழைய ஏற்பாட்டில், கடவுள் - மக்கள் உறவு பெரும்பாலும் எஜமான் - வேலையாள், தலைவன் - அடிமை என்ற வடிவில்தான் இருந்தது. ஆனால் இயேசு சிலுவையில் தனது உடலையும் இரத்தத்தையும் பலியாக ஒப்புக்கொடுத்து உருவாக்கிய உடன்படிக்கையால் கடவுள் - மனிதர் இடையேயான உறவில் அடிப்படை மாற்றத்தைக் கொணர்ந்தார். அடிமை மனநிலையை அழித்து, உரிமைக் குடிமக்களுக்குரிய மனநிலையைப் பெற்றுத் தந்தார். இயேசு ஏற்படுத்திய இந்தப்புதிய உறவு பயந்துவாழ்ந்த மனநிலையை மாற்றி, அச்சமின்றிச் சுதந்திரத்துடன் வாழும் உரிமையைக் கொடுத்தது. "கடவுள் நம்மை இயேசுக்கிறிஸ்துவின்மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்துவைத்தார்"(எபே. 1:5) என்று புனித பவுல் புதிய உறவினை உறுதிப்படுத்தினார்.

**2. இப்புதிய உறவு இயேசுவின் சுயபலியால் கட்டி எழுப்பப்படுகின்றது.**
"இந்த இரத்தம் என் இரத்தத்தினால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை" (லூக்கா 22:20) என்று இயேசு இறுதி இராவுணவின்பொழுது மொழிந்தார். புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராக இருக்கும் இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் நமக்காகத் தருவதன்மூலம் கடவுள் - மனிதர் இரட்சணிய வரலாற்றில் புதிய உறவைக் கட்டி எழுப்புகின்றார். இங்கு மனிதர் அனைவருக்கும் பிள்ளைகளுக்குரிய உரிமைகளும் கடமைகளும் தெளிவாக உறுதிப்படுத்தப்படுகின்றன.

**3. இப்புதிய உறவின் பயனாக எமது பாவங்கள் போக்கப்படுகின்றன.**
இயேசுவின் சுயபலியால் கட்டி எழுப்பட்ட புதிய உறவின் பயனாக எமது பாவங்கள் போக்கப்பட்டு இறைவனுக்குச் சொந்தமாக்கப்படுகின்றோம். சிலுவையில் பலியாகிய இயேசு எம் பாவங்களை எல்லாம் போக்கி, நற்கருணையில் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு விருந்தாக்குகின்றார். புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதற் திருமுகத்தில் பிளவுபட்ட மனநிலையை முறியடிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றார். "ஒவ்வொருவரும் தாம் கொண்டு வந்த உணவை மற்றவர்களுக்கு முந்தியே உண்டுவிடுகிறீர்கள். இதனால் சிலர் பசியாய் இருக்க வேறு சிலர் குடிவெறியில் இருக்கிறார்கள். உண்பதற்கும் குடிப்பதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? அல்லது கடவுளின் திருச்சபையை இழிவுபடுத்தி இல்லாதவர்களை இழிவுபடுத்துகிறீர்களா?"(1கொரி. 11:20-22) என்று புனித பவுல் கேள்வி கேட்டு, நாம் பிறரது இரட்சிப்பிற்காக அயராது காத்திருந்து இரட்சிப்புப்பணியில் ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் ரஸ்யாவில் கணவன் உட்பட பதினான்கு பேரைக் கொலை செய்து தின்றதாகக் கூறப்படும் 68 வயதுப் பெண்ணை பொலிசார் கைதுசெய்தனர். இறுதியாக அவள் 79 வயதுப் பெண்ணைக் கொன்று அவளது நுரையீரல், கண் போன்றவற்றைத் தோண்டியெடுத்து வீட்டின் அருகாமை யிலுள்ள குப்பையில் வீசியது அம்பலமானதால் பொலிசார் அவளைக் கைது செய்தனர். தனது வீட்டில் குடியிருந்த வாலிபர் உட்பட 14 பேரைக் கொலைசெய்த விபரத்தைத் தனது ஆய்வில் பதிவுசெய்ததாக ஆய்வில் தெரியவந்தது. ஆனால் இயேசுவோ தனது நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதே மேலானது என்று சொல்லி அதைச் செயலிலும் வெளிக்காட்டினார். இயேசு மிகவும் மோசமான முறையில் கொல்லப்பட்டார். இறைவனுக்கு ஏற்புடையமுறையில் தன்னைப் பலியாக மனமுவந்து சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்.

எனவே, நாமும் நற்கருணையை நினைவு கூரும்வேளையில் நல்வாழ்வை மேற்கொள்ள நான்கு தீர்பானங்கள் எடுப்போம்:

1. எம்மையே இறைவனுக்கு நேர்ந்தளிப்போம்.
2. இயேசுவோடு இணைந்துகொள்ளும் இலக்கை முன்வைத்து, நிபந்தனையற்ற அன்புகொண்டு தியாகவேள்வியில் இணைவோம்.
3. எம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்க எம் சுயநலத்தில் மடிந்திடுவோம்.
4. அர்ப்பணப்பூக்களாய் அவனியில் மலர்ந்திடுவோம்.

"உன்வீடு, உனது பக்கத்துவீட்டின் சுவரை இடித்து,
எங்கும் பாரடா இப்புவி மக்களை
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை,
உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய்"

– பாரதிதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 மலைப்பொழிவு

மத்தேயு நற்செய்தி ஏட்டின் 5ம் அதிகாரத்திலிருந்து 7ம் அத்திகாரம் வரையிலான பகுதி இயேசுக்கிறிஸ்துவின் சிறப்பான போதனையாக வரும் மலைப்பாழிவு ஆகும். இயேசுக்கிறிஸ்துவின் புரட்சிகரமான போதனையகவும் புதுவாழ்வுக்கான சிந்தனையாகவும் இது அமைகின்றது.

1. எட்டு பெறுபேறுகள்
2. உப்பாகவும் ஒளியாகவும் திகழ்தல்
3. பகைவரிடம் அன்பு காட்டுதல்
4. இறைவேண்டல்
5. கவலையை விடுதல்
6. கொடுத்து மகிழ்தல்
7. நிலைவாழ்வு நாடல் போன்ற அம்சங்களை மலைப்பொழிவு உள்ளடக்குகின்றது.

01. எட்டு பெறுபேறுகள்

**1. ஏழையின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்: ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.**

இங்கு ஏழை உள்ளத்தோர் யார்? என்ற கேள்வி எழுகின்றது. இறைவனில் முற்றமுழுதாக தங்கி வாழுவதன் மூலம் நிறை மகிழ்ச்சியை அனுபவித்து வாழ்வோரே ஏழை உள்ளத்தோர் ஆவார். இவர்கள் அங்கலாய்ப்பு, இறுமாப்பு, உலக செல்வாக்குகளுக்கு அடிமையாதல் போன்றவற்றில் இருந்து விடுதலை பெற்று உளப்பூரிப்புடன் காணப்படுவார்கள்.

2. துயருறுவோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர் (மத்தேயு 5:4).

மனித வாழ்க்கையில் துன்பங்கள், துயரங்கள், வருத்தங்கள் வருவது சகஜம். எனினும் அவற்றை நன்மனத்தோடு ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை எம்மில் காணப்படும்பொழுது நாம் பேறு பெற்றவர்களாய், ஆறுதல் அடைந்தவர்களாய் காணப்படுவோம். "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வருங்கள். உங்களுக்கு அமைதியை அருள்வேன்" என்று கூறுகின்ற இயேசு என்றும் நிலையான அமைதியைத் தருபவராய், கவலையை விட்டு வாழும் வழிமுறையைக் கூறுபவராய் விளங்குகின்றார். "என் மனதில் கவலைகள் நெருங்கும்பொழுது என் உள்ளத்தை உமது ஆறுதல் வார்த்தை மகிழ்விக்கின்றது (தி.பா 99:19).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கனிவுடையோர் பேறு பெற்றோர் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர் (மத் 5:5).

உள்ளத்தால், உணர்வுகளால் இனிதாகப் பழகும்தன்மை வாய்ந்தோரே கனிவுடையோராவார். இறுமாப்பு இன்றி பிறரின் இன்ப துன்பங்களில் ஒத்த உணர்வோடு பங்கெடுக்கும் ஆற்றலுடையவர்களாய் இவர்கள் விளங்குவார்கள். அழுவாரோடு அழுவதும் சிரிப்பாரோடு சிரிப்பதும் இவர்களது இயல்பான பண்பாகும். விளைவாக, "இவர்கள் இறை வீட்டை, இறைவன் வாக்குப் பண்ணிய நாட்டை தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வார்கள். ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர். எளிதில் சினம் கொள்ளாதவர். பேரன்பு கொண்டவர்" (தி.பா. 145:8).

4. நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர் (மத். 5:6).

"நீதி நெறிகாப்போர் பேறு பெற்றோர்: எப்பொழுதும் நேரியதே செய்வோர் பேறுபெற்றோர்" (திபா 106:3). உரியதை உரியவருக்குக் கொடுப்பதே நீதியாகும். இல்லாதோர்க்கு உள்ளதிலிருந்து உள்ளன்போடு கொடுப்பதும் நீதியாக அனைத்தையும் வெற்றிகாண நடவடிக்கை எடுப்பதும் இங்கு சாத்திமாகின்றது. நீதியும் நேர்மையும் உம் அரியணைக்கு அடித்தளம் (தி.பா. 89:14).

5. இரக்கமுடையோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.

"இறைத் தந்தை இரக்கமுடையவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுடைய வராய் இருங்கள்" (லூக் 6:36) என்று இயேசு கூறுவது இறைவனின் இயல்புப் பண்பாகிய இரக்கம் எம்மிலும் பரவலாகப் காணப்படும்பொழுது எமது இரட்சணியப்பயணம் ஆரம்பமாகி விட்டது எனலாம். இறைவனும் மனிதனும் இணைந்த பயணிக்கும்பொழுது இரக்கம் மேலோங்கி நிற்பதை அவதானிக்லாம். "உமது பேரன்பிற்கேற்ப களிவிரக்கம் கொண்டார். அவர்களைச் சிறைசெய்து அனைவர் முன்னிலையிலும் அவர்கள் இரக்கம் பெறும்படி செய்தார்" (திபா106: 45-46) என்று இஸ்ராயேல் மக்கள் சார்பாக இறைவனின் இரக்க வெளிப்பாடு புலனாகிறது.

6. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளர்" என்று திருவள்ளுவர் கூறும் நிறைவாக்குக்கு விளக்கம் கொடுப்பவர்கள் தூய்மையைத் தம்முள் துலங்குபவர்கள். இறைவனைத் தரிசிக்கும் பாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று, பேறுடையோர் எனப் போற்றப்படுகின்றார்கள் என்று தாவீது அரசர் பாடுவது உண்மையான அமைதி இறைவனிடமிருந்தே வருகின்றது என்பதை நினைவூட்டுகின்றது. மனிதன் தரும் சமாதானம் போல் அல்லாது இறைவன் தரும் சமாதானமானது என்றும் நிலையானதாக இருக்கின்றது. "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (யோவா2021) என்று உயிர்த்தெழுந்த இயேசு அப்போஸ்தலர்களுக்கு கூறிய வார்த்தைகள் கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் ஆறுதல் அளிப்பவையாக அமைகின்றன. ஆர்வத்தோடு நற்செய்தியை நானிலமெங்கும் பரப்பும் தூதுவர்களாக இயங்க வைக்கின்றன.

**7. "நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்! ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியதே"**

"பேரன்பும் உண்மையும் ஒன்றை ஒன்று சந்திக்கும்.
நீதியும் நிறை வாழ்வும் ஒன்றை ஒன்று முத்தமிடும்.
மண்ணினின்று நீதி கீழ் நோக்கும்.

"நல்லதையே ஆண்டவர் அருள்வார். நல் விளைவையே நாடும்" என்று திருப்பாடல் 85:10-12 இறையாட்சியில் நீதி மாட்சிமைப்படுத்தப்படுவதை வலியுறுத்துகின்றது. நீதியினிமித்தம் துன்புறுத்தப்படும் வேளைகளிலெல்லாம் சரி சரிவது போலவும் பொய்மை வெல்லுவது போலவும் தோற்றம் அளிக்கலாம். ஆயினும் ஈற்றில் மெய்மையே மேலானதாகவும் நீதியே நிலையானதாகவும் ஏற்றம் பெறுகின்றது என்பதே உறுதி. இவ்வாறு கிறிஸ்து மொழிந்த எட்டு பெறுபேறுகள் ஒரு நல்ல கிறிஸ்தவ விசுவாசியின் நற்பண்புகளாக மிளிர்கின் றன. இவை ஒன்றோடொன்று இணைவுற்று ஒருங்கிணைந்து நல்வாழ்க்கை முறைக்கு வித்திட்டு நிலையான பேரின்ப வாழ்வுக்கு இட்டுச்செல்கின்றன.

**02. உப்பாகவும் ஒளியாகவும் திகழ்தல்**

"நீங்கள் மண்ணுலகுக்கு உப்பாய் இருக்கிறீர்கள். நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" (மத்.5:13-14) என்று இயேசு கூறி எம்மைச் சுவை கொடுப்பவர்களாகவும், ஒளி வழங்குபவர்களாகவும் வாழ அழைக்கின்றார்.

நாம் எம் வாழ்க்கையில் நிறைவுடன் வாழுவதற்கு எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதற்கு இயேசு விளக்கம் தருகின்றார். சினம் கொள்ளுதல், விபச்சாரம் செய்தல், ஆணையிடுதல், பழிவாங்குதல் போன்றவற்றை விலக்கிவிடும்படியாக இயேசு வேண்டுகோள் விடுக்கின்றார்.

நீங்கள் உங்கள் காணிக்கையைச் செலுத்தப் பீடத்திற்கு வரும் போது உங்கள் சகோதரன், சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டெனின் அங்கேயே பலிப்பீடத்தின் முன் உங்கள் காணிக்கயை வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ளுங்கள்: பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.
இவ்வாறு தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்துவிடும்பொழுது பிறரோடு ஒப்புரவு, இறைவனோடு நல்லுறவு சாத்தியமாகின்றது.

மேலும், தாராளமான தன்மையை வெளிக்காட்டுதல், பகைவரிடம் அன்பாய் இருத்தல், தர்மம் செய்தல், இறைவேண்டல், நோன்பு இருத்தல், இறைபராமரிப்பில் நிறைவு காணல், இறைவார்த்தையில் வாழ்க்கையைக்கட்டி எழுப்புதல் போன்றவற்றை நடைமுறை வாழ்க்கையில் மேற்கொள்ளுமாறு இயேசு வேண்டுகோள் விடுக்கின்றார்.

## 03. பகைவரிடம் அன்பு காட்டுதல்

உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத்தொடர்ந்து உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக் கொள்ள விட்டுவிடுங்கள்: எவராவது உங்களை ஒரு கல்தொலை வரக்கட்டாயப் படுத்தினால் இரு கல்தொலை செல்லுங்கள். உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் (மத்தேயு 5:39,41,44).

இவ்வாறு இயேசு நிபந்தனை இல்லாமல், எதிர்பார்ப்பு இல்லாமல், அன்பு செய்து வாழும் புதிய வாழ்க்கை முறையை எமக்கு முன்வைக்கிறார். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டும் அளவுக்கு எம்மை நாம் மறுதலித்து வாழ, பிறருக்கு கையளிப்புசெய்து வாழ கிறிஸ்து எம்மை அழைக்கின்றார்.

மேலும் நாம் எப்படி செபிக்கவேண்டும் என்று கிறிஸ்து எமக்கு கற்றுத்தருகின் றார். உங்கள் விண்ணகத்தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள் (மத்தேயு 5:48).

குறையுள்ள மனிதராகிய நாம் நிறைவுள்ள இறைவனிலே, அவருடைய பரிசுத்த தனத்திலே பங்கெடுக்க அழைக்கப்படுகின்றோம். இவ்வாறு நிறைவை நோக்கிய மனித பயணம் இறைவனின் இரக்கத்தை அன்றாடம் அனுபவிப்பதில், நாம் எதிர்கொள்ளும் ஏழை, எளியவரில் இறைவனைக் கண்டுணர்வதில் புலனாகிறது.

## 04. இறைவேண்டல்

"விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே!
உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக!
உமது ஆட்சி வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல் மண்ணுலகிலும் நிறைவேறுக" (மத்தேயு 6:9-10).

இயேசு கற்பித்த செபத்தின் இப்பகுதியில் இறைவனின் திருப்பெயர் போற்றப்படுகின்றது. இறைவனின் ஆட்சி வரவேற்கப்படுகின்றது. இறைவனின் திருவுளம் முதன்மைப்படுத்தப்படுகின்றது. "இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்" (மத்தேயு 11:11-13). இப்பகுதியில் இயேசு எங்கள் அன்றாடத் தேவைகள் நிறைவேற்றப்படுவதற் காகச் செபிக்கும்படி கோரிக்கை விடுகின்றார். நாம் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கு பிறரை நாம் மன்னிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்து கின்றார். ஈற்றில், சோதனையிலிருந்தும் தீயோனிடமிருந்தும் நாம் விடுவிக்கப் படச் செபிக்கும்படி இயேசு வேண்டுகோள் விடுக்கிறார். இறைவன் மகிமைப் படலும் மனிதன் மகிழ்வுற்று வாழுதலுமே இச்செபத்தின் சிறப்பாகும்.

### 05. கவலையை விடுதல்

"உயிர் வாழ எதை உண்பது என்றோ உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளதீர்கள். அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியை யும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:25-33).

### 06. கொடுத்து மகிழ்தல்

"கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்" (மத்.7:7). "பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என விரும்புகிறீர்களோ அவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்" (மத்.7:12) என்று இயேசு கூறி பிறர் மகிழ்வுற்று வாழும் முறைமையை கற்பிக்கின்றார்.

### 07. நிலைவாழ்வு நாடல்

"வாழ்வுக்குச் செல்லும் வழி மிகவும் இடுக்கமானது. வழியும் மிகக் குறுகலானது. இதைக் கண்டுபிடிப்போர் சிலரே" (மத்.7-13) என்று இயேசு கூறி நிலைவாழ்வை நாடியவர்களாக வாழ அழைக்கின்றார்.

*இறைவனை மகிமைப்படுத்தி*
*மகிழ்வுற்று வாழும் மனிதர்களாய் திகழ்வோம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. நல்ல தலைவர்கள்

நல்ல தலைவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். நல்ல குடும்பங்கள், நல்ல சூழல்கள், நல்ல நண்பர்கள் போன்றோரின் வலைப்பின்னலே நல்ல தலைவர்களின் இணையமாகும். சந்தனக் காட்டிற்குள் சென்று எந்தக் குச்சியை உடைத்தாலும் அது நறுமணம் தருவது போல நல்லோர் எங்கிருந்தாலும் என்னசெய்தாலும் அது நன்மை பயக்குவதாகவே அமையும். அவர்களது பேச்சும் மூச்சும் வாழ்வின் வீச்சும் எப்பொழுதும் நன்மை கலந்தே காணப்படும். நல்லாரைக் காண்பதுவும் நல்லார்சொற் கேட்பதுவும் நல்லாரோடு கூடிவாழ்வதுவும் எல்லோராலும் விரும்பப்படும்.

"நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்கா கத் தம் உயிரைக் கொடுப்பார். கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப்போவார். ஏனெனில் அவர் ஆயரும் அல்ல. ஆடுகள் அவருக்குச் சொந்தமும் அல்ல. ஓநாய் ஆடுகளைப் பற்றி இழுத்துக்கொண்டுபோய் மந்தையைச் சிதறடிக்கும். கூலிக்கு மேய்ப்பவருக்கு ஆடுகளைப் பற்றிக் கவலையில்லை"(யோவான் 10:10-13).

இவ்வாறு இயேசு பேசியது அவரது வாழ்வில் முழுமையாக நிறைவேறியது. அவர் தான் ஒரு நல்ல தலைவன் என்பதைச் சொல்லாலும் செயலாலும் நிரூபித்தார். பரிவன்பு, பரோபகாரம், பகிர்தல், பிறருக்கு உதவி நல்கல், பிறர் சார்பாகத் தன்னைத் தாரைவார்த்துக்கொடுத்தல், விருந்தோம்பல், விவேகம், தர்மம், தியாகம், தாழ்மை, தூய்மை, நன்மை செய்யும் ஆர்வம், நேர்மை, நேரமுகாமைத்துவம், சுயமதிப்பு, சுயகட்டுப்பாடு, மனிதநேயம், மனித மாண்பு, மன்னிப்பு, அனுசரித்துப்போதல் போன்ற பண்புகள் மேலோங்கிக் காணப்படும்.

**தலைமைத்துவத்திற்கான 4 அம்சத்திட்டம்:**

**1. தெய்வீக அழைப்பு:** தெய்வம் விரும்புவதை வாழ்வில் நிறைவேற்ற முனைவதாகும். "எனது விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பியவரின் விருப்பத்தையே நாடுகிறேன்" (யோவான்5:30) என்று இயேசு மொழிகின்றார்.

**2.தகைமையுடைமை:** செய்வதில் நன்மைத்தனத்தை வெளிப்படுத்துவ தாகும். "தொடர்ந்து இறைவனை வேண்டுங்கள். விழிப்போடும் நன்றியுணர் வோடும் அதில் ஈடுபடுங்கள். உங்கள் பேச்சு இனியதாயும் சுவையுடையதாயும் இருப்பதாக"(கொலோ. 4:4,6) என்று புனித பவுல் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.பரஸ்பர நம்பிக்கை: பேதுரு அப்போஸ்தலர் இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை வைத்தவராய் கடல்மீது நடந்தார். சொற்பநேரத்தில் நம்பிக்கை குன்றிவராய் கடலில் மூழ்குகையில் "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என்று கத்தினார் (மத்தேயு 14:30). இயேசு உடனே, தம் கையை நீட்டி அவரைப் பிடித்து, "நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?"என்றார் (மத்தேயு 14:31). "உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கையிருந்தால் நீங்கள் இம்மலையைப் பார்த்து, "இங்கிருந்து பெயர்ந்து அங்கு போ" எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"(மத்தேயு 17:20) என்று இயேசு சீடர்களுக்கு நம்பிக்கையளித்தார்.

4. நற்பண்புடைமை: "நற்பேறுபெற்றவர் நீரோடையோரம் நடப்பட்ட மரம்போல இருப்பார். பருவகாலத்தில் கனிதந்து என்றும் பசுமையாயிருக்கும் அம்மரத்திற்கு ஒப்பாவார். தான் செய்வதனைத்திலும் வெற்றிபெறுவார்" (திருப்பாடல் 1:3). "நீங்கள் உங்கள் நம்பிக்கையோடு நற்பண்பும் நற்பண்போடு அறிவும் அறிவோடு தன்னடக்கமும் தன்னடக்கத்தோடு மனஉறுதியும் மன உறுதியோடு இறைப்பற்றும் இறைப்பற்றோடு சகோதரநேயமும் சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்" (2பேதுரு 1:5-7) என்று புனித பேதுரு நினைவூட்டுகின்றார்.

நல்ல தலைவர் தனது மக்களில் வைப்புச்செய்வதில் கவனம் செலுத்துவார். ஆக்கபூர்வமான முறையில் அவர்களில் அக்கறை எடுத்துச் செயற்படுவார். பணிவடிவத் தலைமைத்துவம் கிறிஸ்துவை, அயலவரை மையப்படுத்தியதாய் மற்றவர்களது நலனை மேம்படுத்துவதாய் அமையும். நல்ல தலைவன் பணஆசை, பொருளாசை, உடலாசை, உலகஆசை போன்றவற்றிலிருந்து விடுபட்டு, இறைவனோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தில் நிலைத்துநிற்பான். அவன் இறைவனிலும் மனிதரிலும் இணைந்திருந்து நிறை மகிழ்வை அனுபவிப்பான்.

*நல்ல தலைவர் இல்லாமையை இல்லாமல் செய்து,*

*எல்லோரையும் நல்லோராக்கும் முயற்சியில் ஈடுபடுவார்.*

*அவர் ஏமாறாது, ஏமாற்றாது, நம்பிக்கை நட்சத்திரமாய் ஒளிருவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. சாதனையாளர்கள்

"பார்வையற்றராக பிறப்பதை விடவும் மோசமானது ஏது" என்று பிறவியிலேயே பார்வையற்றவராக இருந்த கெலன் கெல்லரிடம் கேட்கப்பட்டது. "முன்நோக்கு இல்லாத பார்வையைக் கொண்டிருப்பதுதான்" என்று பதிலளித்தார். உலகில் பெரும் தலைவர்கள் அனைவரும் இரண்டு விடயங்களைத் தங்களிடம் கொண்டுள்ளனர். ஒன்று தாங்கள் எங்கே போய்க்கொண்டு இருக்கின்றார்கள் என்பது.
மற்றது, தங்களைப் பின்தொடர மக்களை ஒப்புக்கொள்ளச் செய்வது.

மக்களின் நான்கு முன்நோக்கு நிலைகள்:

1. சில மக்கள் அதை ஒரு போதும் பார்த்ததே இல்லை.
2. சில மக்கள் அதைப்பார்க்கின்றனர். ஆனால் தன்முனைப்போடு தாமாக முயல்வதில்லை.
3. சில மக்கள் அதைப்பார்த்து அது குறித்து செயற்படுகின்றனர்.(அவர்கள் சாதனையாளர்கள்)
4. சிலர் அதைப்பார்த்து அது குறித்து செயற்படுவதோடு பிறரும் அதைப்பார்க்க உதவுகின்றனர். (அவர்கள் தலைவர்கள்)

நீங்கள் எதைக்காணத் தயாராக இருக்கின்றீர்களோ அதையே காண்பீர்கள்

"நாம் அனைவரும் ஓரே வானின் கீழ்தான் வாழுகின்றோம். நம் அனைவரின் தொடுவானமும் ஒன்றல்ல" என்று கான்ராட் அடனோர் கூறினார்.

ஹென்றி போர்டு ஒரு முறை இயந்திரத்திற்கான புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கினார். அவர் சில பொறியியல் வல்லுனர்களை அழைத்து திட்டங்களை வரைபடங்களாக அமைக்கும்படி பணித்தார். அந்த வரைபடங்களை படித்த ஒவ்வொரு பொறியியலாளரும் ஓரே முடிவுக்குத்தான் வந்தனர். அதாவது அவரது கனவு இயலாத ஒன்று என்று எடுத்துரைத்தார்கள். "என்னவானாலும் சரி முயலுங்கள்" என்று போர்டு கூறினார். "அது இயலாத காரியம்" என்று அவர்கள் மீண்டும் பதிலளித்தார்கள். "வெற்றி கிட்டும்வரை தொடர்ந்து வேலை செய்யுங் கள். அதற்கு எவ்வளவு காலம் தேவைப்பட்டாலும் எனக்கு அதைப்பற்றி கவலை யில்லை" என்று உத்தரவிட்டார். வெவ்வேறு வரைபடங்களை வரைந்து தள்ளியும் வெவ்வேறு வடிவங்களை அமைத்துப்பார்த்தும் ஆறு மாதங்களாக புதிதாக எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் ஆறு மாதங்கள் ஓடின. மீண்டும் தோல்விதான். அவர் தொடர்ந்து முயற்சி எடுக்கும்படி கூறினார். முயற்சி தொடர்ந் தது. ஈற்றில் வி-8 இயந்திரத்தை எப்படி உருவாக்குவது என்பதைக் கண்டுபிடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குள் பாருங்கள்: நீங்கள் என்ன உணர்கிறீர்கள்?

❖ தியோடோர் ஹெறபாக் கூறுகின்றார்: "ஒரு முன்நோக்கைக் கொண்டிருப்பது தான் ஒரு தலைமைத்துவத்தின் சாரம்சம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெளிவாகவும் ஆற்றலுடனும் முழங்கக் கூடிய ஒரு முன்நோக்காக அது இருக்கவேண்டும். சுருதியற்ற விணையை உங்களால் மீட்ட முடியாது." வெறுமனே கனவு காண்பவர்க்கும் ஒரு முன்நோக்கைக் கொண்ட மனிதருக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன.

❖ முன்நோக்கை கொண்டிருக்கும் ஒருவர் குறைவாகப் பேசுவார். ஆனால் அதிகமாகச் செயற்படுவார். அதேவேளை கனவு காண்பவரோ அதிகமாகப் பேசி, குறைய செயற்படுவார்.

❖ முன்நோக்கை கொண்டிருக்கும் ஒருவர் தன்னுள் இருக்கும் உறுதியான நம்பிக்கையிலிருந்து வலிமை பெறுகின்றார். கனவு காண்பவரோ வெளியே சூழ்நிலைகளிலிருந்து வலிமை பெறுகின்றார்.

❖ முன்நோக்கை கொண்டிருக்கும் ஒருவர் பிரச்சனைகள் ஏற்பட்டாலும் தொடர்ந்து செயற்படுவார். கனவு காண்பவரோ தான் பயணிக்கும் பாதை கடினமாக மாறும்பொழுது தன் கனவைக் கைவிட்டு விடுவார்.

சாதனையாளர் பலர் மிகவும் ஏழ்மையானவர்களாய் பல்வேறுபட்ட அசௌகரியங்களை அனுபவித்தவர்களாகக் காணப்பட்டார்கள். தோமஸ் அல்வா எடிசன் ரயில்களில் செய்தித்தாள் விற்ற ஒருவராக காணப்பட்டார். ஆபிரகாம் லிங்கன் ஆரம்பத்தில் தெருவெளிச்சத்திலே தன் கல்வியைத் தொடர்ந்தார். சிறந்த பேச்சாளரான டெமஸ்தனிஸ் திக்குவாயனாகத் திகழ்ந்தார். முதன் முறையாக பொது மக்களிடம் பேச முயற்சித்தபோது மக்கள் ஏளனமாகச் சிரித்து மேடையி லிருந்து வெளியேற்றினர். நெப்போலியன் சாதாரண பெற்றோருக்கு மகனாகப் பிறந்தவர். இவர் இராணுவப்பயிற்சிக் கல்லூரியில் தனது வகுப்பிலிருந்த மாணவர்களில் 46 ஆம் இடத்தில் இருந்தார். பீத்தோவன் காது கேளாதவர். சார்லஸ் டிக்கன்ஸ் கால்முடமானவர்.

இவ்வாறு இயலாமைகளைத் தாண்டி இயலும் என்ற எண்ணத்தோடு வெற்றிப் படிகளில் காலடி எடுத்து வைப்பதற்கு இவ் மாமேதைகளுக்கு எது உந்து சக்தியை கொடுத்தது?

நெப்போலியன் கில் கூறுகின்றார்: "உங்கள் முன்நோக்குகளும் கனவுகளும் உங்கள் ஆன்மாவின் குழந்தைகள். அவை உங்கள் உச்சக்கட்ட சாதனை களுக்கான வரைபடங்கள். அவற்றை மனமாற நேசித்துப் பேணுங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்கு மேலே பாருங்கள்

"மனித வரலாற்றில் உள்ள ஒவ்வொரு பொற்காலமும் ஏதோ ஒரு தனிநபரின் அர்ப்பணிப்பிலிருந்து, நெறிசார்ந்த விருப்பத்திலிருந்து தான் துவங்குகின்றது. ஆக்கபூர்வமான பெரும் இயக்கங்கள் ஏதும் அங்கிருப்பதில்லை. அது வெறுமனே அவ்வாறு தோன்றுகின்றது. தன் கடவுளைப்பற்றியும் தான் எங்கே போய்க் கொண்டிருக்கின்றேன் என்பதைப் பற்றியும் அறிந்துள்ள ஒரு மனிதர் எப்போதும் இருந்து கொண்டேயிருக்கிறார்" என்று ரிச்சர்டு ஈ டே கூறினார்.

கடவுள் எனக்குக் கொடுத்த பரிசு எனது ஆற்றல்களைக் கொண்டு நான் என்ன செய்கின்றேனோ அது தான் நான் கடவுளுக்கு திருப்பி அளிக்கும் வெகுமதி. கடவுள் எனக்கு தந்த நல்வாழ்வினை நான் ஏற்று நல்லபடி வாழுதல் என்பது மண்ஈர்ப்பிலிருந்து விடுபட்டு விண்ணீர்ப்பு சார்ந்து செயற்படுவதே ஆகும். உயர்ந்த எண்ணங்கள், உயர்ந்த உணர்வுகளை நல்க, உயர்ந்த வாழ்வியல் நடத்தைக் கோலங்கள் எம்மை அழகுபடுத்தும்.

உளவியலாளர் விக்றர் பிறாங்கிள் வாழ்வியற் சிக்கல்களுக்கு விடைகாணல் என்பது வாழ்விற்கு அர்த்தம் காணுவதேயாகும் என உரைத்து நம்பிக்கையின் அவசியத்தைப் பின்வருமாறு கூறுகின்றார்:
"நான் இன்று இங்கு இருப்பதற்கு ஒரே ஒரு காரணம்தான் உள்ளது. என்னை உயிருடன் வைத்திருந்தது நீங்கள் தான். மற்றவர்கள் நம்பிக்கை இழந்தனர். விக்றர் பிரங்கிள் என்னும் நான் நாஜீ சித்திரவதை முகாம்களில் இருந்து எப்படி பிழைத்து வந்தேன் என்று என்றோ ஒரு நாள் உங்களிடம் கூறுவேன் என்று கனவு கண்டேன். உங்களில் ஒருவரையும் நான் இதற்கு முன் பார்த்தது மில்லை. இந்த உரையை நான் இதற்கு முன் ஒருபோதும் வழங்கியதும் இல்லை. ஆனால் என் கனவுகளில் உங்கள் முன் நின்று இந்த வார்த்தைகளை ஓராயிரம் முறை கூறியிருக்கின்றேன்."

*மண் ஈர்ப்பிலிருந்து விடுபட்டு*
*விண்ணீர்ப்பு சார்ந்து செயற்படுங்கள்.*
*இயலாமைகளைத் தாண்டி இயலும் என்ற எண்ணத்தோடு*
*வெற்றிப் படிகளில் காலடி எடுத்துவையுங்கள்.*
*உங்கள் சாதனை உங்களிடமிருந்தே ஆரம்பிக்கட்டும்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. மாற்றத்தில் ஏற்றம்

அடிப்படையானதும் முதன்மையானதுமான செயற்பாடு என்னை நான் மாற்றிக்கொள்வதாகும். மற்றவர்களை, ஊரை, உலகை மாற்றுவதற்கான ஆரம்பச் செயற்பாடு என்னை நான் மாற்றிக்கொள்ள முயற்சி எடுப்பதாகும்.
இரவீந்திரநாத் தாகூர் கூறுகின்றார்:

அந்தச் சிறுமிக்கு வயது பத்து. கடவுளைக் காண, அவரோடு பேச அவள் காத்திருந்தாள். பல வருடங்கள் உருண்டோடின. அப்போது அவளது வயது எண்பது ஆகியது. அவள் கண்பார்வையை இழந்தாள். ஒருநாள் அவள் கிராமத்துத் திருவிழாவின்போது பிச்சை எடுத்துக்கொண்டிருந்தாள். பிச்சைப்பாத்திரத்தில் விழுந்தகாசு கூடக் கிடைக்கவில்லை. அவள் எடுப்பதற்குள் பாத்திரத்தில் விழுந்த காசை சிலர் எடுத்துவிடுவார்கள். பிச்சைக்காரர்களிடமே பிச்சை எடுக்கும் கூட்டம் அங்கிருந்தது. திடீரென அவள் பெயரைச் சொல்லி யாரோ அழைத்தார்கள். 'யாரது?' என்றாள் கிழவி.

அழைத்தவரோ, 'நான் கடவுள். உன்னைச் சந்திக்க வந்திருக்கின்றேன்' என்றார். அதற்கு அந்தக் கிழவி,

'உனக்காகப் பாலோடும் பழத்தோடும் காத்திருந்தேன். அப்போது நீ வரவில்லை. இப்போது என்னிடம் ஒன்றுமில்லை. உன்னைப் பார்க்க கண்களும் இல்லை' என்றாள்.

கடவுளோ, 'உன் பொருட்களில் எதுவும் எனக்கு வேண்டாம். இந்த உலகம் முழுவதையும் படைத்தவன் நான். அடுத்து, என்னைப் பார்க்க உன் புறக்கண்கள் தேவையில்லை. அகக்கண் அதாவது விசுவாசம் போதும். இப்பொழுது அமைதியாகக் கண்களை மூடி அமர்ந்திரு. என்ன நடக்கிறது என்று பார்' என்றார்.

அந்த கிழவி அப்படியே செய்ய, அவள் உள்ளத்துக்குள்ளிருந்து கடவுள் அவளோடு பேசினார். உள்ளுக்குள் இருக்கும் இறைவனைச் சந்திக்க நாம் தயார் நிலையில் உள்ளோமா?
ஒரு மத்திய கிழக்கு யோகி இவ்வாறு கூறியுள்ளார்:

"நான் இளைஞனாக இருந்த போது ஒரு புரட்சியாளனாக விளங்கினேன். அப்போது கடவுளிடம் நான் செய்த பிரார்த்தனை இதுதான்: 'கடவுளே உலகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவதற்கான ஆற்றலை எனக்கு கொடு.' நான் நடுத்தர வயதை நெருங்கிக் கொண்டிருந்த போது, ஓர் ஆன்மாவைக்கூட மாற்றாமல் என் பாதி வாழ்க்கை போய்விட்டதை நான் உணர்கின்றேன். பிறகு என் பிரார்த்தனையை, 'கடவுளே என் குடும்பத்தார் மற்றும் என் நண்பர்கள் என்று என்னிடம் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர்களை மட்டும் மாற்றும் அருளை எனக்குக் கொடு. நான் திருப்தியடைவேன்' என்று மாற்றினேன். இப்போது எனக்கு வயதாகி, என் நாட்கள் எண்ணப்பட்டுவிட்ட நிலையில், நான் எவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொண்டுள்ளேன் என்பதைப் பார்க்கத் தொடங்குகிறேன். இப்போது என்னுடைய ஒரே பிரார்த்தனை: "கடவுளே என்னை மாற்றுவதற்கு எனக்கு அருள் கொடு. நான் துவக்கத்திலிருந்தே இதற்காகப் பிரார்த்தித்திருந்தால் என் வாழ்க்கையை வீணடித்திருக்க மாட்டேன்."

மனிதனில் மாற்றம் என்பது உள்ளிருந்து ஏற்படும் தோற்றப்பாடேயாகும். இதில் புறக்காரணிகளைவிட அகக்காரணிகளே பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின் றன. நான் மாறவேண்டும் என்ற எண்ணம் முதலில் என்னில் அரும்ப வேண்டும். அதற்கான வாய்ப்புக்களை நானே உருவாக்கிக்கொள்ளவேண்டும். இதற்கு முரணாக எழும் சந்தர்ப்பங்களை எதிர்த்துநின்று போராடி வெற்றிகாணவேண்டும். என்னில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு,

- என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும்.
- என்னுள் புதைந்துகிடக்கும் வளங்களைக் கண்டுணரவேண்டும்.
- எதிர்நோக்கில் சிந்திப்பதைவிட்டு நேர்நோக்கில் என்னையும் ஏனையவர்களையும் அணுகவேண்டும்.
- எல்லாவற்றிலும் இறுக்கமாயிராது தேவைக்கேற்ப அவ்வப்போது வளைந்து கொடுக்கப் பழக்கப்பட்டிருக்கவேண்டும்.
- என்னை நான் நிறைநோக்கினில் பார்த்திட பிறரது உதவியை நாடவேண்டும்.
- என்னை நான் வெறுமையாக்கி இறைசக்தியினால் என்னை நிரப்பிட வேண்டும்.
- என்னில் ஏற்படும் நிஜமான மாற்றம் ஏனையவர் வாழ்விலும் நல்தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும்.
- என்னில் இருக்கும் நன்மைத்தனம் அதிகரிக்கும்பொழுது பிறரும் நன்மைத்தனத்தை அனுபவிக்க வாய்ப்பாகின்றது என்பதை உணருகிறேன்.
- என்னால் இயலாது என்று சோர்வடைந்த சந்தர்ப்பங்கள் இறைவன், ஏனையவர்கள் இணையும்பொழுது சாத்தியமாகின்றன என்பதை உணருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேக்ஸ்டிப்ரீ கூறுகின்றார்: 'முடிவில் நாம் எப்படி இருக்கின்றோமோ தொடர்ந்து அப்படியே இருந்துகொண்டால், நாம் என்னவாக ஆகவேண்டுமோ அதுவாக ஆகமுடியாது என்பதை நினைவிற் கொள்ளுவது முக்கியம்.' நான் மாறுவதை நிறுத்திவிட்டால் எனது வளர்ச்சியும் நின்றுவிடும் என்பது முற்றிலும் உண்மை.

அல்பிறட் நோபல் சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர். இவர் டைனமைட், இதர வெடிபொருட்களைக் கண்டுபிடித்ததின்மூலம் பெரும் சொத்துக்களைக் குவித்தார். அவருடைய சகோதரர் இறந்தபோது ஒரு செய்தித்தாள், அவரது சகோதரருக்குப் பதிலாக அவரது இரங்கல்செய்தியைத் தவறுதலாக வெளியிட்டது. இதற்குமுன் பார்த்திராத அளவில் மக்கள் ஒருவரை ஒருவர் கொல்வதை ஊக்கவித்ததின்மூலம் பணக்காரரானவர் என்று அவரைப்பற்றி அது விளக்கியிருந்தது. இத்தகைய தவறான செய்திப் பரிமாற்றத்தினால் தடுமாறிப் போன நோபல் புதிய தீர்மானத்தை எடுத்தார்.

அன்றிலிருந்து தன் சொத்துக்களை மனிதகுலத்தின் நன்மைக்குப் பயன்படுத்தப் போவதாகத் தீர்மானம் எடுத்தார். பல்வேறுபட்ட ஆய்வாளர்கள் பயன் பெறும்பொருட்டு 'நோபல் பரிசுத் திட்டம்' ஒன்றை முன்வைத்து, அத்திட்டத்திற்காக தனது சொத்துக்களை எல்லாம் முதலீடு செய்தார். தான் இறந்த பிறகு பிறர் தன் வாழ்வை அலசி ஆராய்ந்து மதிப்பீடு செய்வதை, தான் உயிரோடு இருக்கும்போதே காணக்கூடிய ஓர் அரிய வாய்ப்பை அவர் பெற்றிருந்ததோடு, அதை முழுமையாக மாற்றியமைக்கும் வகையில் நீண்ட காலம் வாழும் பாக்கியத்தையும் பெற்றிருந்தார்.

மாற்றத்தில் ஏற்றம் காண்பதற்கு,

- சரியான தீர்மானத்தை எடுங்கள்
- பொருத்தமான அளவுகளைக் கண்டறியுங்கள்
- சூழமைவில் இயைபாக்கம் பெறுங்கள்
- இயற்திறன்களை இனங்காணுங்கள்
- உங்களை நீங்களாகவே ஏற்றுக்கொள்ளுங்கள்
- ஏனையோரது நல்வழிகாட்டலுக்கு இசைந்து போங்கள்
- இறை சக்தியை உள்வாங்குங்கள்.

*இன்றே, இப்பொழுதே வாழ்ந்திட வாருங்கள்.*
*இதய மாற்றமதை இனிதே பாருங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. இறைவனில் நிறை உறவு

அவர் உயிர் கொடுக்கும் தந்தையாக, உண்மையின் வடிவாய் வாழ்வுக்கு வழி காட்டும் இயேசுவாக, அன்பிற்கு ஆதரமாய் இருக்கும் ஆவியாக விளங்குகின் றார். இந்த ஒன்றிப்பு, இந்த அன்புறவு, எமது நாளாந்த வாழ்க்கையில் பிரதிபலிப்பதையே இறைவன் விரும்புகின்றார்.

**உயிர் கொடுப்பவர் இறைவன்**

உயிர் கொடுத்து, மனுக்குலத்தை உய்விப்பவரே இறைவன். அவர் ஒருவரே என்பது பொதுவாக இஸ்ராயேல் மக்களால், இஸ்லாமியர்களால், கிறிஸ்தவர்க ளால், சைவ சமயத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் கொள்கையாகும். ஒரு கடவுள் கோட்பாடு மேற்படி சமயத்தினரின் வாழ்க்கைமுறைகளிலும் வழிபாட்டு முறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இறைவன் இஸ்ராயேலரின் குலமுதுவராகிய ஆபிரகாமோடு தொடர்பு கொண்டு அவரை ஆசீவதிக்கின்றார். "உன் வழியாக மக்கள் இனங்கள் அனைத்தும் ஆசீர் பெறும்" (தொ நூல் 12:3) என்ற அருள் வார்த்தையை ஆபிராகாமிற்கு சொல்லி இறைவன் இஸ்ராயேலரின் வரலாற்றில் தம்மை வெளிப்படுத்தினார்.

அதே கடவுள் ஈசாவுக்கு தோன்றி "உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நாமே! அஞ்சாதே, ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன். உனக்கு ஆசீர்வழங்கி என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழிமரபைப் பெருகச் செய்வேன்." (தொநூல் 26:24) என்றார்.

"உன் மூதாதையராகிய ஆபிரகாமின், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே" என்று யாக்கோப்பிற்குத் தன்னை அறிமுகம் செய்யும் கடவுள், "உன் வழிமரபோ, நிலத்தின் மண்ணுக்கு ஒப்பாகும்" (தொநூல் 28:13-14) என்று ஆசீர்வதிக்கின்றார். "உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோப்பின் கடவுள் நாமே!" (வி.ப3:6)
"இருக்கின்றவராக இருக்கின்றவர் நாமே!" (வி.ப3:14) என்று தம்மை அறிமுகம் செய்கின்றார்.

இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுக்க இறைவன் கருவியாக மோசேயைத் தேர்தெடுத்தார். "நான் திக்குவாயன்" என்று கூறி பின்வாங்க முயற்சித்தாலும் இறைவன் அவரை விட்டுவிடவில்லை. எகிப்தில் பத்துப்பெரும் துன்பங்களைப் பெருகச்செய்து, இஸ்ராயேலர் எகிப்திலிருந்து வெளியேறுவதற்கான சூழலை இறைவன் உருவாக்கினார். மோசே இஸ்ராயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லருக்கு இறைவனின் திட்டத்தை விளக்கினார். பாஸ்கா ஆட்டினை அடித்து, அந்த இரத்தத்தை கதவு நிலைகளில் பூசுமாறு சொன்னார். தலைமுறை தலைமுறையாக இதை விளக்குமாறு அவர்களுக்குப் பணித்தார்.

"இது ஆண்டவரின் பாஸ்காப்பலி, அவர் எகிப்தியரை சாகடித்தபொழுது எகிப்திலுள்ள இஸ்ராயேல் மக்களின் வீடுகளைக்கடந்து சென்றார். இவ்வாறு தம் வீடுகளிற்கு மீட்பளித்தார்" (வி.ப 12:27) என்று மோசே மக்களுக்கு எடுத்துரைத்தார். விடுதலைப்பயுணத்தின்போது இஸ்ராயேலர் பல துன்பங்களுக்கு ஆளாகினார்கள். எதிர்பாராத் தடைகள் ஏற்பட்டதும், வல்லமையுள்ள இறைவனின் நம்பிக்கையில் தளர்வுற்றவர்களாகக் காணப்பட்டார்கள்.

"எகிப்தில் சவற்குழி இல்லையென்றா நீர் எங்களை பாலைவனத்திற்கு சாவதற்கு இழுத்து வந்தீர்? பாலைநிலத்தில் சாவதைவிட எகிப்தியருக்கு ஊழியம் செய்வதே எங்களுக்கு நலம்" (வி.ப 14:11-12) என்று இஸ்ராயேலர் மோசேக்கு எதிராக முணுமுணுத்தார்கள். எனினும் மோசே இறைவனில் நம்பிக்கை கொள்ளுமாறு அவர்களை உற்சாகப்படுத்தினார். "அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள், இன்று ஆண்டவர் தாமே உங்களுக்கு ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள். இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனிமேல் என்றுமே காணப்போவதில்லை. ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார் நீங்கள் அமைதியாக இருங்கள்" (வி. ப. 14:13-14) என்று இறைவன் கூறியவாறு கையைக் கடல்மேல் நீட்டவே கடல் திரல் பிரிக்கப்பட்டது. வலப்பக்கத்திலும் இடப் பக்கத்திலும் உள்ள நீர்த்திரள் அவர்களுக்குச் சுவராக அமைய இஸ்ராயேலர் கடல்நடுவே உலர்ந்த தரையில் நடந்து சென்றனர். அவர்களைத் துரத்திய எகிப்தியர் நடுக்கடல்வரை வந்தனர். அப்பொழுது ஆண்டவர் எகிப்திய அணிவகுப்புக்களை நிலைகுலையச் செய்தார். ஆண்டவர் சொற்படி மோசே மீளவும் கடல்மேல் கையை நீட்டவே கடல் பழைய நிலைக்குத் திரும்பியது. பாரவோனின் படைகள் அனைத்தும் ஆழ்கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

அப்பொழுது மோசேயும் இஸ்ராயேலரும் ஆண்டவரைப் புகழ்ந்து பாடியது: "ஆண்டவருக்குப் புகழ் பாடுவேன். ஏனெனில், மாட்சியுடன் வெற்றி பெற்றார்." ஆண்டவர் என்பது அவர் பெயராம். பார்வோனின் தேர்களையும் படைகளையும் அவர் கடலில் தள்ளிவிட்டார். ஆண்டவரே தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் யார்? தூய்மையில் மேலோங்கியவர் புகழ்ச்சிக்கு உரியவர். அரும் செயற் ஆற்றுதற்கு உரியவர். நீர் உமது வலக்கையை நீட்டினீர், நிலம் அவர்களை விழுங்கிவிட்டது. நீர் மீட்டுக்கொண்ட மக்களை உம் பேரருளால் வழிநடத்திச் சென்றீர்" (வி.ப 15:1-5).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஸ்ராயேலே செவிகொடு! நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உன் முழு ஆற்றலோடு, உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக"
(இ.ச 6:4-5)

"உங்கள் கடவுளாகிய ஆண்டவர் தம் வலிமைமிகு கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புரிந்த அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் நினைவில் நிறுத்துங்கள்" (இ.ச 7:19). இவ்வாறு விடுதலைப் பயணநூல், இணைச்சட்டம், ஆகியன மூலமாக இஸ்ராயேலர் "கடவுள் ஒருவரே" என்ற இறைக்கோட்பாட்டில் நிலைத்து நிற்க நினைவூட்டப்பட்டார்கள்.

ஒரு கடவுள் கோட்பாடு, புதிய ஏற்பாட்டுச் சிந்தனையிலும் மேலோங்கி நிற்பதையே காணலாம். கடவுள் ஒருவரே! அவரே என்றும் எங்கும் ஆராதனைக்குரியவர். தந்தை,மகன், தூயஆவி என இறைவன் மூன்று பெயர்களால் அழைக்கப்பட்டாலும், மூன்றும் ஒன்று என்ற மனோநிலை கிறிஸ்தவர்களால் வளர்க்கப்பட்டு வருகின்றது.

"உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள், விண்ணுக்கும், மண்ணுக்கும் ஆண்டவராம் அவர், மனிதன் கையால் உருவான கோவில் களில் வாழ்வதில்லை. அனைத்துக்கும் மூச்சு, உயிர் எல்லாமே அளிக்கும் அவர் ஒரே மூலத்திலிருந்து மனுக்குலம் முழுவதையும் உண்டுபண்ணி, அதை மாநிலத்தில் வாழச்செய்தார். அவர்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதிகளையும், அவர்கள் குடியிருக்க வேண்டிய எல்லைகளையும் அவர்களுக்கு வரையறுத்துக் கொடுத்தார். இருட்டில் தடவித் தேடுவது போலவே அவர்கள் தம்மைத் தேடிக்கண்டுபிடிக்கக் கூடுமென்றே இங்ஙனம் கடவுள் செய்தார். ஏனெனில், அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார்" (தி.பணி 17:24-27).

"வரங்கள் பலவகை. ஆவியானவரோ ஒருவர்தான். திருப்பணிகள் பலவகை, ஆண்டவரோ ஒருவர்தான். ஆற்றல் மிக்க செயல்கள் பலவகை, கடவுள் ஒருவர்தான். அவரே அனைத்தையும் அனைவரிலும் செயலாற்றுகிறார்"
(1 கொரி 12:4-6).

*இறைவனைத் தேடுபவர்கள் நிட்சயமாக அவரைக் கண்டுபிடித்தே தீருவார்கள். அவர் நம் ஒவ்வொருவருக்கும் மிக அருகிலேயே வாழுவதை.*
*எமது சகோதர, சகோதரிகளில் அவர் செயற்படுவதைக் கண்டுணர்வது சாத்தியமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. உண்மையாம் இயேசு கிறிஸ்து

"ஆதியிலே வார்த்தை இருந்தது. அவ்வார்த்தை கடவுளோடும் இருந்தது அவ்வார்த்தை கடவுளாயும் இருந்தார்" (யோவான் 1:1-2).

"வார்த்தை மனிதனார். நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அவர் அருளும், உண்மையும் நிறைந்து விளங்கினார்"(யோவான் 1:1-2). இயேசு ஒரே சந்தர்ப்பத்தில் இறைவனாகவும், மனிதனாகவும் இருக்கின்றார் என்பதையே இயேசு மனிதனாதல் நிகழ்ச்சி குறித்து நிற்கின்றது. இறையியல்பிலும், மனிதவியல்பிலும் இணைந்தவராக இயேசு தன்னை வெளிப்படுத்துகின்றார். இறை வெளிப்பாட்டின் உச்சிக்கட்டமாய் இயேசு மனிதனாதல் நிகழ்ச்சி அமைகின்றது.

பற்பலமுறையிலும் பல்வேறு வகையிலும் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக தம் முன்னோருடன் பேசிய இறைவன் நாம் வாழும் இவ் இறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாக பேசியுள்ளார் (எபிரேயர் 1:1).

இயேசு சாதாரணமுறையில் தமது உணர்வுகளையும் உள்ளக்கிடக்கை களையும் வெளிப்படுத்துவதை இலாசரை உயிர்ப்பித்த நிகழ்வில் அவதானிக்கலாம். மரியாள் அழுவதையும், அவரோடு வந்த யூதர்கள் அழுவதையும் இயேசு கண்டபொழுது மனங்குமுறி "அவனை எங்கு வைத்தீர்கள்?" என்று கேட்க "ஆண்டவரே வந்து பாரும்" என்றார்கள். அப்பொழுது இயேசு கண்ணீர் விட்டார். அதைக்கண்ட யூதர்கள் "அவன் மேல் இவருக்கு இவ்வளவு நேசம் பாருங்கள்" என்றனர் (யோவான் 11:33-36).

'இதோ மனிதன்' (யோவான் 19:5) என்ற பிலாத்துவின் பேச்சும் சிலுவை மரத்திலே மரணிக்கும் வேளையில் 'தாகமாயிருக்கின்றேன்' (யோவான் 19:28) என்ற இயேசுவின் குரலொலியும், உயிர்த்தெழுந்த பின்னர் 'ராபூணி' (யோவான் 20:14) என இயேசுவும் மதலேன்மரியாளும் உரையாடுதலும் 'யோவானின் மகனான சீமோனே இவர்களை விட நீ என்னை அதிகமாய் அன்பு செய்கின்றாயா?' (யோவான் 21:15) என பேதுருவிடம் கேட்டலும் இயேசுவின் மனித இயல்புக்கு மேருகூட்டுகின்றன.

இயேசு இறைவல்லமை மிக்கவர் என்ற உண்மை யூதபடையினரால் இயேசு பிடிபடும் நிகழ்ச்சியில் எதிரொலிக்கின்றது. இயேசு முன் சென்று "யாரைத்தேடி வந்தீர்கள்?" என்று அவர்களை கேட்டார். அவர்கள் 'நசரேத்தூர் இயேசுவை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்ல இயேசு 'நான்தான்' என்றார். 'நான்தான்' என்று அவர் சொன்னதும், அவர்கள் பின்வாங்கித்தரையில் விழுந்தார்கள் (யோவான் 18:4-6). இது இறைவன் முன்னால் மனிதர்கள் தம்மையே மறந்து தாழ்பணிய வேண்டிய அவசியத்தை உணர்த்தி நிற்கிறது. மேலும் தோமஸ் அப்போஸ்தலரின் "என் ஆண்டவரே! என் தேவனே!" அறைகூவல் உயிர்தெழுந்த இயேசுவின் அருட் பிரசன்னத்தில் கிறிஸ்தவனின் பொருத்தமான பதிலைப் பிரதிபலிக்கின்றது.

இயேசுவின் ஆளுமை, போதனை, சாதனை அனைத்தும் இறை அரசை பிரசன்னப்படுத்துகின்றது. இயேசுவின் போதனைப்பகுதியில் மலைப்பொழிவும் விண்ணரசு பற்றிய உவமைகளும் இறையாட்சி மதிப்பீடுகளை முதன்மைப் படுத்துகின்றன. எளிய மனம், துயரம், சாந்த குணம், நீதி, இரக்கம், தூய உள்ளம், சமாதானம், நீதிக்காய் துன்புறுதல் ஆகியன மத்தேயு நற்செய்தியின்படி (மத்தே 5) ஒரு கிறிஸ்தவன் நல்ல கிறிஸ்தவனாய் வாழ்வதற்கான பண்புளை காட்டுவனவாய் அமைகின்றன.

இயேசு, கிறிஸ்து என அழைக்கப்படுகின்றார்: எனெனில் அவர் இறை மகனாக, மெசியாவாக விளங்குகின்றார். கிறிஸ்துவின் வாழ்க்கை இறைவாக்கினரின் வாழ்க்கையைப்போல் அல்லாது சிறப்புமிக்க ஒன்றாக அமைகின்றது. இறைவாக்கினர் பணிக்காக வந்தவர்கள். ஆனால் இயேசுவின் வாழ்க்கையோ பணியாகிறது. இறைதந்தையின் வடிவமாக வார்த்தையான இயேசு விளங்குதல் நித்தியத்திற்கும் வாழுகின்ற தந்தையோடு தொடர்புபடுத்தப்பட்ட நிலையில் இறைவனை வெளிப்படுத்துகின்றார் என்பதேயாகும். இவ்வெளிபடுத்தல் வெறும் சுயநோக்கு நிகழ்ச்சியல்ல, மாறாக மனிதர் மத்தியில் கிறிஸ்து மேற்கொள்ளும் விடுதலைப் பயணமாகும்.

"இந்தப் பேச்சு மிதமின்றிப் போகின்றது" என்று பல சீடர்கள் இயேசுவைப் பிரிந்து சென்றார்கள். அவ்வேளை, "நீங்களும் போய்விட விரும்புகின்றீர்களா?" என்று இயேசு திருத் தூதர்களைக் கேட்டார். அப்போது திருத்தூதர் பேதுரு மறுமொழியாக, "ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன" என்றார் (யோவான் 6:68-69).

"ஆதி முதல் இருந்ததை, நாங்கள் கேட்டதை, பார்த்ததை அறிவிக்கின்றோம், அதை நாங்கள் நோக்கினோம். கையால் தொட்டுணர்ந்தோம். நாங்கள் அறிவிப்பது உயிரின் வார்த்தையைப் பற்றியது. அதனை நாங்கள் கண்டோம். அதற்கு சாட்சியம் பகிர்கின்றோம். தந்தையோடு இருந்தும் நமக்கு வெளிப்படுத்தப் பட்டதுமான வாழ்வு பற்றிய செய்தியை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்!" (1யோவான்1:1-3).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு, தந்தையிடமிருந்து நமக்கு வெளிப்படுத்தப்பட்ட முடிவில்லா வாழ்வு பற்றிய செய்தியே பிரதானமானது. முடிவில்லா வாழ்வு எனபது இயேசுகிறிஸ்து எனும் ஆளையே குறித்து நிற்கிறது. சீடர்களால் தேடப்பட்டு, காணப்பட்டு, அனுபவிக்கப்பட்டு வந்த இயேசுவே நற்செய்தியின் பொருளாகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவைத் தனது வாழ்வாகக் கொள்ள "வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்" (கலா 2:20) என்று புனித பவுல் கூறிய மனப்பான்மையில் இயங்கவேண்டியவனாகின்றான். இயேசுவுக்குள் வாழப் பயிற்றுவிக்கப்பட்டவன் இயேசுவின் மனோபாங்கை தன்னகத்தோ கொண்டு இயேசுவின் அருளால் தன்னை வடிவமைத்துக் கொள்கின்றான். இயேசுவின் இதயபூர்வமான தொடர்பாடலை தன்வயப்படுத்திக் கொள்கின்றான். நாளும் பொழுதம் இறைத்தேனைச் சுவைத்தவனாய் இயேசுவின் பின்னால் முன் நகர்வான்.

இயேசுவுக்குள்ளே வாழ்வதில் இயைபாக்கம் பெற்றவனாய், பேரின்பம் பெற்று, அவன் இன்புறுவான்.

இயேசுவின் இதயத்தைத் தனதாக்கிக் கொண்டு, சீடன் இயேசுவோடு சங்கமமாகின்றான்.

'இயேசுவுக்குள் நான்', 'எனக்குள் இயேசு' என்ற நிலையில் 'இயேசு-மனிதன் உறவு' தொடர்கதையாகின்றது.

எல்லோருக்கும் விடப்பட்ட பொது அழைப்பு இயேசுவாக மாறிட முற்படுவதாகும்.

இயேசுவினது மனப்பான்மையை தமதாக்கிக் கொண்டு வாழ்வதே வாழ்விற்கு அர்த்தம் கொடுக்கின்றது.

*இயேசுவை அறிந்து, அன்புசெய்து, அனுபவித்து வாழ்வோர் அவனியில் அமைதியை அனுபவித்து அகமகிழ்வர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. நான் நானாகவேண்டும்

"பிறக்கும்பொழுது பிச்சைக்காரனாக வந்தாய்,
இறக்கும்பொழுது கடனாளியாகப் போகாதே"

- அப்துல் றகுமான்

அகப் பயணம் இன்று தேவைதானா?
'நான் நானாகவேண்டும்' என்பதை என்னால்
கண்டுணர முடிகின்றதா?
உள்நோக்கிப் பார்த்து வெளிநோக்கிப் பாய்வதற்கு, கீழ்நோக்கிப் பார்த்து மேல் நோக்கி நகர்வதற்கு அகப் பயணம் அவசியமாகத் தேவைப்படுகின்றது.

"உட்தியானம் கடவுளை மாற்றுவதில்லை,
மாறாக, அது நேர்மையாகச் செபிப்பவரை மாற்றுகின்றது"

- கிக்கேகார்ட்.

இறைவனை விருப்போடு சுவைக்கும் நேரமே தியானமாகும்.

வரலாற்றுக்கு வந்திருக்கும் நான் என் வரவைப் பதிவுசெய்யவேண்டாமா?

அர்த்தமுள்ள முறையில் எனது வாழ்வு வாழப்படவேண்டும்.

எனக்குள் என்னைத் தேடல் இயக்கப்பாட்டுச் சக்தியை என்னுள் உருவாக்குகின்றது.

இயக்கப்பாட்டுச் சக்தி 4 படிகளில் இடம்பெறுகின்றது. அவையாவன:

1. மீள் பார்த்தல் - எனது வாழ்வினை மீண்டும் மீண்டும் நேர்நோக்கில் பார்த்தல்
2. மீள் சிந்தித்தல் - எனது மனத்தை நேர் சிந்தனைகளால் நிரப்புதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கண்டுணரல் - என்னை நானாக ஏற்று அனுபவித்தல்
4. நேர்நிலை மாற்றம் - அடிப்படையான முறையில் மாற்றத்தை அனுபவித்தல்.

மாற்றமாக நான் மாறுகின்றேன். 'ஆம்' என்று சொல்லவேண்டிய சந்தர்ப்பங்களுக்கு 'ஆம்' என்று சொல்ல ஆயத்தமாகின்றேன். 'இல்லை' என்று சொல்ல வேண்டிய சந்தர்ப்பங்களுக்கு '.இல்லை' என்று சொல்ல ஆயத்தமாகின்றேன். வாழ்வியல் பாதையை விட்டுப் பரபரப்படைதல், பராக்குப் பார்த்தல், மயக்க நிலையில் தடுமாறுதல் போன்ற போக்குகளிலிருந்து விடுதலை பெறமுயல்கின்றேன்.

சுயசௌகரியங்களுக்காக எனது நிலைவாழ்வைப் பறி கொடுக்காது, போலி இன்பங்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்காது, நேர்த்தியான வாழ்விற்கு வித்திடுகின்றேன். மேலெழுந்தவாரியான மாற்றங்களில் என்னை இழந்திடாது, அடிப்படையான, அர்த்தமுள்ள, ஆழமான மாற்றத்திற்குத் தீனிபோட முனைகின்றேன்.

**வாழ்வியல் ஆய்வின் கூறுகள் ஏழு. அவை பின்வருமாறு:**

**1. சுய ஆய்வு**

நான் யார்? எனது திறன்கள் எவை? எனது ஆற்றல்கள் எவை?
எனது மட்டுப்படுத்தப்பட்ட தன்மைகள் எவை?

நான் நானாக வாழ்வதற்குத் தடையாயிருப்பவற்றைத் தவிர்த்துவிட்டு, துணை யாயிருப்பவற்றைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நிறைகாண் மனோநிலையில் மாற்றத்தை நோக்கி நான் தொடர்ந்து பயணிக்கும்பொழுது தூய்மையாக்கல் இடம்பெறுகின்றது. இறைவன் முன்னிலையிலும் மனிதர் முன்னிலையிலும் எனக்குள் இருக்கும் உண்மைத்தன்மையை பலம்களோடும் பலவீனங்களோடும் அப்பட்டமாக ஏற்றுவாழுதல் எனது இருப்பியல் நிலைக்கு ஆதாரமாகின்றது. வினைத்திறன் மிக்க நேர்நிலை வாழ்வு நேர் சிந்தனையில் வாழும்பொழுது சாத்தியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருஅவை ஆய்வு

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தை ஆரம்பித்தபொழுது திருத் தந்தை 23ம் யோண் 'திருஅவையின் கதவுகளும் யன்னல்களும் திறந்து விடப்படட்டும். அப்பொழுது உள்ளே உள்ள காற்று வெளியே வர, வெளியே உள்ள காற்று உள்ளே வர சமநிலை அரும்பட்டும்' என்று மொழிந்தார்.

திருத்தந்தை 2ம் யோண் பவுல் 1999ம் ஆண்டு, 2000ஆம் ஆண்டை வர வேற்று, "பழையது போகாவிட்டால் புதியது புகமுடியாது" என்று மொழிந்தார். ஆட்டின் மணம் அறிந்து தேடிச் செல்லும் ஆயன்போல் நானும் பிறர் தேவையை அறிந்து உதவி நல்கிட முன்வரவேண்டும்.

## 3. சமூக ஆய்வு

சாதி, செல்வம், மதம், மொழி எனப் பாகுபாடு காட்டி, பேதங்களை வளர்ப்பது சமூக வளர்ச்சிக்கு இடறலாகவே அமையும். மனிதத்தை மதித்து நேசிக்க நான் மகிழ்வோடு முனைவேனாக.

ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தைத் தோற்றுவிக்க எழுச்சிநோக்குடன் வாழ்வேனாக. சமூக மறுமலர்ச்சிக்கு வித்திடும் கருத்தியல் முத்துக்களைப் பிறப்பிக்க ஆர்வம் காட்டுகின்றேன்.

## 4. பிரபஞ்ச ஆய்வு

இறைவனுக்கும் இஸ்ராயேலருக்கும் இடையே இடம்பெற்ற உடன் படிக்கை இறைவனுக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகக் கருதப்படுகின்றது.

புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவினால் மனிதரோடு மேற்கொண்ட புதிய உடன்படிக்கை இரத்தத்தினாலாகிய நிலையான உடன்படிக்கையாக அமைகின்றது. இயற்கையோடு, இறைவனோடு இணைந்து மனிதன் தொடர்பயணத்தை மேற்கொள்ள வேண்டியவனாகின்றான்.

## 5. இதய மாற்றம்

தீமையிலிருந்து நன்மைக்கும் நன்மையிலிருந்து மேலான நன்மைத் தனத்திற்கும் நகருகின்ற தொடர்பயணமே இதயமாற்றமாகும். எதிர்மறைப் போக்கிலிருந்து பக்குவப்பட்ட மனநிலைக்கு, கடுமையான வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிலிருந்து கருணையான

இதய மாற்றத்திற்கு, 'எல்லோரும் பொல்லாதவர்' என்று திட்டிச் சாபம் போடுவதிலிருந்து 'எல்லோரும் நல்லவர்' என ஆசீர்வதிக்கும் நல்ல மனோபாங்கு மாற்றத்திற்கு அசைவுறுவதே இதய மாற்றமாகும்.

### 6. விடையின் பகுதியாதல்

பிரச்சினையின் பகுதியாக இருப்பதை விட்டு, விடையின் பகுதியாக நான் மாறுவதே இன்று தேவையாகும். பிரச்சனையில் குளிர்காய்ந்தது போதும்.

### 7. அருள்நிலை

இலக்குத் தவறி நிற்பதே பாவமாகும். எனது வாழ்வின் வரைவிலக் கணத்தை, நிலைவாழ்விற்கான இறுதி இலக்கை இழந்துவிடாது, இறைவனை ஆதாயமாக்கிக் கொள்வதை இலக்காகக் கொண்டு இயங்குவதே அருள் நிலையாகும். இருள் நீக்கப்பட்ட நிலையில் வாழ்வின் பொருள் கண்டுணரப்படின், அருள் சார்ந்த வாழ்வு சாத்தியமாகும்.

எனவே, என்னை நானாக மாற்றி, என் இதயத்துள் இறைவன், இயற்கை, அயலவர் இயல்பாகச் சங்கமிக்க நான் இயங்குநிலையில் வாழும்பொழுது, எனது உள்ளம் புதுப் பொலிவுற்று பிரகாசிக்கும். பிளவுபட்ட நிலையிலிருந்து விடுபட்டு, அளவுகடந்த அன்போடு, வளமோடு வாழப் பயிற்சி பெறும்பொழுது எனது வாழ்வு இனிதாய் அமையும்.

*எனது இயல்பான அகப் பயணம் என்னை நானாக ஏற்று,*

*எனது உண்மைத்தன்மையை நேர்மையாக உணர்ந்து,*

*எனது பிளவுபடாத் தன்மையை முறியடித்து*

*எளிமையாக வாழும்பொழுது சாத்தியமாகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. வாழ்க்கை வாழ்வதற்கே!

மனித வாழ்வு என்பது தூயநல் வாழ்வாக அமையவேண்டும் என்பதே இறைத் திட்டமாகும். அது மூடப்பட்ட புத்தகமாகவல்ல, திறக்கப்பட்ட அருட் காவியமாக, பல்வேறுபட்ட நிலைகளில் பாதிப்பு அடைந்து வாழ்வோருக்கு பரிவு காட்டும் ஊடகமாக அமைவதே அதன் சிறப்பாகும்.

வாழ்வது என்பது உயிர் பிழைப்பது அல்ல. மாறாக, அது அழகை, அன்பு வார்த்தையில் வடிக்கப்படுவதை, வாழ்வியற் தேர்வை, புது வாழ்வு பிறப்பிப்பதை, வாழ்வியற் கொண்டாட்டத்தை, நேரான வழியில் வாழ்வதற்கான கட்டமைப்பை வெளிப்படுத்துவதாகும். நல்ல நட்பு, வாழுதலுக்கான அன்பு, பிறரை, ஏழைகளை வாழவைக்கவேண்டும் என்ற தாகம், பிறரது வாழ்வியல் உரிமை, மனித மாண்பு போன்றவற்றை வெளிப்படுத்துவதே நிறைந்த மனித வாழ்வாகும்.

இயற்கையில் வெளிவராது புதைந்து கிடக்கும் ஞானத்தை வெளிக்கொணர முற்படுவதே இன்று அவசரமானதும் அவசியமானதுமாகும். இயற்கையைத் தற்சார்பற்றமுறையில் பகுப்பாய்வு செய்யும் விஞ்ஞானம், ஞானத்தை வெளிக்கொணர்வதிலே, மனித வாழ்வை இலகுபடுத்தலிலே, மனித உறவைப் பலப்படுத்தலிலே பெரும் பங்களிக்கின்றது. ஞானத்தின் வலிதான ஆதாரமாக விஞ்ஞான ஆய்வு விளங்குகின்றது. ஏழை-செல்வந்தன் பாகுபாடு, படித்தோன்-பாமரன் வேறுபாடு, இனத்துவேசம், மொழித்துவேசம், மதவெறி, போதைவெறி போன்ற நெருக்கடிகளிலிருந்து மனித வரலாற்றைத் தக்கவைக்க நல்லோர் அனைவரும் ஆர்வத்தோடு ஒன்றிணைந்து வாழ்வியல் இணையத்தை உருவாக்கவேண்டும். வாழ்வியல் வியூகம் அமைத்து, சமூகத் தீமைகளை விரட்டியடிக்கவேண்டும். முடியாது என்பது முட்டாள்தனம், முடியும் என்பதே மூலதனம். உளியைச் சந்திக்காத பாறை சிற்பமாக வாய்ப்பில்லை. திட்டமிட்ட கடின உழைப்பே வாழ்வின் வெற்றிக்குத் தேவை.

**" 1 விழுக்காடு நுண்ணறிவும் 99 விழுக்காடு கடின உழைப்பும் ஒருங்கே கொண்டு வாழ்பவனே மேதையாவான்"** என்று தோமாஸ் அல்வா எடிசன் வர்ணிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறன்மிக்க தொடர்முயற்சியும் பயிற்சியுமே வாழ்வியல் வெற்றிக்கான படிமுறைகள்.
ஆசை மட்டமும் ஆக்கத்திறன் மட்டமும் ஒருங்கிணைந்து நகரும்பொழுது வாழ்வியல் வெற்றிக்கான நிகழ்தகவுண்மை அதிகரிக்கின்றது.

:"மனிதன் முழு மனிதனாக வாழுதலே இறைவனுக்கு
மாட்சிமை அளிக்கின்றது" என்று மொழிந்தார் புனித ஐறேனியஸ்.

**ஞானம் வளர்வதற்கும் மனித சந்ததி தக்கவைக்கப்படுவதற்கும் தேவையான அம்சங்கள் பின்வருமாறு:**

### 1. குழப்பங்களைக் குறைத்தல்

பிரபஞ்சக் குழப்பமும் வேலையின்மையுமே குழப்பத்தின் பிரதானமான கூறுகளாகும். நிரந்தர அழிவிலிருந்து மனித சந்ததியைக் காப்பாற்றுவதற்கு புதிய சிந்தனைகளைத் தோற்றுவிக்க வேண்டும். புதிய வாழ்வியற் திட்டங்களை உருவாக்கவேண்டும். நேர்நோக்கில் நிதானமாகச் சிந்தித்து, எதிர்மறைச் சிந்தனைகளை முறியடித்து, அமைதியை ஆக்கபூர்வமான முறையில் ஊக்கமாகக் கட்டி எழுப்பவேண்டும்.

### 2. விஞ்ஞான விழிப்பூட்டல்

கல்வியிலிருந்து மருத்துவத்திற்கு, மறைசார் ஞானத்திலிருந்து விஞ்ஞானம்சார் அறிவிற்கு, அரசியலிலிருந்து உளவியலுக்குக் கடத்திச் செல்வதற்கு சமூகக் கூறுகள் பயன்படுத்தப்படவேண்டும். மறைசார் ஞானத்திற்கும் விஞ்ஞானம்சார் அறிவிற்கும் இடையே இருக்கக்கூடிய இடைவெளி நிரப்பப்படவேண்டும். பிரபஞ் சத்தை அன்பு செய்தல், பிரபஞ்ச அன்பினை வளர்த்தல், அதில் தெய்வீகத்தைக் காணல் ஆகியவையே இறைவன் மனிதனானதின் சாராம்சமாகும்.

### 3. உலகளாவிய ஒன்றிப்பு

உலகளாவிய ஆன்மீக விழிப்பூட்டலிலிருந்தே உலகளாவிய விழிப்பூட்டல் உதயமாகின்றது. பிரபஞ்ச இறையியலாளர் தெயார்ட் டே சார்டைன் அடிகளாரின் கூற்றுப்படி, எமது மனச்சான்று குடும்பம், நாடு, இனம் போன்ற வட்டங்களுக்கு அப்பால் வளரும்பொழுது, உண்மையான, இயல்பான, மனித ஒன்றிப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையின் ஆவி என்பது கண்டுபிடிக்கப்படும். மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனிதர்கள் மண்ணினால் கட்டப்பட்டு, மண்ணிற்கே திரும்பவேண்டியுள்ளார்கள். மத வேறுபாடுகளைக் கடந்து குவியப்புள்ளியில் ஒன்றுசேர்தல் பிரபஞ்சச் சமநிலையைத் தோற்றுவிக்கும். ஏழைகளிடமிருந்தே ஞானத்தைக் கற்றுக்கொள்ளலாம்.

### 4. படைப்பியல் ஆன்மீகம்

மறைசார் பாரம்பரியங்களில் ஞானம் காணப்படுகின்றது என்றும் யூதம், கிறிஸ்தவம் ஆகிய மறைகளின் பாரம்பரியங்களில் மறக்கப்பட்ட, துன்புற்றுவாழும் ஏழைகளில் ஞானம் ஊற்றெடுக்கின்றது என்றும் இறையியலாளர் ஸ்குமைக்கர் எடுத்தியம்புகிறார். படைப்பியல் ஆன்மீகம் நீதிசார் ஆன்மீகம் ஆகும். தனியாட்கள் ஆற்றல்திறன் மிக்கவர்களாய் இருப்பதால் சாதனையாளர்கள் தோன்றுகின்றார்கள். இறைவனின் சாயல் அவர்களில் உயிர்த்துடிப்புடன் காணப்படுவதால் அவர்கள் தெய்வீகத்தன்மையைச் சுவைத்து இன்புறுகின்றார்கள்.

### 5. பெண்ணின விடுதலை இயக்கங்கள்

நீதிக்கான பெண்ணின விடுதலை இயக்கங்கள் பிரபஞ்சத்தின் முழுமையான அபிவிருத்தியின் பகுதியாகும். மறுமலர்ச்சிக்கான வலுவை மனிதர் கொண்டுள்ளனர் என்ற சுயவிழிப்பூட்டல் வலைப்பின்னலாக இயற்கை விளங்குகின்றது. பிரபஞ்சத்தின் ஒருங்கிணை உணர்வு, அபிவிருத்தி, சமநிலை, நீதி போன்றவற்றின் வளர்ச்சியுறு அடையாளங்களே விடுதலை இயக்கங்கள் ஆகும். தனியாள் மறுமலர்ச்சியையும் மக்களின் விடுதலை யையும் ஆன்மீகவிடுதலை உள்ளடக்குகின்றது.

### 6. நம்பிக்கை

நம்பிக்கையில் நலிவுற்றவர்களே வசதிகளை அல்லது வன்முறைகளைத் தேடுபவர்கள் என்று உளவியலாளர் எறிக் புறொம் கருதுகின்றார். விரைவாக நம்பிக்கை இழக்கும் சமூகக் கட்டமைப்புக்குள் நாம் வாழ்ந்து வருகின்றோமா? அல்லது சுயநம்பிக்கையை, இறை நம்பிக்கையை, இயற்கைமீது நம்பிக் கையை, பிறர்மீது நம்பிக்கையை இழந்து, பலம் குறைந்து காணப்படு கின்றோமா? நன்மதிப்பு பெற்று, நலமுடன், வளமுடன் வாழுதல் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையோடு வாழுகிறோம் என்பதையே உறுதிப்படுத்துகின்றது.

## 7. மறைசார் மறுமலர்ச்சி

தன்னுள்ளே மறுமலர்ச்சியை உள்ளீடாகக் கொண்டுள்ள மறைகளே மறுமலர்ச்சியின் முகவர்களாக விளங்க முடியும். படைப்பினை மையப்படுத்திய ஆன்மீகத்தின் ஒருங்கிணைந்த மீள் கண்டுபிடிப்பு ஆன்மீக வெளிச்சத்திற்கு வித்திடும். அது மனித வாழ்வில் புது வாழ்விற்கான மீள்சக்தியை உருவாக்கு கின்றது. மறைசாட்சிகள், ஞானிகள் உடல்சார்ந்த உலகபோக்கினை வெறுத்து, ஆன்மா சார்ந்த விண்ணக நோக்கினை முதன்மைப்படுத்தி, இறைராட்சியப் பண்புகளை, சமூக விழுமியங்களை வாழ்வாக்கினார்கள். இயேசுவுக்காக, இயேசுக் கிறிஸ்துவின் கொள்கைகளுக்காக இறப்பதில் பேரின்பம் பெற்று, பாருலக மீட்பின் வித்தாகி, பொதுமக்களின் சொத்தானார்கள்.

'கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவம்' தேவைதானா? என்று மகாத்மா காந்தி கேள்வி கேட்டு, எமது சிந்தனையைக் கிளறினார். 'படைப்பில்லாத ஆன்மீகம் வெறும் மாயையாகவே மாறுகின்றது' என்று இறையியலாளர் ஸ்கிலெபெக் வருந்துகின்றார். பிரபல பிரபஞ்ச ஆய்வாளர், டோமினிக்கன் தபசி மத்தியு பொக்ஸ்; 'Original Blessing' நூலில் கூறுகின்றார்: "இயேசு இறைவாக்கின ரைப் போல மக்கள் தம்மைக் குணமாக்கி, பிறரைக் குணமாக்கும்படி கற்பித்தார். புதிய படைப்பின் கருவிகளாகச் செயற்படும்படி, மேலான நற்காரியங்களை ஆற்றும்படி ஆண்டவர் இயேசு அழைக்கிறார்.

எந்த அளவு நற்செய்தி, எந்த அளவு இயேசுவின் கருப்பொருள், ஆள்தன்மை, ஆன்மா, மேற்கத்தைய மறையின் வீழ்ச்சி அல்லது வளர்ச்சிக்காக வீணடிக்கப்பட்டு வருகின்றது. படைப்பின் ஆன்மீகம் தொலைக்கப்பட்டு வருகின்றது என்பது எனது அனுபவங்களிலிருந்தும் நான் கற்பிக்கும் மாணவர்களின் அனுபவப் பகர்வுகளிலிருந்தும் தெளிவாகின்றது. படைப்பினை மையப்படுத்திய ஆன்மீகத்தில் ஒவ்வொரு குருவும்

ஒவ்வொரு பணியாளனும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படவேண்டும். இதற்கான நான்கு பாதைகள்:

1 வது, படைப்போடு நேர்முறையில் நட்புறவு கொள்ளல்

2 வது, இருளோடு எதிர்முறையில் நட்புறவுகொண்டு அதனை நீக்கல்

3 வது, ஒன்றுமில்லாமையிலிருந்தும் இருளிலிருந்தும் விடுபட்டு படைப்பாற்றல் திறனில் வளர்தல்

4 வது, புதிய படைப்போடு மறுமலர்ச்சியடைதலும் நட்புறவாடலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கல்வி சார் மறுமலர்ச்சி

இறுக்கமான, மரத்துப்போன கட்டமைப்புக்களில் படைப்பாற்றல் ஆன்மீகத்தைக் கற்பிப்பது கடினம்.

ஒழுங்கான கோட்பாட்டை மட்டுமன்றி, ஒழுங்கான நடைமுறைப்படுத்தலையும் படைப்பாற்றல் ஆன்மீகம்

எதிர்பார்த்து நிற்கின்றது. தியான அனுபவம், சமூக மாற்றம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு,

இத்தேடல் முயற்சி தொடருகின்றது. எமது கற்பித்தல் முறைகள் படைப்பாற்றல் ஆன்மீகத்தை முதன்மைப்படுத்தி மீள்வடிவம் பெறவேண்டும். மறுமலர்ச்சி யாளர்களாக எமது மாணவர்கள் மாறவேண்டும்.

மனிதத்தை மழுங்கடிக்காது மனிதத்தை மதித்து, நேசிக்கும் மாணவ சமூகம் மலர்வதற்கு வாழ்க்கைச் சூழல் மாற்றியமைக்கப்பட்டு, புதிய சமநிலைச் சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும்.

9. குறைகளிலிருந்து கற்றல்

ஒரு சிறிய கரும்புள்ளியையே சுற்றிச் சுற்றிப் பார்ப்பதே எமது பழக்கமாகிவிட்டது. ஒருமுறை இல்லத்தரிசிப்பின் பொழுது ஒரு முதியவரைச் சந்திக்கநேரிட்டது. அப்பொழுது ஒரு ஐந்தாம் ஆண்டுச் சிறுவன் கடுமையாகப் படித்துக் கொண்டிருப்பதை நான் அவதானித்தேன். முதியவர் இடையே குறுக்கிட்டுப் பேசினார்: "பாதர், இவன் படிக்கவே மாட்டான். மொக்குப் பையன். சரியான குழப்படி" என்று கடுமையாகக் கத்தினார். பதிலாக நான் சொன்னேன்: "அப்பா, இந்தப் பையன் நல்ல பிள்ளை. நான் வந்த நேரம் தொடக்கம் தன்பாட்டில படித்துக் கொண்டேயிருக்கிறான்." "இது என்ர பழக்க தோசம் பாதர். இவன் நல்லாய் படிப்பான்" என்று சிந்தனையைத் திசைதிருப்பினார்.

குறைகாண் மனப்பான்மையை நீக்கி, நிறைகாண் மனப்பான்மையில் வளர்வதற்கு சிறியோர் முதல் பெரியோர்வரை எல்லோரும் முன்வரவேண்டும். அரசினதும் மறையினதும் அடிப்படைவாதம் முற்றாகக் களையப்பட வேண்டும். "நாம் எதிர்பார்க்கும் துன்பங்களின் பாதியளவேனும் சந்திப்பது, முதுகெலும்பற்ற கோழையாகப் பயத்துடன் வாழ்வதைவிட மேல்" என்கிறார் ஞானி கீரோடோறஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இலக்குப் பார்வை

"அளவில் மிகவும் பெரிய வாழ்வியற் பிரச்சனைகள் அடிப்படையில் தீர்க்கப்படமுடியாதவை. அவை ஒருபோதும் தீர்க்கப்படமுடியா. ஆனால் வெற்றி காணப்படலாம். மனச்சான்றிற்கான புதிய நிலையே அவ்வெற்றிக்குத் தேவைப்படுகின்றது. நோயாளியின் அடிவானத்தில் தோற்றம் பெற்ற உயர்வான அல்லது விரிவான ஆர்வம் அவனது அல்லது அவளது பார்வையை விரிய வைத்து, அந்தப் பிரச்சனையின் தீர்க்கமுடியாத் தன்மையை வலுவிழக்கச் செய்தது" என்று உளவியலாளர் காள் யுங் குணப்படுத்தல் திட்டத்தை முன் வைத்தார்.

"மறைசார் பார்வைக்கும் அதன் பரந்துபட்ட வளர்ச்சியின் வரலாற்றிற்கும் அடிப்படை ஆதாரம் நிறைகாண் மனப் பான்மை" என்கிறார் மெய்யியலாளர் வைற்கெட். படைப்பு, மீட்டல், தூய்மையாக்கல் ஆகிய மூன்றும் தொடர்வினைகளாக அமைய, இறைவனில் சங்கமமாகும் பிரபஞ்சத்தின் இலக்கு நோக்கிய பயணம் தொடருகின்றது.

"அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர் கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மை, எஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார் வாய்ச் சொல்" - நாலடியார்.

அதாவது, மற்றவர் கூறும் கடுஞ் சொற்களைக் கேட்டுச் சினமடையாது பொறுத்துக் கொள்ளுங்கள். நல்ல பண்புகளைப் பாராட்டுங்கள். தீயார் நட்பை விட்டொழியுங்கள். நல்லவர் கூறும் அறிவுரைகளை என்றும் கேட்டு நடவுங்கள்.

அறிஞர் பேர்னாட்சா அறிவுரை வழங்குகிறார்:

"வியாதிகள் மற்றும் மனக்குறைகள் நிறைந்த மித மிஞ்சிய சிறு பிண்டமாக உலகம் உங்களை மகிழ்விக்கத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளாது என்று குறை கூறுவதைத் தவிருங்கள். உங்களாலேயே மகத்தான ஒன்று என்று அங்கீகரிக்கப்பட்ட ஒரு காரணத்திற்காகப் பயன்படுத்தப்படுவதுதான் வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சி. இதுவே இயற்கையின் மெய்யான சக்தி. என் வாழ்க்கை இச் சமுதாயம் முழுவதற்கும் சொந்தம். நான் வாழும் வரை என்னால் முடிந்தவற்றை அதற்காகச் செய்வது எனது பிரத்தியேக சலுகை. இறக்கும் பொழுது நான் முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். நான் மேலும் கடினமாக வேலை செய்தால் இன்னும் அதிகமாக வாழுவேன். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை அதன் காரணமாகவே கொண்டாடுகிறேன்.

வாழ்க்கை எனக்கு ஒரு சிறு மெழுகுவர்த்தி அல்ல. அது ஒரு வகையான சிறந்த கைப்பந்தம். அதனை உயரத் தூங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். அதனை எவ்வளவு பிரகாசமாய் எரியச் செய்யமுடியுமோ அப்படியே செய்து, பின்னர் அதனை வருங்காலத் தலைமுறையினருக்குக் கொடுக்க விரும்புகின்றேன்."

- வாழ நினைத்தால் வாழலாம்
- வழிகளா இல்லை பூமியில்
- நேர் வழியே என் வழி
- நீசரோடும் நேசமாவேன்
- மோசமாகப் பேசமாட்டேன்
- பாசத்தோடு வாசம் செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. இறைவனின் வௗப்படுத்தும் வல்லமை

"ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர். பூவுலகம் உம் படைப்புக்களால் நிறைந்துள்ளது.."

- *திருப்பாடல் 104:24.*

"ஒவ்வொரு சிருஸ்டியும் இறைவனின் வார்த்தையாகவும் இறைவனைப் பற்றிய புத்தகமாகவும் இருக்கிறது."

- *மியிஸ்ரர் எக்காா்ட்*

"முழுப் பிரபஞ்சமும் அதிலுள்ள சிருஸ்டிகள் எல்லாமும் வேறென்றும் அல்ல, அது கற்கக் கூடிய, வாழுகின்ற விவிலியமாகவும் இறைவனின் விருப்பத்தை உள்வாங்கக்கூடிய இறைவனைப் பற்றிய விஞ்ஞானமாகவும் இருக்கிறது."

- *செபஸ்ரியான் பிறாங்*

"படைப்புப் பொருள் இருப்பதோடு மட்டுமல்லாமல் உண்மையை வெளிப்படுத்துகிறது. ஓர் ஆளின் இருப்பின் மகிமைக்கு ஞானம் இட்டுச் செல்கின்றது."

- *யெராட் வொன் ராட்*

பிரபஞ்சத்தின் விடுதலை வீச்சு இறைவனை மகிமைப்படுத்தி, மனிதரை மகிழ்விப்பதாகும். பிரபஞ்சக் கடலில் நீந்தக் கற்றுக் கொண்ட மனிதர்கள் இறைஞானம் மிக்கவர்களாய், வாழ்வியற் சிக்கல்களை நிதானத்தோடு எதிர்கொள்பர்களாய் வெளிச்சம் கொடுப்பார்கள்.

"எமது குழந்தைகள் மேதைகளால் எழுதப்பட்ட நூல்களை மட்டுமல்லாமல் குழந்தைகளால் இயல்பாகப் புரிந்துகொள்ளப்படும் பிரபஞ்சத்தின் பெரிய புத்தகத்தை எப்படி வாசிக்கவேண்டும் என்பதையும் அவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும். பெரிய புத்தகத்தை வாசிப்பது சிறுவர்களுக்கு இயல்பானது."

- *தோமாஸ் பெரி*

"எதனையும் அதை உள்ளவாறே எடுக்கும்பொழுது அது பிரபஞ்சத்தில் பன்மடங்காகின்றது. அது வீணாவதில்லை. அது தொடர்ந்து பாவனையாலும் மீள்பாவனையாலும் புதுப்பிக்கப்படுகின்றது."

- *யோண் டுயிர்*

"தெய்வீகத்தின் அடிப்படை வெளிப்பாடாக, அடிப்படை விவிலியமாக, தெய்வீக-மனித ஒன்றிப்பின் அடிப்படை அம்சமாக அமைவதே பிரபஞ்சமாகும்."

- *தோமாஸ் பெரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கு என் விருப்பத்தைச் செயற்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை."

- *எசாயா 55:11*

"ஆண்டவருடைய சொல்லால் அவருடைய செயல்கள் உண்டாகின்றன. ஒளிரும் கதிரவன் அனைத்தையும் காண்கின்றான். ஆண்டவருடைய செயல் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது."

*- சீராக் 42:15-16*

"எல்லாப் பிரபஞ்ச நிகழ்வுகளிலும் மனிதம் இயல்பாகவே பங்கெடுக்கின்றது. அத்தோடு அது அவற்றோடு உள்ளார்ந்தரீதியாகவும் வெளிப்படையிலும் பின்னிப் பிணைந்துள்ளது."

*- றிச்சார்ட் வில்கெம்*

"தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ் வாக்கு கடவுளோடு இருந்தது. அவ் வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்."

- *யோவான் 1:1,14*

ஞானத்தின் பிறப்பு பற்றியும் அதன் மேன்மை பற்றியும் நீதிமொழிகள் 8:22-24 பகுதி பின்வருமாறு விளக்குகின்றது:

"ஆண்டவர் தம் படைப்பின் தொடக்கத்திலேயே, தொல்பழங்காலத்தில்
எதையும் படைக்கும் முன்னரே, என்னைப் படைத்தார்.
தொடக்கத்தில் பூவுலகு உண்டாகும் முன்னே,
முதன்முதல் நானே நிலை நிறுத்தப்பட்டேன்.
கடல்களே இல்லாத காலத்தில் நான் பிறந்தேன்.
பொங்கி வழியும் ஊற்றுக்களும் அப்போது இல்லை."

ஆரம்பகால பிரபஞ்ச ஒழுங்காக, பிரபஞ்சத்தின் படைப்பின் பின்னாலுள்ள மறைபொருளாக விவிலிய வல்லுனர் யெராட் வொன்றாட் ஞானத்தை வர்ணிக்கின்றார். பிரபஞ்சம் முழுவதும் ஞானம் பரவலாகிக் காணப்படுகின்றது. உலக படைப்புக்களிலும் மனிதர் அனைவரிலும் ஞானம் ஊடுருவி ஆட்சி செய்கின்றது. அது மனிதத்தை நோக்கியதாய் மனிதர்களுக்கு உதவி உள்ளது. மனித வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டதாய் ஞானம் மனித வாழ்க்கையோடு தொடர்வுபட்டுக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைப் படைபொருள் தொடர்பாக, மனிதர் தொடர்பாக இறைவார்த்தையின் வல்லமைமிகு ஆற்றலின் வர்ணனையைத் தொடக்கநூலில் விரிவாகக் காண்கின்றோம்.

"தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபொழுது மண்ணுலகில் கடவுளின் ஆவி அசையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது கடவுள் 'ஒளி தோன்றுக' என்றார். அப்பொழுது ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லதெனக் கண்டார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்' என்றார். கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன" (தொடக்க நூல் 1:1-4, 27-31).

கடவுள் படைப்புப் பொருட்களைப் படைத்தபின்னர் அவை நல்லதெனக் கண்டார். ஆனால் மனிதனைப் படைத்தபின்னர் மிகவும் நல்லதெனக் கண்டார். படைப்பின் சிகரமாகிய மனிதனின் நிலை மிகவும் சிறப்பானதாகவே அமைகின்றது. கல்லுக்குள் ஈரத்தையும் இதயத்திற்குள் இரக்கத்தையும் இனிதே படைத்த இறைவன் இயல்பாக மனிதர் இனிது வாழும் முறைமையை நிறைவாக்கு கின்றார். விருப்போடு இறைவனைத் தேடும்பொழுது சுவைப்பது பேரின்பமே!

ஆற்றல்மிக்க, வல்லமைமிக்க இறைவார்த்தையை பயனில்லாதவாறு சிறைப்படுத்தவோ அல்லது செயலில்லாதவாறு வலுவிழக்கவோ செய்யமுடியாது. இறைஞானத்தால் நிரப்பப்படுவதே எமது இறை தாகமாகும். உருவாக்கும் குணமாக்கும் இயங்குதிறனை உள்வாக்குவது இன்று அவசியமாகும். இறைவார்த்தை எம்மோடு சங்கமமாவதே சந்தோசமானது. வாழ்வித்து வாழ்வதற்கான, மகிழ்வித்து மகிழ்வதற்கான புது வலு இயேசுவிடமிருந்து எமக்குப் பரிசாகக் கிடைக்கின்றது. வாழ்வு தரும் வாக்கு கடவுளோடு இருந்து, கடவுளாய் இருந்து எம்மை வாழ்விக்கும் விருந்தாக, குணமாக்கும் மருந்தாக எம்மை நிறைவாக்குகின்றது.

"தொடக்கத்தில் வாக்கு இருந்தது.
அவ்வாக்கு கடவுளோடு இருந்தது.
அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது.
அனைத்தும் அவரால் உண்டாயின.
அவரிடம் வாழ்வு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாயிருந்தது.
அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள்
அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை.
அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை
ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் கடவுளின்
பிள்ளைகளாகும் உரிமையை அளித்தார்.
அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான
ஒளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது.
ஒளியான அவர் உலகில் இருந்தார்.
வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்.
அவரது மாட்சியை நாங்கள் கண்டோம்.
அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர்
தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில்
இம்மாட்சியைப் பெற்றிருந்தார்"

*(யோவான் 1:1-5,9,10,12,14)*

சூழமைவோடு இயைபுற்று வாழும் ஆன்மீக மனிதன் உணர்திறன்மிக்கவனாய் இறைவனோடும் இயற்கையோடும் சக மனிதரோடும் சகல உயிரிகளோடும் இரண்டறக் கலந்து, நல்லுறவு கொண்டு வாழ்வான். இறைசக்தியை, பிரபஞ்சத்தை, பிறரை மையப்படுத்திய அணுகுமுறையை வாழ்வாக்கி, வாழ்விற்கு பொருத்தமான அர்த்தத்தைக் காட்டும் வகையில் வாழ்ந்து காட்டுவான்.

வாழ்வியல் வெளிச்சத்தை அனைவருக்கும் பாரபட்சமின்றி வாரி வழங்கும் வள்ளல்தன்மையை வெளிக்காட்டி, இன்புற்று, இரட்சிப்பின் கருவியாக இயங்கிடுவான். இறைவார்த்தையை வாழ்வாக்கி வாழ்பவன் பிடிவாத போக்கின்றி, அடிமைத்துவ நூலிழைகளை அறுத்து எறிவதில் ஆற்றலுடையவனாய், அனைவரையும் அரவணைத்துவாழும் நெகிழ்வுத் தன்மையுடன் மகிழ்வுற்றுக் காணப்படுவான்.

பிரபஞ்சம் முழுவதும் உயர்வு நோக்கிய மாற்றத்தை எதிர்வு கொண்டு, வீறநடைபோடுவது மனித வரலாற்றின் எதிர்பார்ப்பாகும்.

**நேற்று – இன்று – நாளை என்ற தொடர்வினை
ஆற்றல் மிக்க தொடர்கதையாகட்டும்!
பொய்மை, போலி எல்லாம் காலி ஆக நீதி, நேர்மை யாவும்
வேலியாகட்டும்! அவன் – அவள் – அது எனும் படர்க்கை நிலை நீங்க,
நாம் என்ற நன்நிலையே நியமாகட்டும்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. படைப்பு ஆசீர்வாதமாகட்டும்!

"கடவுள் நல்லவர். அவரிடமிருந்து வரும் அனைத்தும் நல்லவை"

*- பின்யென் கில்டெகார்ட்.*

"சடம் சார்ந்ததும் ஆன்மீகம் சார்ந்ததுமே ஆசீர்வாதமாகும். முதலில் ஆசீர்வாதம் வாழ்விற்கானது. சுகத்திற்கானது. மனிதர், கால்நடை, வயல்கள் பலுகிப் பெருகுவதற்கானது."

*- சிக்மன்ட் மொவின்கல்*

"எம்மைப் பற்றியது எல்லாம் அழகே! அதைப் பற்றிப் பலர் குருடாயுள்ளார்கள். வாழ்வின் எளிமை பற்றி, இயல்பு பற்றி, அமைதி பற்றி மக்கள் கவனம் எடுப்பதில்லை."

*- பப்லோ காசால்ஸ்*

"வானகமும் வையகமும் எல்லாப் படைப்புக்களுமே மகத்தானவை, அழகானவை, நல்லவை. எல்லாப் படைப்புக்களும் இறைவனின் நன்மைத் தனத்தால் நிரம்பியவை. கடவுள் நன்மைத்தனமானவர். நன்மைத்தன மானவை எல்லாம் கடவுளே!"

*- நோர்விக் யூலியன்*

படைப்பாற்றல் சக்தி எப்பொழுதும் உயிரூட்டமுள்ள முறையில் படைத்த வண்ணமே உள்ளது. அது ஆசீர்வாதமாகத் தொடர்ந்து ஊற்றெடுத்த வண்ணம் உள்ளது. படைப்பிற்கும் ஆசீவாதத்திற்கும் முற்றுப் புள்ளி இல்லை. பெற்றோர் தம் பிள்ளைகளை அன்பு செய்வதுபோல் கடவுள் தாம் படைத்த அனைத்தையும் நிபந்தனையின்றி அன்பு செய்தவண்ணமே உள்ளார்.

"ஆண்டவருடைய செயல்கள் அனைத்தும் எத்துணை விரும்பத்தக்கவை! பார்ப்பதற்கு எத்துணை பளபளப்பானவை! இவையெல்லாம் உயிரோடி ருக்கின்றன. எல்லாத் தேவைகளுக்காகவும் நிலைத்திருக்கின்றன் எல்லாம் அடிபணிகின்றன" (சீராக். 42:22,23,25).

ஆசீர்வாதம் உறவு சார்ந்தது. ஆசீர்வதிக்கும் நல்லவர் தன்னிடம் சிறப்பாகக் காணப்படும் ஒன்றைக் கொடுத்தே மகிழுவார். உறவுப் பரிமாற்றம் சீராய் இங்கு இடம்பெறும். அணுவிலிருந்து அணுவிற்கும் மூலக்கூறிலிருந்து மூலக்கூறிற்கும் உயிரியிலிருந்து உயிரிக்கும் மண்ணிலிருந்து செடிகளிற்கும் செடிகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகளுக்கும் விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கும் ஆசீர்வாதம் தொடர்கதையாகத் தொடருகின்றது. இரட்சணிய வரலாறு ஆசீர்வாதத்தின் வரலாறாகவே விளங்குகின்றது. உடன்படிக்கையின் ஆண்டவர் ஆசீர்வாதத்தின் ஆண்டவராவார். நன்மைத்தனங்களை, நல்ல நிலங்களை, நலம்மிக்க பிள்ளைகளை, முழுமையான வாழ்வினை ஆண்டவர் ஆசீர்வாதமாகப் பொழிந்தார். இந்த அளப்பரிய ஆசீர்வாதங்களுக்கு இஸ்ராயேலர் நன்றி நவின்றார்கள்.

"உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களை வளமிகு நாட்டிற்கு அழைத்துச் செல்கிறார். அந்த நாடு பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலும் பாய்கின்ற ஆறு களையும் ஊற்றுக்களையும் ஏரிகளையும் கொண்டது. அந்த நாட்டில் பஞ்சமின்றி நீங்கள் அப்பம் உண்பீர்கள். நீங்கள் உண்டு நிறைவு கொள்வீர்கள். அப்போது வளமிகு நாட்டை உங்களுக்குக் கொடுத்தற்காக கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவீர்கள்"(இணைச்சட்ட நூல் 8:7-10).

ஆசீர்வாதம் என்பது யாவே ஆண்டவர் மூலமாக எகிப்திய அடிமைத் துவத்திலிருந்து உண்மையான விடுதலையை அனுபவித்த இஸ்ராயேல் மக்களுக்கு வெறும் வெற்று நிகழ்வு அல்ல, மாறாக அவர்கள் இணைந்து வாழ்வதால் வரும் வாழ்வியற் பெறுமதி.

விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாம் இறைவனால் நிறைவாக ஆசீர்வதிக்கப்பட்டார். ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, "உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருமிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயோ ஆசியாக விளங்குவாய். உனக்கு ஆசி கூறுவோருக்கு நான் ஆசி வழங்குவேன். உன் வழியாக மக்கள் இனங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என்றார் - (தொடக்க நூல் 12:1-3).

"ஆண்டவரின் மாட்சி என்றென்றும் நிலைத்திருப்பதாக. அவர் தம் செயல்களைக் குறித்து மகிழ்வாராக. நான் வாழும் நாளெல்லாம் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன். என் உயிர் உள்ள வரையும் என் கடவுளுக்குப் புகழ் சாற்றிடுவேன்." "மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பிவரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் திரும்பிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதில்லை. அவ்வாறே என்வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தை செயற்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை" (எசாயா 55:10-11).

பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட பெண்ணாக அன்னை மரியா எலிசபேத்தால் போற்றிப் புகழப்பட்டார். "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உன் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவைகையால் துள்ளிற்று. ஆண்டவர் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்று எலிசபேத் சொன்னார்.

(லூக்கா 1:43-45).

நாளாந்தம் நல்வாழ்த்துக்கள் கூறி ஆளை ஆள் வரவேற்பது மகிழ்வுக்குரிய விடயமாகும். நாம் விரும்பியோருக்கு மட்டும் ஆசி கூறாமல், பாரபட்சம் பாராது, எல்லோருக்கும் நல்லாசி அருளுவது மேன்மைக்குரியவர்களின் இயல்பாகும்.

"இன்னா செய்தாருக்கும் நன்னயம் செய்து நாணிடச் செயல்" என்று திருவள்ளுவர் சொல்வது எமக்கு எதிராகக் குற்றம் செய்வோர் நாணும்படி அவர்களுக்கு நன்மை செய்துகொண்டு இருப்பதாகும்.

"ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு" என்று இயேசு சொல்வது, தின்மைக்குத் தின்மை, வாளுக்கு வாள் என்ற போக்கிலிருந்து விடுபட்டு எல்லோருக்கும் இன்முகம் காட்ட வேண்டும் என்பதாகும். மனிதர் அனைவருக்கும் பேரன்பைக் காட்டும் பரம்பொருள் பெயரால் புவியில் வாழும் எல்லோருக்கும் நன்மைகள் செய்து, நற்செய்தி சொல்லி, இயேசுவின் பெயரால் ஆசிர் வழங்கிடுவோம்.

- நன்மைகள் செய்து, நானிலம் காப்போம்
- நற்செய்தி சொல்லி, ஆசிர் வழங்கிடுவோம்
- நிபந்தனையில்லா அன்பு நீடிக்க இடம்கொடுப்போம்
- இல்லமதைக் கோவிலாக்கி இனிதே வாழ்ந்திடுவோம்
- உள்ளத்தில் இடம்கொடுத்து உறவுப் பாலம் அமைப்போம்
- ஊக்கமதைக் கைவிடாது உத்தமராய் உயர்ந்திடுவோம்
- எண்ணத்தால் உயர்வடைந்து ஏற்றம்மிகு சூழலைப் படைத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. தரணி தரும் தாழ்மையும் எளிமையும்

"தூய மனிதர்கள் தரணி தரும் அனைத்தையும் தமக்கென்றே எடுத்துக் கொள்கிறார்கள். அதேவேளை புவி தாயாகின்றாள். இயல்பானவை எல்லாவற்றினதும் தாய் அவளே. மனிதர் எல்லோரினதும் தாய் அவளே. அனைத்து விதைகளையும் தாங்கிய எல்லாவற்றினதும் எல்லோரினதும் தாய் அவளே" என்கிறார் பின்ஞுன் கில்டேகிறாட்.

"சகோதரி புவி மூலமாக எல்லாப் புகழும் உமக்கே என் ஆண்டவரே! அவரே என் தாயார். அவர் தமது ஆட்சியில் எமக்கு உணவூட்டுகிறார். பலவிதமான பழங்களையும் நிறமூட்டப்பட்ட பூக்களையும் மூலிகைகளையும் அவர் விளைவிக்கிறார்" என்று அசிசி நகர் புனித பிரான்சிஸ் பிரபஞ்ச உறவை வலுப்படுத்துகிறார்.

"எமது உணர்வு இயற்கையில் புதைக்கப்பட்டுள்ளது. எமது பரிவில், எமது அருளில், எமது உணர்வில் இறைவனே உள்ளார். எமது உட்பொருளை, எமது உணர்வை ஒருபோதும் பிரிக்காது இணைத்து வைப்பவர் இறைவனே!" என்று நோர்விக்கின் யூலியன் பிரபஞ்ச உணர்வலைகளில் எம்மை மிதக்க வைக்கிறார்.

"உடலைக் கீழ் மதிப்பீடு செய்யாதீர்கள். ஆன்மாவை உயர்வாக எடைபோடா தீர்கள். உடலை இவ்வாறு மதிப்பிடுவது பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றோடும் முரண்படுவதாகும்" - வென்டல் பெரி.

"பிரபஞ்சம் மக்களுக்கு உரியது அல்ல. மக்களே பிரபஞ்சத்திற்கு உரியவர்கள். படைத்த பரம்பொருளிற்குப் பிரபஞ்சம் பெறுமதி வாய்ந்தது. பிரபஞ்சத்தைக் காயப்படுத்துவது படைத்தவரை நொந்துகொள்வதாகும்" என்று சீவ் சீற்றில் எமது சிந்தனைகளைச் சீராக்குகின்றார்.

அடிமைப்படுத்தல், அழுவைத்தல், இம்சித்தல், இழிவுபடுத்தல், முரட்டுத்தனம், பழிவாங்கும்தன்மை போன்றவற்றிற்கு எதிரானதே தாழ்மையாகும். இது எளிமையை ஏற்று, ஆடம்பர நுகர்வினைத் தவிர்க்கின்றது. மனம் ஒரு பளிங்கு மாளிகையாகத் துலங்கும்பொழுது தாழ்மை மேலோங்கிக் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்வு தெளிவானதும் கலங்கலானதுமான ஊற்றுக்களிலிருந்தே அரும்புகின்றது. அதிகப்படியான நுண்தூய்மை தேடல் வாழ்வியற்சாரத்தை தேய்விற்கு உள்ளாக்குகின்றது. வாழ்வின் ஒவ்வொரு புதுப்பித்தலிற்கும் தெளிவான தன்மையும் கலங்கலான தன்மையும் தேவைப்படுகின்றது. இது மெயிஸதொடர்ரா் எகாட்டால் ஆதாரபூர்வமாக உணரப்பட்டது"

*-உளவியலாளர் காள் யுங்.*

மனிதத்தின் புவிசார்தன்மையும் இறைசார் தன்மையும் ஒன்றொடொன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. மனித புவிசாரத்தை மதித்தல் இறைத்தன்மையோடு இணைந்து நிற்றலேயாகும்.

"இறைவனை மதிப்பதற்கும் இறை புகழ் பாடுவதற்கும் மனிதம் தேவைப்படுகின்றது. எல்லா சந்தர்ப்பங்களிலும் இந்த உடல் புவியினால் ஆதாரப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு புவி கடவுளின் வல்லமையை மகிமைப்படுத்துகின்றது" என்கிறார் கில்டேகார்ட்.

ஓர் ஆசிரியை அதிபரது அறைக்குக் கோபத்துடன் வந்து, "இம்முறையும் எனக்கு முதலாம் ஆண்டைத் தந்துவிட்டீர்களே. அந்தப் பிள்ளைகள் சரியான கரைச்சல். எந்த நேரமும் என்ர சீலையைப் பிடித்தபடி."

அதிபர் சிரித்தபடி, "தெரியும். உங்களில அந்தப் பிள்ளையள் தங்கட அம்மாவைப் பார்க்கினம். அதுதான் உங்கட சீலையைப் பிடிக்கினம். தெரிஞ்சுதான் போட்டனான். உங்களைப் போல யாரும் அவ்விதம் செய்ய முடியாது." ஆசிரியை அமைதியாகத் தனது வகுப்பறைக்குச் சென்றார்.

குழந்தையுள்ளம் கொண்டோராய் நாம் வாழ முற்படும்பொழுது, எம்மில் எளிமை, பொறுமை, கனிவு, இனிமை போன்ற நற்பண்புகள் இயல்பாக எழும். அகங்காரம், ஆணவம், அகந்தை, பெருமை, பொறாமை போன்ற குறைபாடுகள் இல்லாமற் போகும். மண்ணும் விண்ணும் சேர, மனிதமும் புனிதமும் இணைய மனிதரிலே இயேசுவைக் காணபது சாத்தியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியில் அகமகிழ்வோம்
அல்லல்படுவோருக்கு ஆறுதல் அளிப்போம்
அகங்காரத்தை அடக்கி வாசிப்போம்.
ஆனந்தம் பொங்கிட அழகுடன் வாழ்வோம்
இருளினை நீக்கி இதயமதில் ஒளியேற்றுவோம்
உருவாக்கப் பாதையில் உவப்போடு பயணிப்போம்
ஊழல்களை உருக்குலைத்து உண்மையை வடிவமைப்போம்
எளிமையினை அணிகலனாக்குவோம்
ஏமாந்து வாழுவோர் திருந்தி வாழ வழி சமைப்போம்.

இதயமதை இறையில்லம் ஆக்குங்கள்.

உலகமதை ஆதாயமாக்குவதை நிறுத்துங்கள்.

ஊரெங்கும் இறையரசைப் பறைசாற்றுங்கள்.

எல்லையில்லாப் பரிவினைப் பதிவுசெய்யுங்கள்.

ஏழையரின் ஏற்றத்திற்காய் உழையுங்கள்.

ஐயமின்றி அனைவரையும் நண்பராக்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. வெறுமையாக்கி நிறைவாதல்

"ஒன்றுமில்லாமையை அன்பு செய்யுங்கள்,
சுயத்திலிருந்து விடுபடுங்கள், தனித்து நில்லுங்கள்,
எவரிலும் தங்கியிராதீர்கள், அமைதியாய் இருங்கள்,
எல்லாக் கட்டுக்களிலிருந்தும் விடுதலையாகுங்கள்,
கட்டுப்பட்டோரை விடுவியுங்கள்,
துன்பநீரைப் பருகும்பொழுது அன்புச் சுவாலையால் பற்றி எரிவீர்கள்,
பாலைவனத்தில் வாழும் முறை இதுவே"
என்று வழிகாட்டுகிறார் மக்டேபேர்க்கின் மீசைல்ட்.

பாலைவனத்து அனுபவம் வெறுமையிலிருந்து நிறைவடைதலையே சுட்டுகின்றது. வாழ்வியற் கலையில் நீந்துவதற்கு வெறுமையாக்கல் துணை புரிகின்றது. பாலை நிலத்தில் பயணிக்க முன்வருதல் எம்மைச் சில கணங்கள் விட்டுவிட்டு. சமாதி நிலையில் சஞ்சலமின்றி இருப்பதாகும். பாலைநிலத்தில் எம் எண்ணங்களைப் பசுமையாக்கி, அகவிடுதலையை நோக்கி நகருகிறோம். ஒன்றுமில்லாமையில் இருந்து பிறந்த நாம் மீண்டும் கருவாகி உருவான இடத்திற்கே திரும்புகிறோம். உள்ளன்போடு ஒன்றும் இல்லாமையை நேசிக்க ஆரம்பிக்கிறோம்.

"எல்லாவற்றிலும் திருப்தி அடைய ஒன்றுமில்லாமையில் ஆசைப்படுங்கள். எல்லாவற்றையும் பெறுவதற்கு ஒன்றுமில்லாமையைப் பெற ஆசைப்படுங்கள். எல்லாமாக இருப்பதை வந்தடைவதற்கு ஒன்றுமில்லாமலிருக்க ஆசைப் படுங்கள். எல்லாவற்றினதும் அறிவை வந்தடைய ஒன்றுமில்லாமையின் அறிவின்மீது ஆசை கொள்ளுங்கள்" என்று சிலுவை யோவான் தூண்டுகிறார்.

"உண்மைச் சமுத்திரத்தின் அடியில் நீந்தவேண்டும் என்றால் நீங்கள் பூச்சியநிலைக்கு உங்களைத் தாழ்த்துங்கள்" என்று மகாத்மா காந்தி மொழிகிறார்.

ஒருவர் தன்னை வெறுமையாக்கக் கற்றுக் கொள்ளும்பொழுது ஒன்று மில்லாமையை எதிர்கொள்கின்றார். ஒன்றுமில்லாமையின் அனுபவங்கள் அதிச்சிமிக்கவையாகவும் ஆழமானவையாகவும் உள.

வாழ்வின் இரகசியம் தன்னலமற்ற பணியேயாகும். பற்றற்ற நிலையில் வாழுதலே எமது உயர் இலட்சியமாகும். துன்பத்தில் இன்பம் காணுதல் இயற்கையோடு, இறைவனோடு இணைந்து வாழுதலின் பயனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 ம் ஆண்டு ஆடி மாதம் 7ம் திகதி நான் இதய அறுவைச் சிகிச்சை பெற்ற நாள். அது எனது வாழ்வின் உச்சமான துன்ப நிகழ்வு. அக் கணத்தில் நான் பேரின்பம் பெற்ற நினைவு. நான் ஆறுதல் அடைந்தேன், இயேசுவின் பெரும் பாடுகளில் சிறு பங்களிப்பு பெறும் வாய்ப்பு கிடைத்தது என்பதாகும்.

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதற் திருமுகத்தில் சிலுவை வழி வரும் இன்பத்தைச் சிறப்பாகக் கூறுகிறார்:

"சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றிப் பறைசாற்றுகிறோம். அச்சிலுவை யூதருக்குத் தடைக்கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருக்கிறது. ஆனால் அழைக்கப்பட்டவர்கள் யூதரானாலும் கிரேக்கரானாலும் அவர்களுக்குக் கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார். ஏனெனில், மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானமிக்கது. மனித வலிமையைவிட அவருடைய வலுவின்மை வலிமைமிக்கது" *(1கொரிந்தியர் 1:23-25).*

"என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்?" எனச் சிலுவையில் கடைசிக் கட்டத்தில் இயேசு ஏக்கத்தோடு கதறி அழுவது வெறுமை யாக்கலின் உச்சக் கட்டமாகும்.

"கிறிஸ்து இயேசு கொண்ட மனநிலையே உங்களிலும் இருக்கட்டும். கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவம் ஏற்று மனிதருக்கு ஒப்பா னார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவிற்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்" *(பிலிப்பியர் 2:5-8).*

இயேசு சிலுவை மரணத்தைத் தெரிந்துகொண்டு, விருப்பத்தோடு, துணிச்சலுடன் ஏற்றுக்கொண்டார். அவர் சாவை எதிர்கொள்ளத் தயங்க வில்லை. "தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவார். என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார்" *(மாற்கு 8:35).*



oundation.
am.org

என்று இயேசு வித்தியாசமாகச் சிந்தித்து, வியப்புறும் வகையில் செயற்பட்டார். முழுமையாக வாழுதலுக்கு ஒரே ஒரு வழி அதை இழந்துவிடலே என்பதை இயேசு புரிந்துகொண்டார். அந்த வகையில் அடிப்படையான சமூக மாற்றத்திற்கு வித்திட்டு விருட்சமானார்.

இயற்கை எழில் கொஞ்சும் மரங்கள் உள்ள சூழலில் அமைந்த பாடசாலையில், ஓர் ஆசிரியர் தம் மாணவர்களைப் பார்த்துக் கேட்டார்:
"பிள்ளைகளே, எமது மதிய உணவு ரொட்டித் துண்டுகளை
எப்படிச் சாப்பிடும்பொழுது அதிக சுவையாக இருக்கும்?"
"சேர், ஜாம் பூசிச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்."
"சேர், பட்டர் பூசிச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்."
"சேர், பகிர்ந்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்" என்று ஒரு மாணவன் பதிலளித்தான். அந்த மாணவன்தான் அப்துல் கலாம்.

இயேசு மண்ணின் மாட்சிக்காக, மனுக்குலத்தின் மீட்சிக்காக, தனது உயிரை உள்ளன்போடு தாரைவார்த்துக் கொடுத்தார். அவரது தற்சார்பற்ற கையளித்தல் தரணிவாழ் மக்களுக்கு நிலைவாழ்வு நிகழ்வாகவே அமைந்தது. மறுமலர்ச்சிச் சமுதாயத்தின் திருப்புமுனையாகும்.

"Bring out the Magic in your Mind" எனும் நூலில், அல் கொரான் எழுதினார்: "நீங்கள் பணத்தைக் கொடுத்து அனுப்பும்பொழுது அதனை ஆசீர்வதிக்க மறவாதீர். அது சென்றடையும் அனைவரையும் ஆசீர்வதிக்கும்படி அதனைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

பசியோடு இருப்பவருக்கு உணவளித்தும் உடையில்லாதோருக்கு உடையளித்தும் செயற்படும்படி கட்டளையிடுங்கள்.

*வெறுமையாக்கி நிறைவாகுங்கள்!*

*வேதனை நீக்கி சாதனை செய்யுங்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tion.
g

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

oundation.
am.org



9 789557 143422

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna. 021 222 2378

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org